ISSN-0971-8362

# திட்டம்

மே – 2022 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹22

## சமூகப் பாதுகாப்பு

**மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல்**
வீரேந்திர குமார்

**ஒருங்கிணைந்த முழுமையான சுகாதாரச் சேவை**
வைத்யா ராஜேஷ் கொடேச்சா

**குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்தல்**
சமீரா சௌரப்

**தமிழகத்தில் சத்துணவுத் திட்டம்**
எஸ். ரேவதி

**வ.உ.சி.யின் பொருளாதார தேசியம்**
ஆ. சிவசுப்பிரமணியன்



# மழைநீரைச் சேகரிப்போம்



இந்தியாவில் பருவ மழை தொடங்குவதற்கு முன்பாகவே ஒவ்வொரு பகுதியின் தட்பவெப்ப நிலை, மண் வகை ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு மாநிலங்களையும், பிற பங்குதாரர்களையும் ஊக்குவிக்கும் வகையில், "எங்கு பெய்கிறதோ, எப்போது பெய்கிறதோ அப்போது அங்கு மழைநீரைச் சேகரித்திடு" என்ற மந்திரச் சொல்லுடன் மழை நீரைச் சேகரிப்போம் என்ற பிரச்சாரத்தை தேசிய நீர் இயக்கம் தொடங்கியது.

தடுப்பணைகளைக் கட்டுதல், நீர் சேகரிப்புக் குழிகளை அமைத்தல், மேற்கூரைகளின் மீது மழைநீர் சேமிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல், நீர் நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்குடன் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தூர் வாருதல், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து நீர் நிலைகளுக்கு தண்ணீரைக் கொண்டு வரும் கால்வாய்களின் குறுக்கே உள்ள தடைகளை அகற்றுதல், கிணறுகளைச் சரிசெய்தல், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக பயன்படாதிருக்கும் ஆழ்துளைக் கிணறுகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் உள்ளிட்ட பணிகள் இந்தப் பிரச்சார இயக்கத்தின் மூலம் பொதுமக்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட உள்ளன.




இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு வகை செய்யும் விதத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் / மாநகராட்சி அலுவலகங்கள் அல்லது கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்தப் பிரச்சார இயக்கக் காலத்தில் மழைநீர் சேகரிப்பு மையங்களை ஒரு கைபேசி எண் மூலம் தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்படும். ஒரு பொறியாளர் அல்லது மழைநீர் சேமிப்புக் கட்டமைப்பை உருவாக்குவதில் வல்லமை பெற்ற பணியாளரைக் கொண்டு ஒவ்வொரு மையத்தையும் கையாள்வதற்கும் வகை செய்யப்படும். மழை எங்கு பெய்தாலும், எப்போது பெய்தாலும் அதைப் பிடித்து சேமிப்பது எப்படி? என்பது குறித்து மாவட்டங்களில் உள்ள அனைவருக்கும் இந்த மழைநீர் சேகரிப்பு மையம் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கும்.

வீடுகளில் ஒட்டுமொத்த தண்ணீர்ப் பயன்பாட்டை குறைக்கும் வகையில், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தோ, மறுபயன்பாட்டின் மூலமாகவோ பல்வேறு தேவைகளுக்கு பின்வரும் வழிகளில் பயன்படுத்த முடியும்.

1. பயன்படுத்தியது போக மீதமுள்ள தண்ணீர் அல்லது ஐஸ் கட்டிகளை தனியாகச் சேகரிப்பதன் மூலம், மேசையின் மேற்பரப்பையும், பிற பகுதிகளையும் சுத்தம் செய்வதற்கு அதனைப் பயன்படுத்தலாம்.
2. காய்கறிகள், பழங்கள், உணவு தானியங்கள் ஆகியவற்றைக் கழுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தண்ணீரை தாவரங்களுக்கு ஊற்றவும், வீட்டைக் கழுவவும் பயன்படுத்தலாம்.

தொடர்ச்சி 55ஆம் பக்கம்




# திட்டம்

மாத இதழ்

மலர் 53
இதழ் 05

மே 2022
வைசாக – ஜெய்ஸ்த 1944
பிலவ – சுபகிருது வருடம் சித்திரை – வைகாசி

முதுநிலை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**
துணை இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர், சென்னை -600 090
தொலைபேசி : 044 24465382, 044 24917673.
மின்னஞ்சல்: editorthittam@gmail.com
bmsechennai@gmail.com


| | |
|---|---|
| மழை நீரைச் சேகரிப்போம் | 02 |
| தலையங்கம் | 04 |
| எமது வெளியீடு பாரதிய விஞ்ஞான் மஞ்சுஷா | 05 |
| மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல் - வீரேந்திர குமார் | 06 |
| நீடித்தப் பொருளாதார வளர்ச்சி - அவினாஷ் மிஷ்ரா - மதுவந்தி தத்தா | 12 |
| விவசாயிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் - ஜகதீப் சக்சேனா | 18 |
| ஒருங்கிணைந்த முழுமையான சுகாதாரச் சேவை - வைத்யா ராஜேஷ் கொடேச்சா | 23 |
| வ.உ.சி.யின் பொருளாதார தேசியம் - ஆ. சிவசுப்பிரமணியன் | 27 |
| குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்தல் - சமீரா சௌரப் | 33 |
| விளையாட்டு - கவர்ச்சிகரமான ஒரு துறை - ராஜேஷ் ராய் | 39 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான திட்டங்கள் | 43 |
| தமிழகத்தில் சத்துணவுத் திட்டம் - எஸ். ரேவதி | 48 |
| எமது வெளியீடுகள் | 54 |


Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

## தலையங்கம்

# திட்டம்

## பாதுகாப்பு வலை

சமுதாயம் என்பது ஓர் ஒட்டு மொத்தக் கலவை, எல்லோரையும் உள்ளடக்காமல் அது உயராது. வளரும் சமுதாயத்தில் வளங்கள் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். விளிம்பு நிலையில் உள்ளவர்களைக் கை தூக்கி விட வேண்டும். ஒரு சமுதாயத்தில் மக்களும், தனி நபர்களும் எப்படிச் செயல்படுகிறார்கள், நிலைமைகளை எப்படி எதிர்கொள்கிறார்கள், அவ்வகையான சூழ்நிலைகளை எதிர்கொள்ள எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இதற்கான அடையாளமாகப் பார்க்கலாம். இவையனைத்தையும் நாம் உன்னிப்பாகக் கவனிக்கும் போது, ஒரு சமுதாயம் சுயசார்பு மற்றும் நீடித்து நிலைக்கும் தன்மைகளில் எந்த நிலையில் உள்ளது என்பதை உணரலாம்.

இந்த வகையில் ஒரு அரசின் செயல்பாடு மிகவும் முக்கியமானதாகும். செயல்பாட்டு அமைப்புகளிலுள்ள இடைவெளிகளையும், கசிவுகளையும் அது தடுக்கிறது. இதற்கு, சமயோசிதத் தலையீடுகளும், கொள்கை வடிவமைப்புகளும் மிகவும் அவசியம். ஒவ்வொரு துறையிலும், பகுதியிலும் இதனைச் செய்து யாவரும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதில் உள்ளடக்கமாக மக்களின் மருத்துவ சிகிச்சை, வயோதிக கால வாழ்க்கை, வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றைத் தவிர்க்கும் பாதுகாப்பு வலை ஆகியவை அவசியம். இது அல்லாமல், விளிம்பு நிலையிலும் மிகவும் நலிந்த நிலையிலும் வாழும் மக்களுக்கு துணையாக நிற்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு வலை மிகவும் அவசியம் என்பது அண்மையில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் உணரப்பட்டது. பொதுமுடக்கங்கள், நோய்கள், வேலையின்மை மற்றும் மிகக்குறைந்த வருமானம் ஆகியவை சூழ்ந்த நிலையில் பல தரப்பட்ட மக்களும் வலுவான ஆதரவை நாடினர். இதனை அடிப்படையாகக் கொண்டு தான் பொருளாதாரம், உள்கட்டமைப்பு வசதி, அமைப்பு முறை, துடிப்பான மக்கள்தொகை மற்றும் மக்கள் நுகர்வு ஆகிய ஐந்து தூண்களைக் கொண்டு ஆத்ம நிர்பர் பாரத் ஊக்கத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. பல துறைகளில் சீர்திருத்தங்களும், உதவித் திட்டங்களும் துவக்கப்பட்டன. குறிப்பாகத் தொழில்துறை, வேளாண்மை, ஏழ்மை நிலைமை, வேலைவாய்ப்பு, புலம் பெயர்தல் ஆகிய அனைத்தும் பெருந்தொற்றுக் காலத்தில் மோசமான நிலைமையை உருவாக்கின.

இன்றைய பாரதத்தில் சமூகப்பாதுகாப்பு அமைப்பில் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை மையமாக உள்ளது. பிரதம மந்திரி ஜன்தன் திட்டத்தால் பலர் நிதிச்சூழலில் இணைக்கப்பட்டனர். ஜனதன் வங்கிக் கணக்குகள், கைபேசிகள், ஆதார் அடையாளத் திட்டத்தின் மூலம் மின்மய அடையாளப் பதிவு ஆகியவற்றால்; ஏழை மக்கள் தங்களுக்குண்டான பயன்களை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளின் வழியாகவே பெற்றனர்.

அமைப்பு சாரா துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு, அவர்களுக்கு உண்டான சமூகப் பாதுகாப்பு உதவிகள் அமைப்புசாராப் பணியாளர்கள் சமூகப்பாதுகாப்புச் சட்டம் 2008இன் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. இந்தச் சட்டம், அமைப்புசாராத் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு சமூகப்பாதுகாப்பு உதவிகளாக அவர்களின் வாழ்வாதாரம், செயல்திறன் பாதிப்பு, மருத்துவம், மகப்பேறு உதவிகள், முதியோர் பாதுகாப்பு மற்றும் பிற பயன்களை அளிக்க வழிவகை செய்கிறது. மாநில அரசுகளும் வீட்டு வசதி, வருங்கால வைப்பு நிதி, கல்வித்திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்த இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. உயிர்ப் பாதுகாப்பு மற்றும் உடல் ஊனக் காப்பீடு போன்றவற்றை பிரதம மந்திரி ஜீவன் ஜோதித் திட்டம் மற்றும் பிரதம மந்திரி பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டம் ஆகியவை அளிக்கின்றன. ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் நலத்திட்டத்தின் மூலம் மருத்துவ உதவிகள், மகப்பேறு உதவிகள் வழங்கப்படுகின்றன. எல்லோருக்குமான இந்தத் திட்டத்தை தேசிய சுகாதார வாரியம செயல்படுத்துகிறது. சமூகப்பாதுகாப்பு வழிமுறைகள் 2020 என்பது தற்போதுள்ள பலவகையான பணியாளர் நலச் சட்டங்களில் திருத்தம் செய்தும், ஒருங்கிணைத்தும் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டங்களை அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா எல்லாப் பணியாளர்களுக்கும் வழங்குகிறது.

இது அல்லாமல், நிதித் தொழில்நுட்ப மாற்றத்தால் பலவகையான பணப் பரிவர்த்தனை வாய்ப்புகளை எல்லா மக்களுக்கும் அளித்து, நிதிசார் உள்ளடக்கத்தை ஏற்படுத்துகிறது. பிரதம மந்திரி ஊரக, மின்மயக்கல்வி இயக்கம் உலகிலேயே மிகப்பெரிய மின்மயக்கல்வி வழங்கல் திட்டமாக செயல்பட்டு, கிராமப்புறங்களிலுள்ள ஆறு கோடி குடும்பங்களுக்கு மின்மயக்கல்வி வழங்குகிறது. மின்மயப் பரிவர்த்தனைகள் மூலம் அரசோடு மக்கள் தொடர்பு கொள்வது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் அரசின் பல திட்டங்களைப் பெற்று தங்களுடைய வாழ்வின் தரத்தை உயர்த்திக் கொள்ள முடிகிறது. இது அல்லாமல் விவசாயத்துறையில் உள்ளவர்களுக்கு குறிப்பாக விளிம்பு நிலை விவசாயிகளுக்கும், உறுதியற்ற பருவநிலைமைகளையும், பொருளாதார நிலைமைகளையும் எதிர்கொள்ளும் விவசாயிகளுக்கும், சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து அரசு வழங்க வேண்டும்.

சமுதாயத்திலும் முன்னேற்ற முனைவுகளை உருவாக்கி அரசுத் திட்டங்களோடு இணைந்து செயல்பட ஏதுவாக அமைக்க வேண்டும். மக்களும், அரசுகளும் சம பங்காளிகளாகச் செயல்பட்டு, சமுதாய அமைப்புகளில் நிலைத்து நிற்கும் மாற்றங்களை ஏற்படுத்தி, மக்களுக்கு முழுமையான சமூகப்பாதுகாப்பு நிலையை உருவாக்க வேண்டும்.

– ஆசிரியர்

---


## எமது வெளியீடு

### பாரதிய விஞ்ஞான் மஞ்சுஷா

**ஆசிரியர்: எம்.எஸ். ஸ்ரீதரன்**

**ஆங்கில நூல்**

**விலை: ரூ.530/-**




பாரதிய விஞ்ஞான் மஞ்சுஷா (இந்தியாவின் பழம்பெரும் ஞானம்) என்ற இந்த நூல் மலையாள இலக்கியங்களிலும், சமஸ்கிருத இலக்கியங்களிலும் கிடைக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான பண்டைய இந்தியாவின் பங்களிப்புகளை விரிவாக விவரிக்கும் வெளியீடாகும். திரு. எம். எஸ். ஸ்ரீதரன் சேகரித்து, எழுதி, தொகுத்துத் தந்துள்ள புராதன அறிவியல் தகவல்களை இது கொண்டுள்ளது. 1987 இல் மலையாளத்தில் முதன்முதலில் இந்த நூல் வெளியிடப்பட்டது.

இந்நூலின் ஆங்கிலப்பதிப்பு 'பாரதிய விக்யான் மஞ்சுஷா' என்று அழைக்கப்படுகிறது. இது நாம் மறந்து போன நமது பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது.

பண்டைய இந்தியாவின் வேதங்களில் அறிவியல் ஒருங்கிணைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. வாய்வழி அறிவுறுத்தல்கள் மூலம் ஆசான்களால் தலைமுறை தலைமுறையாகக் கைமாற்றப்பட்ட அறிவியல் தகவல்கள் இந்த நூலில் அடங்கியுள்ளன. இவற்றில் ஜோதிடம், வானியல், கணிதம், ஆயுர்வேதம், தச்சு சாஸ்திரம், தர்க்கம், இலக்கணம், இசை, நாடகம், ஆகியவை பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள் மட்டுமே இன்றைய தலைமுறையினரை வந்தடைந்துள்ளன.

பண்டைய இந்தியா இயற்கை அன்னையுடன் நெருக்கமாக வாழ்ந்ததன் மூலம் அறிவியலில் அற்புதமான சாதனைகளைப் படைத்தது. நம் நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நமது அறிவியலை நாம் பயன்படுத்த முடிந்தால், அது எவ்வாறு உருவாகி வந்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மனித குலத்தின் அறிவுசார் பாரம்பரியத்தை வளப்படுத்தும் மனித நாகரிகத்தின் மையங்களில் ஒன்றாக நம் நாடு கருதப்படுவதற்கு, பண்டைய இந்திய மக்களின் மகத்தான பங்களிப்பே காரணமாகும். முதல் ஆயிரமாண்டின் முடிவில், இந்தியா அதன் மகிமையின் உச்சத்தில் இருந்தது. மறைந்த நூலாசிரியரின் புலமைக்கு இந்தப் படைப்பு மகத்தானதோர் அஞ்சலி.

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் தொடர்பான புத்தகங்கள் பற்றிய தகவல்களுக்குப் பார்வையிடவும்: www.publicationsdivision.nic.in

# மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல்

– வீரேந்திர குமார்


அனைவரையும் உள்ளடக்கிய செயல்பாடுகளுக்கும், கூட்டுக் கலாச்சாரத்திற்கும் புகழ்பெற்ற நாடு என்று உலகம் முழுவதும் அறியப்படும் நாடு இந்தியாவாகும். அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் தன்மை, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றில் நமக்கு அதிக நம்பிக்கை உண்டு. உலகமே ஒரு குடும்பம் என்ற தத்துவம் இந்தியாவில் செழித்தோங்கி வருகிறது. 2012ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பு வரை இந்திய அரசில் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம், அதன் கீழ் செயல்பட்டு வரும் ஊனமுற்றோர் பிரிவு என்ற அமைப்பின் மூலம் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வந்தது. மாற்றுத்திறன்களை மேலாண்மை செய்வதில் உள்ள சிக்கலான அம்சங்களைக் கருத்தில் கொண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல், முதன்மைச் சமுதாயத்தின் அங்கமாக அவர்களை மாற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டும் அதற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்துவதற்காக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான துறை ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டது. அத்துறை தொடங்கப்பட்டதில் இருந்தே மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் திசையில் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தியும் பரப்பியும் வருகிறது. பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டச் செயலாக்கங்களின் மூலம் அதன் செயல்பாடுகளை அனைவரும் அறியும்படிச் செய்திருக்கிறது.


மாற்றுத்திறன் கொண்டவர்களை ஊனமுற்றவர்கள் என அனைவரும் அழைத்து வந்த நிலையில், சமூகத்தில் அவர்களைப் பற்றி நிலவும் மனப்பான்மையை மாற்றும் நோக்கத்துடனும், அவர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை ‘திவ்யாங்ஜன்’ என்ற பெயரில் அழைப்பதற்கு இந்தியா முன்வந்தது. திவ்யாங்ஜன் என்றால், தெய்வீகமான உடல் அமைப்புக் கொண்டவர்கள் என்று பொருள் ஆகும். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசுத் திட்டங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் அமைச்சர் என்ற முறையில் மாற்றுத்திறன் கொண்டவர்களை முதன்மைச் சமூகத்துடன் உள்ளடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை நான் உன்னிப்பாக கவனித்து வருகிறேன். மத்தியில் கடந்த எட்டு ஆண்டு களாக நடைபெற்று வரும் எங்களது ஆட்சியில் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதற்காக உலக அளவில் அளிக்கப்பட்ட நமது உறுதிமொழிகளின் படி, அரசு சரியான திசையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் கூற முடியும்.

மாற்றுத்திறன் கொண்டவர்களின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்து இட்டிருக்கிறது. அதன் காரணமாக, மாற்றுத்திறன் துறையை நிர்வகிக்கும் இந்திய அரசின் சட்டங்கள் அனைத்தையும் முறைப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. அதன்படி, மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016 என்ற புரட்சிகரமான சட்டத்தை எங்கள் அரசு நிறைவேற்றியது. அந்தச் சட்டம் 19.4.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. மாற்றுத்திறனாளி களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவைகளை பாதுகாப்பு அம்சங்களை வழங்குவது மட்டுமின்றி, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான எல்லையை இந்தச் சட்டம் விரிவாக்குகிறது. இந்தச் சட்டத்தை உள்ளடக்கிய தன்மைக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகக் குறிப்பிடலாம். சமத்துவ உரிமை, கொடுமைப்படுத்தப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை, சுரண்டலிலிருந்தும், வன்முறைகளிலிருந்தும் பாதுகாக்கப்படும் உரிமை, குடும்பத்துடனும், சமூகத்துடனும் இணைந்து வாழும் உரிமை, நீதி பெறுவதற்கான உரிமை, வாக்களிப்பதற்கான தகுதி, சட்ட அங்கீகாரம் உள்ளிட்டவற்றை இந்தச் சட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்குகிறது. மாற்றுத்திறனாளிகளின் கல்வி, சுகாதாரம், திறன்மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது. அது மட்டுமின்றி, மாற்றுத்திறன்








கொண்டவர்கள் விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான சூழலையும் இந்தச் சட்டம் உருவாக்குகிறது. 40 விழுக்காட்டுக்கும் அதிகமான உடல் குறைபாடு கொண்டவர்களுக்கு வேலைவாய்ப்பில் வழங்கப்பட்டு வந்த இடஒதுக்கீடு மூன்று விழுக்காட்டில் இருந்து ஐந்து விழுக்காடாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு இந்தச் சட்டத்தின்படி மூன்று விழுக்காட்டில் இருந்து நான்கு விழுக்காடாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு நிறுவன வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு அமைச்சகமாகத் திகழும் மத்தியப் பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறை அமைச்சகம், அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை செயல்படுத்துவதற்கான சுற்றறிக்கையை கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்டது. மத்திய அரசு நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆள் தேர்வு இயக்கத்தையும் மத்திய அரசு தொடங்கியுள்ளது. அந்த இயக்கத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டு காலியாக இருந்த 15,700 பணியிடங்களில் 14 ஆயிரத்திற்கும் கூடுதலான காலியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, குறிப்பிட்ட அளவுக்கும் கூடுதலாக மாற்றுத்திறன் கொண்டவர்கள் இடஒதுக்கீடு பெறும் வகையில், 3,566 பணியிடங்களை (குரூப்ஏ 1,046, குரூப்பி 515, குரூப்சி 1724, குரூப்டி 281) நிரப்புவதற்கான அறிவிக்கையை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம்.

உடல் குறைபாடு கொண்டவர்களுக்கு மாற்றுத்திறன் சான்றிதழ் வழங்குவது தான் மத்திய அரசின் முதன்மைப் பணிகளில் ஒன்றாக உள்ளது. மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016இன் படி, மாற்றுத்திறன் பட்டியலில் பல புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு இருப்பதைக் கருத்தில் கொண்டு, மாற்றுத்திறன்களின் அளவை மதிப்பிடுவதற்கான வழிகாட்டு விதிமுறைகளை 2018ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் வெளியிட்டு இருக்கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்குவதற்கான மருத்துவத்துறை அதிகாரிகள் குறித்த விவரங்களை இந்த வழிகாட்டு விதிகள் வெளியிட்டுள்ளன. அதுமட்டுமின்றி, மாற்றுத்திறன் சான்றிதழ் பெறுவதற்கு சிக்கல் இல்லாத ஒரே மாதிரியான நடைமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காகவும், தேசிய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான தகவல் தொகுப்பை உருவாக்குவதற்கும் வசதியாக தனித்துவ மாற்றுத்திறன் அடையாளத் திட்டத்தை கடந்த 2015 –16ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதலாவது தனித்துவ மாற்றுத்திறன் அடையாள அட்டை கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி உருவாக்கப்பட்டது. இந்த அடையாள அட்டை மத்தியப் பிரதேசத்தில் உள்ள தாட்டியா மாவட்டத்தில் முதன் முதலாக வழங்கப்பட்டது. இதுவரை இந்தியாவில் 715 மாவட்டங்களில் சுமார் 70 இலட்சம் தனித்துவ மாற்றுத்திறன் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் தற்போது நடைமுறையில் உள்ள கைகளால் வழங்கப்பட்ட மாற்றுத்திறன் சான்றிதழ்கள் அனைத்தையும், மாநில அரசுகள். யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றுடன் ஆலோசனை நடத்தி, எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக மின்னணுமயமாக்கி, அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாற்றுத்திறன் கொண்டவர்களை முதன்மைச் சமூகத்தில் இணைக்க வேண்டுமானால் அதற்கான முதல் தேவை அவர்களுக்குத் தடைகள் ஏதும் இல்லாத

சூழலை உருவாக்க வேண்டும் என்பதாகும். இதற்காக கட்டடங்கள், போக்குவரத்து முறைகள், தகவல் மற்றும் தொலைத் தொடர்பு, தொழில்நுட்பச் சூழல் அமைப்பு ஆகியவற்றை மாற்றுத்திறனாளிகள் எளிதாக அணுகுவதற்கு கவனம் செலுத்துவதற்கான ‘அணுகத்தக்க இந்தியா’ என்ற பிரச்சாரத்தை கடந்த 2015ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளான டிசம்பர் 3ஆம் தேதி இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், இதற்கான நடவடிக்கைகளில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் எட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சாரத்தின் கீழ் 577 மாநில அரசுக் கட்டிடங்களிலும், 1030க்கும் மேற்பட்ட மத்திய அரசுக் கட்டிடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எளிதாகச் சென்று வருவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் உள்ள அனைத்து 35 சர்வதேச விமான நிலையங்கள், மொத்தம் உள்ள 69 உள்நாட்டு விமான நிலையங்களில் 55 விமான நிலையங்கள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சாய்வு நடைமேடைகள், உதவி மையங்கள், எளிதில் பயன்படுத்தத்தக்க கழிப்பறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் ஏ1, ஏ மற்றும் பி வகையைச் சேர்ந்த 709 தொடர்வண்டி நிலையங்களில் மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி சென்று வருவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 8,443 பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான 44,153 பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் ஏறி இறங்கவும், பயணிக்கவுமான ஓரளவு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில அரசுக்குச் சொந்தமான 603 இணைய



தளங்கள், மத்திய அரசுக்குச் சொந்தமான 95 இணைய தளங்களை மாற்றுத் திறனாளிகள் எளிதாகக் கையாள்வதற்கான சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கேட்பு மாற்றுத்திறன் கொண்டவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கேட்பதை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை கடந்த 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டது. இந்தியாவில் இதுவரை 19 தனியார் செய்தித் தொலைக்காட்சிகள், தங்களின் செய்தி அறிக்கைகளை கேட்புத் திறன் குறைபாடு கொண்டவர்கள் அறிவதற்கான வசதிகளை செய்துள்ளன. 2,447 செய்தி அறிக்கைகள் வரி வடிவிலும், சைகை மொழியிலும் கூடுதலாக காட்டப்படுகின்றன. 3,686க்கும் கூடுதலான நிகழ்ச்சிகள் / திரைப் படங்கள் வசன வரிகளுடன் பொதுப் பொழுதுபோக்குத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. மாற்றுத்திறனாளிகள் எந்த ஒரு விசயத்தையும் அணுகுவது தொடர்பான சிக்கல்கள் குறித்த விவரங்களை அறிந்து தீர்வு காண்பதற்காக சுகன்யா பாரத் செயலி என்ற செல்பேசி செயலியை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் உருவாக்கியிருக்கிறது.

ஒரு மனிதன் அவரது வாழ்நாள் முழுவதுக்குமான சுகாதாரம், சமூகம் மற்றும் பொருளாதார வலிமையை அடைவதற்கான திறனையும் தீர்மானிப்பதில் ஆறு வயது வரையிலான குழந்தைப் பருவம் தான் முக்கியமான பங்கு வகிக்கிறது. இந்தப் பருவத்தில் தரமான குழந்தைப்பருவ மருத்துவ உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சுதந்திரமாகவும், கண்ணியமாகவும் வாழ்வதற்குத் தேவையான திறமைகளை உருவாக்கிக் கொள்ள உதவும். மாற்றுத்திறன் சுமையைக் குறைப்பதற்குத் தேவையான சிகிச்சைகளை வழங்க உடல் நலக்குறைபாடுகளை இளம் வயதிலேயே கண்டறிய வேண்டியது மிகவும் முக்கியம் ஆகும். இதை உணர்ந்த மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் அளிக்கும் துறை தில்லி, டேராடூன், லக்னோ, சுந்தர் நகர், பாட்னா, போபால், மும்பை, கொல்கத்தா, கட்டாக், ராஜ்நந்கோன், செகந்தராபாத், நெல்லூர், சென்னை, கோழிக்கோடு ஆகிய நகரங்களில் உள்ள அதன் தேசிய / பிராந்திய மையங்களில் 14 தொடக்கநிலை சிகிச்சை மையங்



களை உருவாக்கி இருக்கிறது. இந்த மையங்களில் உடல்நலக் குறைபாடுகளைக் கண்டறிவதற்கான வசதிகளும், பேச்சுப் பயிற்சி, தொழில்திறன் சிகிச்சை, பிசியோதெரபி, நடத்தை முறை சிகிச்சை, பெற்றோர் / சகாக்கள் கலந்தாய்வு மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புரிந்து கொள்ளல் மற்றும் உடல் திறனை மேம்படுத்துவதற்கான ஆயத்தப் பள்ளி ஆகிய வசதிகள் உள்ளன.

மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் அனைத்து நிலைகளிலும் உயர்கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக 10 ஆம் வகுப்பு வரை பயில்வோரில் 25 ஆயிரம் பேருக்கும், 10ஆம் வகுப்புக்கு மேல் பயில்வோரில் 17 ஆயிரம் பேருக்கும் புகழ்பெற்ற தொழிற்கல்வி மையங்களில் பயில்வோரில் 300 பேருக்கும், எம்.ஃபில் / பி.எச்.டி. படிப்போரில் 20 பேருக்கும், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்போரில் 20 பேருக்கும் கல்வி உதவித் தொகையை நமது அரசு வழங்குகிறது. 10க்கு முந்தைய வகுப்புகள், 10க்குப் பிந்தைய வகுப்புகள், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை பெறுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இதில் இருந்தே மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் உயர்கல்வி கற்கத் தொடங்கியுள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அதுமட்டுமின்றி, மத்திய மாநில அரசுகளில் உள்ள குரூப் ஏ, குரூப் சி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் பல்வேறு தொழில்படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்கு வசதியாக, மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகளையும், மாற்றுத் திறனாளிகளின் அதிகாரம் அளித்தல் துறை வழங்குகிறது.

மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை 2020இன் அனைத்து அம்சங்களும் மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016இன் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி உள்ளன. அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கான அம்சங்கள் புதிய கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ளன. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் தடையின்றி கல்வி பெறுவதை இந்தக் கொள்கை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சைகை மொழிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அத்துறையில் மனித வளத்தைப் பெருக்கவும், இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை மத்திய அரசு தில்லியில் அமைத்துள்ளது. இந்த நிறுவனம் 10 ஆயித்திற்கும் கூடுதலான வார்த்தைகள் மற்றும் வாக்கியங்களுக்கான சைகை மொழிக் குறியீடுகளை உருவாக்கியுள்ளது. இது கேட்டல் திறன் குறைபாடு கொண்டவர்களுக்குப் பெரும் வரமாகும். இந்தியாவில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பள்ளிப் பாடத்திட்டங்களை சைகை மொழியில் மாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவுடன் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் ஏற்கெனவே ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்திற்கான சைகை மொழிக் குறியீடுகளை உருவாக்கியுள்ளது. அதுமட்டுமின்றி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் ஒட்டுமொத்தப் பாடத்திட்டத்தையும் செல்பேசிச் செயலி மூலம் மாற்றுத் திறனாளிகள் அணுகுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மனநல மாற்றுத்திறன் நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தான் உலகம் முழுவதும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக 2019ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் ஒட்டுமொத்த மனித குலத்தில் நான்கில் ஒரு பங்கினருக்கு அவர்களின் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு கட்டத்தில் மனநல பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மனநல பாதிப்பு தொடர்பான கவலைகளை கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கச் செய்துள்ளது. இத்தகைய பாதிப்பு கொண்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மனநலக் குறைபாடுகளை சரி செய்வதற்காக 24 மணி நேரமும் மனநல மருத்துவச் சேவை வழங்கும் அவசர உதவி எண்களை 2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் தொடங்கி இருக்கிறது. இந்த உதவி மையம் மூலம் 13 மொழிகளில் சேவைகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய சேவை வழங்குவதில் 660 மருந்தக உளவியல் வல்லுநர்களும், 668 குழந்தைகள் மனநல உளவியல் தற்காலிகப் பணியாளர்களும், பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியப் பிரதேசத்தின் சேஹோர் பகுதியில் தேசிய மனநல மறுவாழ்வு மருத்துவ மையத்தை மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை அமைத்திருக்கிறது. மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு, வெற்றிகரமாக குணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைப்பதற்குத் தேவையான சமுதாயம் சார்ந்த ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை உருவாக்குதல், மனநல மறுவாழ்வு தொடர்பான திறன்மேம்பாடு ஆகிய துறைகளில் இந்த நிறுவனம் சேவை செய்ய உள்ளது. இந்த மனநல மறுவாழ்வு மருத்துவ மையம் சேஹோர் நகரில் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள பழைய மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில்


தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டிற்குள் இந்த மருத்துவ மையத்திற்கான புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விடும். இந்த மனநல மறுவாழ்வு மருத்துவ மையம் முழுமையாக செயல்படத் தொடங்கிய பிறகு, மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு, வெற்றிகரமாக குணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைப்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் தேவையான புதுமையான மருத்துவ முறைகளையும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. இந்தியாவில் மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களின் திறமை அளவிட முடியாத அளவுக்கு உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டிகளில் ஐந்து தங்கப் பதக்கம் உட்பட 19 பதக்கங்களை இந்திய வீரர்கள் வென்றிருக்கிறார்கள் என்பதில் இருந்தே அவர்களின் திறமையை நாம் அறியலாம். மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக குவாலியர் நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் ஒன்றை மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை அமைத்திருக்கிறது. இந்த மையம் நடப்பு நிதியாண்டில் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து விளையாட்டுக்களிலும் மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான அதிநவீன வசதிகள் இந்த மையத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கலாச்சார நடவடிக்கைகள் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் மாற்றுத்திறனாளிகளை முதன்மைச் சமூகத்துடன் ஒருங்கிணைப்பதற்காக மத்திய அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இந்த நோக்கத்தை எட்டுவதற்கான முதல் நடவடிக்கையாக நுண்கலைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ள திறனை வெளிக்கொணரும் நோக்குடன் திவ்ய கலா சக்தி என்ற புதிய அமைப்பை மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை உருவாக்கியுள்ளது. இந்தத் துறையின் சார்பில் இதுவரை தில்லியில் இரண்டு முறை தேசிய அளவிலான நிகழ்ச்சிகளும், சென்னை மற்றும் இட்டா நகரில் தலா ஒரு முறை மண்டல அளவிலான நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரணம் வழங்குவது மாநிலப் பட்டியலின் 9வது அம்சமாக இடம்பெற்றுள்ளது. அதன்படி, மாற்றுத்திறனாளிகள் நலன் சார்ந்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு அதன் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் துணை நிற்கிறது. மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக, மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை செயல்படுத்தும் முதன்மையான திட்டங்களில் ஒன்று மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கான உதவிக் கருவிகளை கொள்முதல் செய்தல் மற்றும் பொருத்திக் கொள்வதற்காக உதவி வழங்கும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ், மாற்றுத் திறனாளிகள் தங்களின் அன்றாடச் செயல்பாடுகளை பிறர் துணையின்றி மேற்கொள்வதற்கு மட்டுமின்றி, வெளியில் வேலைக்குச் சென்று வாழ்வாதாரம் ஈட்டுவதற்கு வசதியாக, நடமாட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு உதவக் கூடிய கருவிகளையும், பொருள்களையும் மத்திய அரசு வழங்குகிறது. இதற்கான திட்டத்தின் கீழ் 2014-15ஆம் ஆண்டு முதல் 11,973 முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் 21,90,000 மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமின்றி, கேட்கும் திறன் குறைந்த குழந்தைகளுக்கு 4 ஆயிரத்திற்கும் அதிகமான காது கேட்கும் கோக்லியர் கருவி பொருத்தும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசின் இந்த முயற்சி மிகப் பெரிய அளவில் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு உதவக் கூடிய அதிநவீன கருவிகள், பொருள்கள், தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை அலின்கோ எனப்படும் இந்தியச் செயற்கை உறுப்புகள் உற்பத்திக் கழகம் ஜெர்மனியைச் சேர்ந்த ஆட்டோ போக் நிறுவனத்துடனும், இங்கிலாந்தைச் சேர்ந்த மோட்டிவேஷன் நிறுவனத்துடனும் செய்து கொண்டிருக்கிறது. ஆட்டோ போக் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, செயற்கை கால்கள் உற்பத்தி செய்து தரப்படும். மோட்டிவேஷன் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பது, கரடு முரடான மலைப்பாதைகளில் பயன்படுத்துவதற்கான மடித்து எடுத்துச் செல்லக்கூடிய சக்கர நாற்காலிகளை உற்பத்தி செய்தல். காது கேட்கும் கருவிகளைத் தயாரிப்பதற்கான செலவைக் குறைத்தல், மேக் இன் இந்தியா திட்டத்தின்படி இந்தியாவிலேயே அவற்றைத் தயாரித்திட வகை செய்தல் தொடர்பானதாகும். இந்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புடன் இணைந்து கோக்லியர் காது கேட்கும் கருவிகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான நடவடிக்கைகளிலும் இந்திய அரசு ஈடுபட்டிருக்கிறது.





மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் மறுவாழ்வு, சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் பணி எவ்வளவு முக்கியமானது என்பதையும் மத்திய அரசு அங்கீகரித்திருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை, தீனதயாள் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம், பார்வைத் திறன், காது கேட்கும் திறன், சிந்திக்கும் திறன் ஆகியவற்றை இழந்த குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளை உறைவிட வசதியுடன் வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல், சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்கான செயல்திட்டங்களை வழங்கும் கோணத்தில் பார்க்கும் போது, அதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பது எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு அவற்றைச் செயல்படுத்துவதற்கான அமைப்புகளை வலுப்படுத்த வேண்டியதும் முக்கியமாகும். மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை நாடு முழுவதும் உள்ள 28 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் 9 தேசிய மையங்களையும், 21 மண்டல மையங்களையும் நடத்தி வருகிறது. ஒவ்வொரு தேசிய மையமும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மாற்றுத்திறன் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதே நேரத்தில், மண்டலக் கூட்டு மையங்கள் அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வுச் சேவைகளை வழங்கி வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வுச் சேவைகளை வழங்குவதுடன், அது தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளிலும் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், இந்த மையங்களின் திறனை மேம்படுத்துவதற்காக மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் அளித்தல் துறை தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

உண்மையான உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் குடிமை சமுதாய அமைப்புகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு பங்குதாரர்களின் தீவிரமான பங்கேற்பு இல்லாமல் அரசின் நடவடிக்கைகளால் மட்டுமே சாதித்துவிட முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான எங்களின் ஏழு ஆண்டு காலப் பயணத்தில் அனைத்துத் தரப்பினரும் அளித்த ஒத்துழைப்பை நாங்கள் பாராட்டுகிறோம். 'அனைவரையும் உள்ளடக்கிய இந்தியா' என்ற தொலைநோக்கு இலக்கை எட்டுவதை நோக்கி பயணிக்கவும், உழைக்கவும் நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம்.

– முனைவர் வீரேந்திர குமார்,
மத்திய அமைச்சர், சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம், இந்திய அரசு.

## வாசகர் கடிதங்கள்

ஏப்ரல் மாதத் திட்டம் இதழில் ஆட்டோ ஓட்டுநர் அண்ணாதுரை கனேசன் அவர்களுடனான நேர்காணல் இளைஞர்களுக்கு நல்லதொரு படிப்பினையைக் கொடுக்கும் வகையில் இருந்தது. பாராட்டுகள்.

– ப.நரசிம்மன், எடமலைப்பட்டிபுதூர், திருச்சிராப்பள்ளி.

ஏப்ரல் மாதத் திட்டம் இதழில் வெளியான திரு.நரேஷ் குப்தாவின் உள்ளூர் சுய நிர்வாகம் பற்றிய கட்டுரை அற்புதம்.

– இரா. கோவிந்தசாமி, சி.எம்.பாளையம், கடலூர் மாவட்டம்.

# நீடித்தப் பொருளாதார வளர்ச்சி

– அவினாஷ் மிஷ்ரா
– மதுவந்தி தத்தா

வளர்ச்சி குறித்த கண்ணோட்டத்தில் மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக பருவநிலை மாற்றம் என்பது இருக்கிறது. வளர்ச்சிக்கான ஒவ்வொரு நடைமுறையிலும் பாதகமான தாக்கங்களை இது ஏற்படுத்துகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்த, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நமது முயற்சிகளின் ஓர் அங்கமாக, பருவநிலை மாற்றத்தின் விளைவுகளைக் குறைக்க வேண்டும் என்று நாம் உறுதி ஏற்க வேண்டும். தெற்காசிய நாடுகள் மிக விரைவாக வளர்ந்து வருகின்ற அதே சமயத்தில் பருவநிலை மாறுதல்களால் அதிக அளவிலான பாதிப்புக்கும் உள்ளாகி வருகின்றன. எந்த ஒரு சூழலும் இந்த நாடுகளின் மீது குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. பருவநிலை மாறுதல்கள் குறித்த பிரச்சினைகளை நாம் இப்போதே தீர்க்காவிட்டால், உலகின் மீதமுள்ள நாடுகள் எதையும் செய்ய முடியாமல் போய்விடும் ஆபத்துக் காரணி உள்ளது. பசுமை இல்ல வாயுக்கள் ஏற்படுத்தும் மாசைக் குறைப்பதற்கு குறிப்பிடத்தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முடியாவிட்டால், முன்பு கணித்ததை விட மிக விரைவாகவே கூடுதலான வெப்பத்திற்கு பூமி ஆளாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



உலகின் மிகச்சிறந்த பருவநிலை விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட பருவநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கு இடையிலான குழுவின் (Intergovernmental Panel on Climate Change - IPCC) புதிய மதிப்பீடானது, அதிகரித்து வரும் வெப்பநிலை மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சீதோஷ்ண நிலையை உருவாக்கி விடும் என்றும், அதன் விளைவாக வரும் ஆண்டுகளில் கடல் மட்டம் உயரும் என்றும் எச்சரித்துள்ளது. வெப்ப அலைகள், வெள்ளம், வறட்சி போன்ற தீவிரமான பருவநிலை நிகழ்வுகள் ஏற்பட மனித நடவடிக்கைதான் காரணம் என இந்த மதிப்பீட்டு அறிக்கை மிகத் தெளிவாகக் குற்றம் சாட்டுகிறது. மேலும் 2050ஆம் ஆண்டுக்குள் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை பூஜ்யமாக குறைத்தே ஆக வேண்டும் என்றும் இந்த மதிப்பீட்டு அறிக்கை வலியுறுத்துகிறது.

பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, உலகளாவிய வெப்பநிலை உயர்வை 1.5 செல்சியசிற்குள்ளாக வைத்திருக்க வேண்டும். பருவநிலை மாற்றத்தால் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மிக அதிக அளவில் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மண்டலத்திலுள்ள பெரும்பான்மையான அரசாங்கங்களிடம் பருவநிலை பாதிப்பின் தீவிரத்தை திறம்பட குறைக்கக்கூடிய கார்பன் குறைப்பு கொள்கைத் திட்டங்கள் ஏதும் இல்லை.

உலக அளவில் மிகப் பெரும் அளவில் கரிக்காற்று வெளியேற்றத்தை ஏற்படுத்துபவர்கள் (வளர்ந்த நாடுகள்) பருவநிலை மாறுதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று உறுதி அளித்திருந்த போதிலும், பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே தான் வருகிறது. தொழில்புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்ததை விட அதிகமாக உலகளாவிய வெப்பம் 1.5 டிகிரி செல்சியசையும் தாண்டி அதிகரித்து விடக்கூடாது என்று உலகத் தலைவர்கள் 2015இல் பாரிஸ் ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது உறுதி எடுத்துக் கொண்டார்கள். இதனை 2030க்குள்ளாகவோ அல்லது முடிந்த அளவு அதற்கு முன்பாகவோ நிறைவேற்றியாக வேண்டும். பருவநிலை மாற்றத் திற்கான அரசுகளுக்கு இடையிலான குழு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முன்கணிப்பு செய்ததை விடவும் 10 ஆண்டுக்கு முன்பாகவே இந்தப் பருவநிலை மாறுதல் காரணமாக ஏற்படும் 1.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்வு ஏற்பட்டுவிடும். அது மட்டுமல்லாமல் பருவநிலை மாறுதலால் அதிகம் பாதிப்பு அடையக் கூடிய பிராந்தியங்களில் ஒன்றாக தென்கிழக்கு ஆசியா தான் இருக்கும்.

எல்லா இடங்களிலும் கடல் மட்டத்தின் அளவு அதிகரித்து வருகின்றது. 54 கோடி மக்கள் வசித்து வருகின்ற கடலோரப் பகுதிகளில் கடற்கரை ஓரங்கள் பின்வாங்கி வருகின்றன. எனினும் தென்கிழக்கு ஆசியாவானது உலக சராசரியை விட சற்றே குறைவான வெப்பநிலையை அடையும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஒரு புதிய ஆய்வின்படி அதிகரித்துவரும் கடல் மட்ட உயர்வானது, ஆசியாவின் மிகப்பெரும் நகரங்களுக்கு இந்தப் பத்தாண்டில் கோடிக்கணக்கான செலவை ஏற்படுத்திவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. புவி அமைப்பில் ஏற்படும் மாற்றங்களால் நிலத்தடியில் கடல் நீர் உள்ளே ஏறி வருவதால் இந்தப் பாதிப்பு பல மடங்காக இருக்குயம். உலகளாவிய வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியசுக்குள் வைத்திருப்பது என்பது மிகப்பெரிய சவாலாகும். பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறுவதை நிறுத்தவும், சூழல்சார் அமைப்புகளைப் பாதுகாக்கவும், அவற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் உலக அளவில் அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

புதுப்பிக்கத்தக்க மற்றும் தூய்மையான எரிசக்தியின் பயன்பாட்டை விரிவாக்குதல் போன்ற முன்னுரிமைச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து பருவநிலை மாற்றத்திற்கு எதிரான நமது பதில் வினை தொடங்கப்பட வேண்டும். 1990ஆம் ஆண்டிலிருந்து தெற்காசியாவின் மாசு வெளியேற்றம் ஒவ்வொரு ஆண்டும் 3.3 சதவீதம் அதிகரித்து வருகிறது. நிலக்கரியைப் பெரிதும் சார்ந்திருக்கும் நிலைமையால் இந்தியாவானது பூமியை சூடேற்றும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தில் உலக அளவில் ஏழாவது இடத்தில் உள்ளது. சர்வதேச அளவுகோலின்படி பார்த்தால், ஏனைய வளரும் நாடுகளோடு ஒப்பிடும் போது, இந்தியாவில் தனி நபர் சராசரி என்ற அளவிலும், ஒரு அலகுக்கு இவ்வளவு என்ற முறையிலும் பசுமை இல்ல வாயு வெளியேற்றமானது குறைவாகவே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் மின்சார உற்பத்தியில் கணிக்க முடியாத அளவிற்கு நிலக்கரி தான் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும்.

மின்சார உற்பத்திப் பிரிவில் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்க எரிசக்தித் திறன் என்பது தொழில்நுட்ப அபிவிருத்திகளுடன் இணைக்கப்பட்டாக வேண்டும். இதற்கு இணையாக, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு எதிரான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு எரிசக்தி உற்பத்தியும், மண்டல எரிசக்தி வணிகமும் காப்பாற்றப்பட வேண்டும். அதிக வெப்ப நிலையும், அதிதீவிரமான தட்ப வெப்ப நிகழ்வுகளால் அதாவது நீர் மின்சார உற்பத்தியை பாதிக்கக் கூடிய வெள்ளத்தால் ஏற்படும் ஆபத்துக் காரணிகளும் அதிகரித்துவரும் மின்சாரத் தேவைகளை எதிர்கொள்ளும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு திடமான எரிசக்தித் துறை தேவை. தொழிற்சாலைக் கட்டமைப்புகள், உள்நாட்டு வங்கிகள், சிறப்புநிலை எரிசக்தித் திறன் முகமைகள் மற்றும் சேவை நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இந்தியா ஒன்று சேர்ந்து எரிசக்தி பகிர்மானம் மற்றும் விநியோக அமைப்புகளை தரநிலை உயர்த்த வேண்டும். அதே போன்று மாசு ஏற்படுத்தாத தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்தி ஆகியவற்றையும் மேம்படுத்த வேண்டும்.

ஒட்டுமொத்த தெற்காசியப் பிராந்தியமும் நீண்டகாலமாக உலகின் மிகக் குறைவான நகரப் பகுதிகள் கொண்ட பிராந்தியமாக இருந்தது. இந்தப் பிராந்தியத்தின் மொத்த மக்கள் தொகையான 140 கோடி என்பதோடு ஒப்பிடும்போது, நகர மக்கள் தொகையின் பங்கு வெறும் 28 சதவிகிதமாக மட்டுமே இருக்கிறது. ஆனாலும் கூட, 2.53 சதவிகிதம் என்ற நகர வளர்ச்சி விகிதமானது உலகளாவிய மற்றும் பிராந்திய சராசரியை விட அதிகமாகவே இருக்கிறது (ஐ.நா மக்கள் தொகைப் பிரிவு 2007). நாட்டிலுள்ள நகரங்களை வளர்ச்சியை நோக்கி அதிக வேகமாக இது உந்தித் தள்ளுகிறது. நகரம் – ஊரகம் ஆகியவற்றுக்கு இடை யிலான நகர்வு திடீரென அதிகரித்துள்ளது. இது உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியை மோசமாக்கி விடுவதோடு சமூக சேவைப் பற்றாக் குறையையும் அதிகரித்து விடும்.

மேலும் மண்டலங்களின் திட்டமிடப் படாத நகரமய மாதலுடன் நகர மேலாண்மை பிரச்சினைகளையும் அதிகரிக்கச் செய்து விடும்.

கடல் மட்டம் உயர்வு, வெப்ப நிலை அதிகரிப்பு, அதிதீவிர தட்ப வெப்ப நிகழ்வுகள் போன்ற பருவ நிலை சார்ந்த அச்சுறுத்தல்கள் தெற்காசிய நகரங்களின் பாதிப்பு நிலைமையை மேலும் மோசமாக்கி விடும். கடல் மட்டத்திற்கு மேல் 10 மீட்டர் அல்லது அதற்குக் குறைவான அளவில் உள்ள கடலோர மற்றும் முக்கியமான நதிகளின் படுகைப் பகுதிகள் பெருநகர மக்கள் தொகையில் சுமார் 14 சதவிகிதம் பேருக்கு வசிப்பிடமாக உள்ளன. அதாவது. கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய பெருநகரங்கள் மிகவும் பாதிக்கப்பட்டவையாக மாறக் கூடும்.

பருவநிலை பாதிப்புக்கு ஆளாகக்கூடிய குறிகாட்டியின்படி (Climate Vulnerability Index - CVI) அசாம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, பீகார் ஆகிய மாநிலங்கள் வெள்ளம், வறட்சி, புயல் போன்ற அதிதீவிர பருவநிலை நிகழ்வுகளுக்கு அதிகம் ஆட்படக் கூடியவையாக உள்ளன. குறிகாட்டி அறிக்கையானது இந்திய மக்கள் தொகையில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் அதிதீவிரமான நீரியல்சார் வானிலைப் பேரிடர்களுக்கு அதிகம் ஆளாகக் கூடிய மாவட்டங்களில் வசிக்கின்றனர் என மேலும் தெரிவிக்கிறது. இந்தியாவின் பெரும்பான்மை மாவட்டங்கள் அதிதீவிர தட்ப வெப்ப மாற்றங்களுக்கு ஆளாகக் கூடியவையாக இருப்பதால் மாவட்டம் மாவட்டமாக பருவநிலை செயல்திட்டம் தயாரிப்பது என்பது அவசியமாகிறது. எரிசக்தி, சுற்றுச்சூழல், நீர்க் குழுமத்தின் (Council on Energy, Environment and Water - CEEW) அறிக்கையின்படி இந்தியாவில் 63 சதவிகித மாவட்டங்கள் மட்டுமே மாவட்டப் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை வகுத்துள்ளன.

பருவநிலை மாற்ற நெருக்கடியைச் சமாளிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செலவு அதிகரித்து வருவதால், தகவேற்பு அடிப்படையில் பருவநிலை செயல்களை மேற்கொள்ள இந்தியாவுக்கு பசுமை நிதி தேவைப்படுகிறது. பருவநிலை மாற்ற மாநாட்டில் (Conference of the Parties - COP26) வளர்ந்த நாடுகள் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை மீண்டும் ஞாபகப் படுத்திக் கொண்டு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். 2009இல் இருந்து 100 பில்லியன் அமெரிக்க டாலர்களை வளர்ந்த நாடுகள் வழங்க வேண்டும். அடுத்த பத்தாண்டில் பருவநிலை நிதியை அதிகரிக்கும் பொறுப்புடைமையையும் அவை நிறைவேற்ற வேண்டும். இதனோடு கூடவே பிற நாடுகளுடன் ஒன்று சேர்ந்து சர்வதேச மீட்டெழுச்சி சேம நிதியத்தையும் இந்தியா உருவாக்க வேண்டும். இது பருவநிலைக் காப்பீடு வடிவத்தில் செயல்படும்.

400க்கும் அதிகமான நிதி நிறுவனங்கள் 130 டிரில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான கூட்டு மொத்த சொத்து மதிப்புடன் (நெட் ஜீரோவுக்கான கிளாஸ்கோ நிதிசார் கூட்டமைப்பு மூலமாக திரட்டப்பட்டது) 2030க்குள் நெட் ஜீரோ இலக்கை அடையும் வகையில் தங்கள் செயல் திட்டங்களை சீரமைத்துக் கொள்வதாக உறுதி மொழி எடுத்துக் கொண்டு உள்ளன. இந்தப் புதிய கட்டமைப்பானது வங்கிகள், சொத்து மேலாளர்கள், சொத்து உரிமையாளர்கள் பருவநிலை செயல்பாட்டுக்கான வர்த்தக முறைகளைப் புரிந்து கொண்டுள்ளதோடு முந்தைய அதிக அளவு கார்பன், அதிக அளவு மாசு ஏற்படுத்தும் பொருளா தாரத்தில் முதலீடு செய்வதில் உள்ள அதி தீவிரமான ஆபத்துக் காரணிகளையும் புரிந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கிறது. இப்போது உள்ள பிரச்சினை எதுவெனில் தேவையான வேகத்தில் செயல்பாடுகளை முடுக்கிவிடுவது தான், தங்களது நெட் ஜீரோ குறிக்கோள்களுடன் பொருந்தக்கூடிய வகையில் இடைநிலை இலக்குகளை நிர்ணயித்தல், தங்களது முன்னேற்றம் குறித்த வெளிப்படையான அறிக்கை வெளியிடுதல் ஆகிய நடவடிக்கைகளே ஆகும். இவற்றைப் பெரும்பாலும் அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறையிலேயே மேற்கொள்ள வேண்டும்.

"பசுமை நிதி முதலீடுகள்" அடுத்த 10 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் அடிப்படை எரிசக்தி உருமாற்றத்திற்குத் தேவையான நிதி உதவிக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றுவதாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில், தனியார் மூலதனத்தில் மிகக் குறைவான சதவிகித அளவே வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் ஈடுபடுகிறது. அதுவும் கூட சில நாடுகளில் ஏறுமாறான தன்மையில் சரிவாகவே இருக்கிறது.


பொருளாதார ஒத்துழைப்பு, மேம்பாடிற்கான அமைப்பின் (Organisation for Economic Co-operation and Development - OECD) மதிப்பீட்டின்படி, 2019இல் திரட்டப்பட்ட பருவநிலை நிதியான 80 பில்லியன் அமெரிக்க டாலரில் தனியார் பங்களிப்பு என்பது சுமார் 16.5 பில்லியன் அமெரிக்க டாலராக மட்டுமே இருந்துள்ளது. இந்தியாவின் மாசு வெளியேற்ற அதிகரிப்பு என்பது எதிர்காலத்தின் 2 டிகிரி செல்சியஸ் என்பதோடு ஒத்திசைந்ததாகவே இருக்கும். எனினும் இந்தியாவின் துறை சார்ந்த கொள்கைகள் இன்னமும்



பாரிஸ் ஒப்பந்தத்திற்கு இயைந்ததாக இல்லை.. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக நாட்டின் குறிக்கோள் சார்ந்த செயல்உத்தி சாதகமான ஒரு குறிகாட்டியாக உள்ளது. 2030க்குள் 500 கிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் என்ற இந்தியாவின் இலக்கு மற்றும் இந்தியப் பொருளாதாரத்தின் அதிக அளவிலான எரிசக்தி பயன்பாட்டுத் திறன் ஆகியவை கிளாஸ்கோவில் நடைபெற்ற COP26 உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கையின் முக்கிய அம்சங்களாக இருந்தன.

வளர்ச்சி குறித்த கீழ்த்திசை கருத்தாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகியன போலியான இரட்டை பகுப்பாகும். வளர்ச்சி பெறுவதற்கு இந்தியாவுக்கு அதற்கே உரிய நியாயமான கார்பன் அளவு தேவை. இந்தியா மிக விரைவாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை உருவாக்க மேற்கு நாடுகள் தேவையான அளவு நிதி அளிக்க வேண்டும் அல்லது பசுமைத் தொழில் நுட்பத்தை வழங்க வேண்டும் அல்லது வரும் ஆண்டுகளில் இந்தியாவில் மாசு வெளியேற்றம் அதிகமாக இருப்பதை அனுமதிக்கும் வகையில் மேற்கு நாடுகள் அதற்கேற்ப தங்களது மாசு வெளியேற்றத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

பிரதம மந்திரி மிகச் சரியாகக் கூறியுள்ளபடி, கார்பன் வெளியேற்ற அளவை சமமாகப் பகிர்ந்து அளித்தல், பாதிப்பைக் குறைப்பதற்கான உதவி மற்றும் தகவேற்பு ஆகியவை உள்ளிட்ட பருவநிலைப் பிரச்சினைகளை விரிவாக எதிர்கொள்வதற்கான தேவையை இந்தியா எடுத்துக்காட்டும். மேலும் இந்தியா மீட்டெழுச்சி நடவடிக்கைகள், நிதி திரட்டுதல், தொழில்நுட்ப மாற்றம், பசுமை சார்ந்த வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய




வளர்ச்சி ஆகியவற்றுக்குத் தேவையான நீடித்த வாழ்க்கை முறைகள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டும்.

அதிகரித்து வரும் வெப்பநிலைகளோடு சேர்ந்து மழைப்பொழிவு முறையில் ஏற்பட்டு வரும் மாற்றமானது, மண்ணின் ஈரப்பதமும், நீரைத் தக்க வைக்கும் திறனும் படிப்படியாக சீர்கேடு அடைய காரணமாகி விடும். மேலும் இது வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான நீர் விநியோகம், நீர் மூலம் மின்சார உற்பத்தி, வேளாண் உற்பத்தி ஆகியவற்றையும் பாதிக்கும். 2050க்குள் மழைப்பொழிவு முறையில் ஏற்படும் மாற்றம், பனிப்பாறைகள் உருகுதல் ஆகியவற்றின் காரணமாக முக்கிய நதிகளில் நீர் வெளியேற்றம் அதிகரிக்கும். இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆற்று நீர்ப்பாய்வு குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் கடுமையான நீர்ப் பற்றாக்குறை ஏற்படும்.

பருவநிலை மாறுதல் மற்றும் வேளாண்மை, நீர், இதர முக்கியமான பிரிவுகளில் உள்ள எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பிரச்சினைகள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கு நமக்கு கொள்கை சார்ந்த ஆதரவும், தொழில்நுட்ப வழிகாட்டுதலும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. நமது நீர்வளம் சார்ந்த செயல்திட்டங்களை சமுதாயத்தினருக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் ஏற்றதாக வகுக்க வேண்டும். அதாவது பருவநிலை மாறுதலின் தாக்கங்களுக்கு ஏற்ப தகவமைப்புடன் செயல்திட்டம் இருக்க வேண்டும். நீர் வீணாவதைக் குறைத்தல், சமுதாய மற்றும் பொருளாதார வீழ்ச்சியை அதிகரிக்கும் வகையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையை நடைமுறைப் படுத்துதல் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டும்.

நமது கவனமானது வளிமண்டல கரிக்காற்றை கிரகித்துக் கொள்ளும் வகையில் நிலப்பயன்பாடு மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல் ஆகிய அம்சங்களில் செலுத்தப்பட வேண்டும். தோராயமாக பிராந்தியத்தின் பசுமை இல்ல

வாயுக்கள் வெளியேற்றத்தில் மூன்றில் ஒரு பகுதி வெளியேற்றம் காடுகளை நிலப்பயன்பாட்டுக்கு மாற்றிய நடவடிக்கை மூலம் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றம் பிராந்தியத்தின் பல்லுயிர் தன்மை மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தாழ்வாக உள்ள நிலப்பகுதிகளின் உப்புத்தன்மை அதிகரித்தல், வண்டல் படிவில் ஏற்படும் மாற்றங்கள், வறண்ட மற்றும் ஓரளவு வறண்ட பகுதிகள் மேலும் சீரழிதல் ஆகியன வேளாண் உற்பத்தியை பாதிப்பதோடு விவசாயம் செய்வதற்கு நிலம் கிடைப்பதையும் குறைத்துவிடுகின்றன. அதுமட்டும் அல்லாமல் இயற்கைப் பேரிடர்களும், அதிதீவிர நிகழ்வுகளும் கூட விவசாயத்தைப் பாதிக்கின்றன. பருவமழைக் காலத் தில் பெய்யும் மழையும், வேளாண் உற்பத்தி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பருவநிலை மாறுதலால் ஏற்படக் கூடிய நீர்ப் பற்றாக்குறையின் விளைவாக பயிர் விளைச்சல் அதிக அளவில் குறையக்கூடும். அரிசி, சோளம், கோதுமை, சோயா பீன்ஸ் போன்ற முக்கியமான விவசாய விளைபொருள்களின் விலை அதிகரிக்கக் கூடும். இதே நிலை தொடர்ந்து நீடித்தால் 2050க்குள் இந்தப் பிராந்தியத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரிக்கக்கூடும். பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு குறைந்த செலவிலான செயல் விதிகளில் ஒன்றாக இருப்பது வனம் மற்றும் விவசாய நில மேலாண்மையை மேம்படுத்துவது ஆகும். அதே போன்று சேமிப்புக்கான அமைப்புகளை உருவாக்குவதோடு நீர் மேலாண்மையையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

குறைந்தபட்ச கரிக்காற்று வெளியேற்றத்தோடு ஒன்றை ஒன்று மிஞ்சும் வகையிலும் வாழத்தகுதி கொண்ட முறையிலும் நகரங்களை உருவாக்குவதற்கான பாதையை நாம் உருவாக்கியாக வேண்டும். பசுமைப்பகுதிகள், எரிசக்திப் பயன்பாட்டுத் திறன் கொண்ட கட்டிடங்கள், சிறந்த நீர் விநியோகம், அதே போன்று கழிவுகளில் இருந்தும் நகரப் போக்குவரத்திலிருந்தும் வெளியேறும் பசுமை இல்ல வாயுக்களைக் குறைத்தல் ஆகியவை உயர் முன்னுரிமை பெறுகின்றன. நீடித்த போக்குவரத்து முன்னெடுப்புத் திட்டமானது அரசாங்கங்கள் குறைந்த கார்பன் வெளியேற்றம், பாதுகாப்பு மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து அமைப்புகளை ஏற்படுத்துவதில் முதலீடு செய்ய ஊக்குவிக்கின்றன. அதுமட்டும் அல்லாமல், மாசு ஏற்படுத்தாத, எரிபொருளை சரியாகப் பயன்படுத்தக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய போக்குவரத்துத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாடுகளுக்கு இது உதவுகிறது. மேலும் நீடித்த போக்குவரத்திற்கான நெறிமுறைகளை உருவாக்கவும் உதவுகிறது. பருவநிலை மீட்டெழுச்சி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான பாதையை உருவாக்குவதில் பருவநிலை மாறுதல் நீர்வள ஆதாரங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை நாம் காண்கிறோம்.

**பருவநிலை நிதிசார் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம்**

நிதித் தொழில்நுட்பம் (FINTECH) என்பது உலகம் முழுவதும் கார்பன் நீக்கத்திற்கு உதவுகின்ற மின்னணு நிதிசார் தொழில்நுட்பமாகும். இது தனது வாடிக்கையாளர்களுக்கு புதுமையான யோசனைகளையும், பசுமை நிதித் தீர்வுகளையும் வழங்குவதோடு கார்பன் வெளியேற்ற அளவுகளைக் குறைக்கத் தேவையான சேவைகளையும் வழங்கி உதவுகிறது. பருவநிலை நிதி தொழில்நுட்பம் ஆகிய மூன்று பிரிவுகளை ஒருங்கிணைப்பதுவே நீடித்த நிலையான நிதித் தொழில்நுட்பம் என்று அழைக்கப்படுகிறது. பருவநிலை தொடபான நிதித் தொழில்நுட்பத் தீர்வுகள் என்பவை மின்னணுப் புத்தாக்கங்கள், செயலிகள் மற்றும் செயல் மேடைகளாகும். இவை தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் சேமித்தல், செலவழித்தல் மற்றும் முதலீடு செய்தல் ஆகியவற்றிற்கு உதவுகின்றன.

நிதிசார் சேவைகள் தொழில், மூலவளங்களைத் திரட்டுதல், நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் பருவநிலை நிதித் தொழில்நுட்பங்கள் என்பவை மிக முக்கியமான இடையீட்டாளராகச் செயல்படுகிறது. வாடிக்கையாளர்கள் இப்போது மிகுந்த கவனத்துடன பொருள்களை வாங்கும் முடிவினை எடுக்க முடியும். தங்கள் வாடிக்கையாளர்களுக்கு முதலீட்டாள்கள் பருவநிலையை மையமாகக் கொண்ட பிரிவுகளை உருவாக்கித் தர முடியும். காப்பீட்டு நிறுவனங்கள் தட்ப வெப்ப ஆபத்துகளை மிக நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். பருவநிலை நிதித் தொழில்நுட்பத்திற்கு இதற்காக நாம் நன்றி செலுத்தியாக வேண்டும். கண்காணிப்பு, மதிப்பீடு செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான சிறப்பான உபகரணங்களை நிறுவனங்கள் வழங்க நிதித் தொழில்நுட்பம் உதவியாக இருக்கிறது.

புதிதாக இதில் சேர்பவர்கள் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இலாபம் தரக்கூடிய அதே சமயம் கார்பன் பாதிப்பு ஏற்படுத்தாத நிதிசார் திட்டங்களில் தான் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர். வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறுவதைக் குறைப்பதன் மூலமாக தங்களது சுற்றுச்சூழல் பாதிப்பை ஈடுசெய்ய மற்றும் தடமறிய வர்த்தகங்களுக்கு இது உதவியாக இருக்கிறது.

மக்கள் மற்றும் வர்த்தகம் என இரண்டு தரப்பில் இருந்தும் எழும் நீண்டகாலத் தீர்வுகளுக்கான தேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் பிரத்யேக வாய்ப்பு இன்றைய ஸ்டார்ட் அப்புகளுக்கு உள்ளது. அவை அதிக அளவிலான தகவமைப்பைக் கொண்டுள்ளன. வாடிக்கையாளர் அனுபவங்களை மறுவரையறை செய்தல் மற்றும் தரவுப் பிரச்சினைகளை சமாளித்துத் தீர்வு காணுதல் ஆகியவற்றில் அவை சிறப்பாகச் செயல்படுகின்றன. ஸ்டார்ட் அப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றோடு நெறிமுறையாளர்களும், அரசாங்கங்களும் சேர்ந்து உலகளாவிய பருவநிலை நிதித் தொழில்நுட்ப சூழல்சார் அமைப்பை உருவாக்குதில் மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றன. நீடித்த நிதிச்சேவை மற்றும் பசுமை நிதித் தொழில்நுட்பம் ஆகிய இரண்டையும் மேம்படுத்த பலவிதமான முன்னெடுப்பு நடவடிக்கைகளும் உறுதியான செயல்திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பருவநிலை நிதித் தொழில்நுட்பத்தின் முதன்மை நோக்கம் என்பது கார்பன் இல்லாத நிலைமையை நோக்கி நிதியினை திசைமாற்றுவது ஆகும். இதைச் சாதிப்பதற்கு நமக்கு ஸ்டார்ட் அப் புத்தாக்கம், வர்த்தக பொறுப்புடைமை மற்றும் அரசுக் கொள்கை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஆற்றல் தேவைப்படுகிறது.

இந்தியாவின் செயல்திட்டம் கூடுதலான முதலீடுகளைக் கொண்டதாகவும் மின்சார உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கை அதிகரிப்பதாகவும், புதைபடிவ எரிபொருளைச் சார்ந்துள்ள வணிகத்தை மின்மயமாக்குவதாகவும், பசுமை ஹைட்ரஜனை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதாகவும், தனது குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் மின்சார வாகனங்கள் பயன்பாட்டை அதிகரிப்பதாகவும் இருக்க வேண்டும். இதனோடு கூடவே, நாடு உயிர் எரிபொருளைப் பயன்படுத்தியாக வேண்டும் மற்றும் கார்பனை கிரகித்து அதன் தாக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும். மேலும் கார்பன் வெளியேற்றம் குறைவாக இருக்கும் எரிசக்தியையும் பயன்படுத்துவதோடு எரிசக்தி உற்பத்திச் செயல்முறையில் நீடித்த நிலையான அணுகுமுறை வேண்டும். இந்தச் செயல் உத்தியானது எண்ணற்ற வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு நீடித்த நிலையான வளர்ச்சிப் பாதையில் நாட்டைச் செலுத்தும்.

சர்வதேச சுற்றுச்சூழல் சிந்தனை அமைப்பு வெளியிட்டுள்ள சர்வதேச பருவநிலை ஆபத்துக்காரணி குறிகாட்டி அறிக்கையில் அதிகம் பாதிக்கப்படக் கூடிய முதல் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. நமது பொறுப்புடைமையை அதிகரிக்க, நமது குறுகியகால, நடுத்தரக்கால மற்றும் நீண்டகால சுற்றுச்சூழல் இலக்குகளை மறுவரையறை செய்ய வேண்டும். இன்றைய காலகட்டத்தின் தேவை என்பது நமது புதுப்பிக்கத்தக்க எரிபொருள் இலக்குகளை நாம் உறுதியாக நிறைவேற்றுவதுவே ஆகும். இரண்டாவதாக, மாசு வெளியேற்றம் அதிகமாக உள்ள தொழில்சாலைகளை கார்பன் இல்லாததாக ஆக்க வேண்டும். கார்பன் வெளியேற்ற அளவைக் குறைப்பதில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தை எட்டியிருந்தாலும் கூட, இரும்பு மற்றும் எஃகு, வேதிப்பொருள்கள் மற்றும் சிமெண்ட் போன்ற கனரகத் தொழில்களில் மாசு வெளியேற்றத்தைக் குறைக்க கூடுதல் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்தக் கனரகத் தொழில்கள் தான் அதிகபட்ச மாசு வெளியேற்றும் தொழில்களாக உள்ளன. இந்தத் தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விரைவான நகரமயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியால் தேவையும் அதிகமாக உள்ளது. மூன்றாவதாக, காடுகள், பெருங்கடல்கள் மற்றும் ஈரநிலம் போன்ற கார்பனை கிரகித்து தக்கவைத்துக் கொள்ளக் கூடிய சூழல் அமைப்புகள் நமக்கு மேலும் கூடுதலாகத் தேவைப்படுகின்றன. மாசு வெளியேற்றத்தைக் குறைக்கும் நமது செயல்களுக்கு இணையாக கூடுதலான ஷகார்பன் புதைகுழிகள்' கட்டாயமாக உருவாக்கப்பட்டாக வேண்டும். உள்ளூர் சமுதாயங்கள் இதில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்ற முடியும். இவர்களில் பெரும்பாலோர் இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையையே வாழ்கின்றனர். வாழ்வாதாரத்திற்கு இயற்கை மூலவளங்களையே பெரிதும் சார்ந்து உள்ளனர்.

எந்த ஒரு அமைச்சகமும் தனித்து நின்று இந்தியாவை நெட் ஜீரோ நிலை நோக்கி எடுத்துச் சென்றுவிட முடியாது என்பதே உண்மை ஆகும். எனவே புதிய மற்றும் புதப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், சுற்றுச்சூழல் காடுகள் மற்றும் பருவநிலை மாறுதல் அமைச்சகம் மற்றும் கனரகத் தொழில்கள் அமைச்சகம் (மின்சார வாகனப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்தும் அமைச்சகம்) ஆகியவை தான் இந்தியாவின் இயக்க சக்தியாக இருந்து தடையில்லாத வளர்ச்சிப் பாதையை உறுதி செய்ய முடியும்.

---

– **அவினாஷ் மிஷ்ரா**, இந்திய அரசின் நிதிஆயோக்கில் (இயற்கை மூலவளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுதல் பிரிவு) ஆலோசகர்.

– **மதுவந்தி தத்தா**, நிதி ஆயோக்கில் இளம் தொழில் நிபுணர்.

# விவசாயிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்

– ஜகதீப் சக்சேனா

இந்தியப் பொருளாதாரத்திற்கு வேளாண்துறை அடித்தளமாக அமைகிறது. பல பெரிய தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களுக்கு முக்கிய ஆதாரமாக வேளாண்துறை விளங்குகிறது. மொத்த மதிப்புக் கூட்டலில் வேளாண்துறை மற்றும் அது சார்ந்த துறைகளின் பங்கு நீண்ட காலமாக 18 சதவிகித அளவில் இருந்து வந்தது. 2020–21இல் இது 20.2 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. கோடிக்கணக்கான மீனவர்கள் கால்நடை வளர்ப்போர் உள்ளிட்ட இந்திய விவசாயிகளின் கடுமையான உழைப்பால் இந்திய வேளாண்துறை நல்ல வளர்ச்சி பெற்று உலகளவில் அங்கீகாரத்தையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. சிறு விவசாயிகள் பொதுவாகவே ஏழ்மையில் வாழ்பவர்கள். நடுத்தர விவசாயிகளின் வருமானத்தில் 39 சதவிகிதத்தை மட்டுமே இவர்கள் பெறுகிறார்கள். பெரிய நிலச்சுவான்தார்களை ஒப்பிடும் போது, இவர்களின் வருமானம் 13 சதவிகிதமே. ஆகவே, பொதுவாக அனைத்து விவசாயிகளுக்கும், அதிலும் குறிப்பாக சிறு விவசாயிகள், விளிம்பு நிலை விவசாயிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

இந்தியாவில் பெரும்பான்மையான விவசாயிகள் விளிம்பு நிலையிலும் (ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலம்), சிறு விவசாயிகளாகவும் (ஒன்று முதல் இரண்டு ஹெக்டேர் நிலம் வைத்திருப்பவர்கள்) உள்ளனர். மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில்; இவர்கள் 86 சதவிகிதம் இருந்தாலும், இவர்களிடம் இருக்கும் விளை நிலங்களின் பரப்பளவு 47.3 சதவிகிதம் மட்டுமே (பத்தாவது வேளாண் கணக்கெடுப்பு 2015–16). இந்த நிலையில் நடுத்தர அளவில் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் (இரண்டு முதல் பத்து ஹெக்டேர் வரை), விவசாயிகளின் மொத்த எண்ணிக்கையில் 13.2 சதவிகிதமே உள்ள நிலையில், விளைநிலப் பரப்பளவில் 43.6 சதவிகிதம் கொண்டுள்ளனர். சிறு விவசாயிகளுக்கு தங்கள் பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்காததற்கு முக்கியமான காரணம் அவர்களிடமிருந்து வாங்குவோர் குறைவாக இருப்பதும், பயிர்களை அறுவடை செய்து குறைந்த விலையில் சந்தைக்கு அளிப்பது அவர்களுக்கு இயலாததாக இருப்பதும், பேரம் பேசுவதில் அவர்களுக்கு அதிகம் சக்தியில்லாததுமே காரணங்களாகும். ஒரு ஆய்வின்படி, விவசாயப் பணியாட்கள் அதிகம் தேவைப்படும் பயிர்களை விளைவிப்பதிலும், கால்நடைகளைப் பராமரிப்பதிலும் சிறு விவசாயிகள் திறம்படச் செயல்படுகிறார்கள் என்று கூறுகிறது. ஆனால் அவர்களிடமிருக்கும் சிறு நிலப்பரப்பில் குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தை ஈட்ட முடிவதில்லை. ஆகவே, சிறு விவசாயிகள் பொதுவாக நலிந்தவர்களாகவும் நடுத்தர விவசாயிகளை விடக் குறைவான வருமானம் பெறுவதாகவும், பெருநிலக்கிழார்கள் பெறுவதில் வெறும் 13 சதவிகித வருமானமே பெறுவதாகவும் கருதப்படுகிறது. இது அல்லாமல், தேசிய மாதிரி ஆய்வின்படி (77வது சுற்று 2019). இந்தியாவில் உள்ள 50.2 சதவிகித விவசாயக் குடும்பங்கள் கடனில் இருப்பதாகவும் சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களின் கடன் அளவு ஆண்டு வருமானத்தில் 60 சதவிகிதம் இருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. ஜூலை 2018 ஜூன் 2019 காலகட்டத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ.1.23 இலட்சமாகவும் சராசரிக் கடன் அளவு ரூ.71,100 ஆகவும் இருந்தது. இந்த ஆய்வின்படி, சொந்தமான நிலம் வைத்திருப்பவர்களின் நில அளவு குறைந்து கொண்டே போவதும், சிறு விவசாயிகளின் அளவு அதிகரித்துக் கொண்டே போவதும் காணப்பட்டது. சராசரி விவசாயக் குடும்பத்தில் சொந்தமான நிலம் அளவு 2003இல் 0.725 ஹெக்டேராக இருந்தது. 2013இல் 0.592 ஹெக்டேராகவும், 2019இல் 0.512 ஹெக்டேராகவும் இது காணப்பட்டது. விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை எப்படி இரட்டிப்பாக்குவது என்பதில் இந்த







நிலை கவலையளிக்கக் கூடியதாக உள்ளது.

ஆகவே, பொதுவாக விவசாயிகள் அனைவருக்கும், குறிப்பாக சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது பாராட்டத் தக்கதாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் கொள்கை வடிவமைப்பாளர்கள் எல்லாத்துறையிலும் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கு நலத் திட்டங்களையும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் தீட்டினார்கள். அவர்களின் கண்ணோட்டத்தில் விவசாயிகள், விவசாயப் பணியாளர்கள் மற்றும் விவசாயம் சார்ந்த பிற துறைகளில் பணியாற்றும் அனைத்து விவசாயப் பணியாளர்களும் சேர்க்கப்பட்டனர். சுதந்திர இந்தியாவில் முதலாவதாக இயற்றப்பட்ட சட்டங்களில் ஒன்று 1948ஆம் ஆண்டின் பணியாளர்களுக்கான அரசு காப்பீடு சட்டமாகும். ஆனால், பணியாளர்களுக்கான அரசு காப்பீடு சட்டத்தின்படி முதலாளி, தொழிலாளி உறவு இருக்க வேண்டும். வேளாண் துறையில் இந்த நிலை கிடையாது. விரைவில் இந்திய அரசு பொருளாதார ரீதியாக நலிந்த மக்களுக்கு நலத்திட்டங்களையும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் துவக்கியது. ஆனால், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் வருமானத்தையும் உறுதி செய்வதற்கான தனிப்பட்ட மிகப் பெரிய திட்டம் 2005இல் தான் உருவாக்கப்பட்டது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் 2005 (இது பிறகு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமாக மாற்றப்பட்டது) நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டு, அது சட்டப்பூர்வமான சமூகப் பாதுகாப்புச் செயல்பாடாகவும், வேலை செய்யும் உரிமையை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்தது. இந்த வகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் தேவைக்கேற்ப கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் ஒரு திட்டமாக அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் அடிப்படையில் திறன் சாரா உடல் உழைப்பு சார்ந்த வேலைவாய்ப்புகளை ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத்திற்கும், ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்களுக்கு வழங்க உறுதி அளிக்கிறது. அப்படி அவர்களுக்கு வேலை வழங்கப்படாவிட்டால், பயனாளிகள் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் வேலையில்லாதவர்களுக்கான படியைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இது அல்லாமல் வறட்சி அல்லது இயற்கைப் பேரிடர் என்று அறிவிக்கப்படும் கிராமப்புற ஊரகப் பகுதிகளில், நிதியாண்டிற்கு கூடுதலாக 50 நாட்கள் திறன்சாரா வேலைவாய்ப்பும் வழங்கப்படும். பல ஆண்டுகளாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச்சட்டம் ஊரக மக்களின் ஏழ்மையைப் போக்கும் வாழ்வாதாரத் திட்டமாகவும், சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, கிராமப்புறங்களில் சொத்துக்களை உருவாக்கி, நிலைத்து நிற்கும் மேம்பாட்டை உருவாக்கும் முதன்மைத் திட்டமாகவும் கருதப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல வகையான திட்டப்பணிகளினால் ஏழை மக்களுக்கு கூலியாகவும், வருமானமாகவும் நீடித்து நிற்கும் சொத்துக்களாகவும் பயனளித்து சிறந்த வாழ்வாதாரத்தை இது வழங்குகிறது. இதன்படி, பெருமளவிலான தொகை இயற்கை வளங்கள் வேளாண்மைக்காக பயன்படுத்தப்படுகிறது (தடுப்பணைகள், குளங்கள், பாரம்பரிய நீர்நிலைகளைப் பராமரித்தல், விவசாய நில எல்லைகள் பராமரிப்பு, நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், பாசனத் திட்டங்கள் ஆகியவை) இதனால் விவசாயிகளின் விளை நிலங்களின் பயிர் செய்யப்படும் அளவு அதிகரித்து, கூடுதல் பயிர்சார் வருமானமும்

கிடைக்கிறது. சமுதாயம் மற்றும் தனிநபர் பயன்பாட்டுச் சொத்துக்களை (ஆடுகளுக்கான கொட்டகை, பிற கால்நடைகளுக்கான கொட்டகை, மண் புழு எரு உற்பத்திக் குழிகள், நீர்த்தேக்கக் குழிகள் ஆகியவை) உருவாக்குவதன் மூலம் வசதியற்ற குடும்பங்களுக்கு மாற்று வாழ்வாதார வசதிகள் கிடைக்கின்றன. திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் மூலம் கிராமங்கள் சுத்தமாவதுடன், கிராமப்புற ஏழை மக்களுக்கு அதிக வருமானமும், மாற்று வாழ்வாதாரமும் கிடைக்கின்றன. 2021-22 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின் கீழ் 15.54 கோடி பணியாளர்கள் இருந்தனர். அவர்களுக்கு 352.91 கோடி மனித நாட்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. 51.85 கோடி அளவில் அவற்றிற்கான பயன்கள், அவர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டது. 7.18 கோடி குடும்பங்கள் பயன்பெற்றன மற்றும் 2.27கோடி வகையிலான தனித்தனித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தீன்தயாள் அந்தியோதயா திட்டம் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (AY-NRLM) என்ற இயக்கமானது கிராமப்புற ஏழை மகளிர் தங்களுக்கான சுய உதவிக் குழுக்களை அமைத்து அவர்களின் ஏழ்மையைப் போக்கிக் கொள்ளும் சிறு திட்டங்களை மேற்கொள்ளும் இந்தத் திட்டம், 2011இல் துவக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் நோக்கம், கிராமப்புறங்களிலுள்ள ஏழைக் குடும்பங்களிலிருந்து எட்டு முதல் பத்து கோடி வரையிலான மக்கள் தங்கள் தொழிலுக்கு ஏற்ற, சுய உதவிக் குழுக்களை அமைத்துக் கொண்டு அவர்களுக்கு அரசு நீண்ட கால நிதி வசதி அளிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை அதிகரித்துக் கொண்டு, தங்களுடைய வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்வதாகும். இந்த சுயஉதவிக் குழுக்கள் நிலைத்துச் செயல்பட்டு, சிறந்த உற்பத்தி மற்றும் விற்பனைத் திறன்களைப் பெற்று, ஏழ்மை நிலையிலிருந்து வெளிவரும் வகையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும். பிப்ரவரி 2022 வாக்கில் இந்த இயக்கம் நாட்டிலுள்ள அனைத்து 28 மாநிலங்களிலும் ஆறு யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 707 மாவட்டங்களில் இருக்கும் 6789 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு, 8.16 கோடி மகளிர் ஒன்று சேர்க்கப்பட்டு, 74.98 இலட்சம் சுய உதவிக்குழுக்களை அமைத்துள்ளனர்.

இந்த சுய உதவிக்குழுக்களுக்கு நிதி ஆதரவாக சுழற்சி நிதியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுவுக்கும் ரூ.10,000 முதல் ரூ.15,000 வரையிலும் சமூக முதலீட்டு ஆதரவு நிதியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுவுக்கும் ரூ.2.5 இலட்சம் வரை நிதி ஆதரவு அளிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் இந்த நிதி ஆதரவுகளைக் கொண்டு தங்கள் அங்கத்தினர்களுக்குக் கடன்களை வழங்கி, அவர்கள் சுய வருமான செயல்திட்டங்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆதரவு அளிக்கின்றன. பிப்ரவரி 28, 2022 கால அளவில் ரூ.17342 கோடி அளவிற்கு மூலதன ஆதரவு சுய உதவிக் குழுக்களுக்கும் அவர்களின் கூட்டமைப்பிற்கும் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் இந்த சுய உதவிக் குழுக்களுக்கு இந்திய அரசின் வட்டி மானியத் திட்டத்தின் கீழ் ஒரே அளவிலான வட்டித் திட்டங்களை வழங்குகின்றன. இதன் ஒரு பகுதியாக இந்தக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் வீட்டுத் தோட்டங்கள், சத்துணவுப் பயிர்கள் மற்றும் குறைந்த விலையிலான சத்துணவுப் பயிர் வளர்ப்புத் திட்டம், நவீன விவசாய மற்றும் அதனைச் சார்ந்த தொழில்நுட்பத் திட்டங்கள், உணவுப் பொருள்கள் பதனீடு, மதிப்புக்கூட்டல், கிராமப்புற காய்கறிப் பொருள்கள் தயாரித்தல் ஆகிய திட்டங்களை மேற்கொள்





கின்றன. 2021ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படும் விவசாயிகள் மேம்பாட்டு மையங்களின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களால் 730 மாநில அளவிலான பயிற்சியாளர்கள் மூலம் 58,000 மகளிர் விவசாயிகள் உருவாக்கப்பட்டு, மேலும் 1,23,000 மகளிர் விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் வழங்கப்பட்டன. விவசாய மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 38,00,000 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தீன்தயாள் உபாத்யாய் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் கீழ் 1.44 கோடி மகளிர் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் (டிசம்பர் 2021). ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமான தேசிய சமூக உதவித் திட்டம் என்ற பெயரில் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு நிதி உதவி அளிக்கும் வண்ணம் சமூக ஓய்வூதியம் வழங்குகிறது. இந்தத் திட்டம் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் செயல்படுத்தப்பட்டு விவசாயிகள், கிராமப்புறக் கலைஞர்கள், சொந்த வீடு இல்லாத தொழிலாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் பயனளிக்கிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட மக்களுக்கும், குறிப்பிட்ட அளவிலான ஓய்வூதியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மத்திய, மாநில அரசுகளால் நிதி வழங்கப்படும் இந்தத் திட்டத்தில் இதுவரை 4,25,17,900 மக்கள் பயனடைந்துள்ளனர். மற்ற பிற அரசுகளும் முன் நின்று செயல்படுத்தும் திட்டங்களும், விவசாயிகளுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும்,




அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் எல்லா நிதித் திட்டங்களிலும் சேர்க்கவும் வழிவகை செய்கின்றன.

**உதவிக்கரம்:**

பெரும்பான்மையான இந்திய விவசாயிகள், குறிப்பாக சிறு மற்றும் விளிம்புநிலை விவசாயிகள், விவசாயப் பருவத்தில் விதை விதைக்கும் தருணத்திலேயே நிதி நெருக்கடியில் சிக்கி கடனாளியாகிவிடுகின்றனர். இந்த நிலைமையை சீர் செய்ய இந்திய அரசு 2019இல் ஒரு முக்கியமான திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டத்தினால் விவசாயிகள் தங்களுடைய வேளாண் செலவுகளுக்கு அதிக வட்டிக்கு தனியாரிடமிருந்து கடன் வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தின் கீழ் எல்லா விவசாயக் குடும்பங்களுக்கும் ஆண்டிற்கு 6000 ரூபாய் வழங்கப்படும். அதிக வருமானம் உள்ளவர்களுக்கு இது கிடைக்காது. மாநில அரசுகளும், யூனியன் பிரதேச அரசுகளும் அளித்துள்ள பயனாளி விவசாயிகள் கணக்கில் இந்தத் தொகை ரூபாய் இரண்டாயிரம் இரண்டாயிரமாக மூன்று முறை நேரடியாகச் செலுத்தப்படும். பிப்ரவரி 22, 2022 வாக்கில் ரூ.1.80 இலட்சம் கோடி அளவிற்கு இந்தியாவிலுள்ள பயனாளி விவசாயக் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில், ரூ.1.29 இலட்சம் கோடி அளவிற்கு கோவிட் 19 பெருந்தொற்றுக் காலத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 11.78 கோடி விவசாயிகளுக்குப் பயனளித்துள்ளது.

சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கு அவர்களுடைய வயோதிக காலத்தில் உதவும் வகையில் சேமிப்பு அதிகம்



இருப்பதில்லை. இந்த நிலையை உணர்ந்த இந்திய அரசு, விவசாயிகளுக்கு 2019இல் ஒரு புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் விவசாயிகள் தாங்களே முன்வந்து மேற்கொள்ளப்படக்கூடிய வகையில் அமைக்கப்பட்டு, 18 வயது முதல் 40 வயது உள்ளவர்கள் மாதந்தோறும் பணம் செலுத்த வேண்டும். உதாரணமாக, 29ஆவது வயதில் சேரும் ஒரு விவசாயி ரூ.100 மாதம் கட்ட வேண்டும். மத்திய அரசும் இணையான தொகையை ஓய்வூதிய நிதிக்கு வழங்கும். ஜனவரி 31, 2022 வரை மொத்தம் 21,86,918 விவசாயிகள் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர் நஷ்டங்களை ஈடுகட்ட பிரதம மந்திரி பயிர்க் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பிப்ரவரி 4, 2022 வரை 36 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்கள் காப்பீடு திட்டத்தில் ஏற்கப்பட்டு, பயிர் நஷ்டஈடாக ரூ.1,07,059 கோடி ரூபாய் அளவில் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மிகவும் நலிந்த விவசாயிகளுக்குப் பயனளிக்கிறது. இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ள 85 சதவிகித விவசாயிகள் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளாக உள்ளனர்.

மத்திய அரசின் திட்டங்கள் அல்லாமல் பல மாநில அரசுகளும் விவசாயிகளுக்கு அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்காக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மஹாராஷ்டிர அரசு 2015 முதல் “கோபிநாத் முண்டே விவசாயிகள் விபத்துக் காப்பீட்டு திட்டம்” ஒன்றை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் விபத்தில் காலமானவர்கள் மற்றும் ஊன முற்றவர்களுக்கும் பயனளிக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் விலங்குகளால் ஏற்படும் தாக்குதல்கள், நக்சல் தீவிரவாதிகளால் ஏற்படும் தாக்குதல்கள், கொலைகள், மின்சார விபத்துக்கள் ஆகியவையும் விபத்துக்களாக கருதப்பட்டு காப்பீடு வழங்கப்படுகிறது. இதே போல் குஜராத் அரசின் விவசாயிகள் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் ஒன்றும் 1996முதல் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் விபத்தில் இறந்து விட்டாலோ, நிரந்தர ஊனங்களை அடைந்தாலோ அவர்களுக்குக் காப்பீடு வழங்கப்படும். இந்தக் காப்பீட்டிற்கான தொகையை மாநில அரசே வழங்குகிறது. இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்களை விவசாயப் பணியாளர்களாகப் பதிவு செய்து கொண்டால் போதும். இந்தத் திட்டத்தில் இருமுனைப் பயனாக ஓய்வூதியமாகவும், விபத்துக்கள் ஏற்பட்டால் காப்பீடு தொகையாகவும் உதவி கிடைக்கும். இதைப் போலவே, உத்திரப்பிரதேசம் மற்றும் பிற மாநிலங்களும் இது போன்ற திட்டங்களை செயல்படுத்துகின்றன.

குறிப்பிட்ட திட்டங்கள் அல்லாமல் விவசாயிகளுக்கும், விவசாயப் பணியாளர்களுக்கும் எல்லா வகையான இடையூறுகளையும் சமாளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தேவை என்று பன்னாட்டுப் பணியாளர்கள் அமைப்பு கூறுகிறது. இவற்றுள் மரணங்கள், உடல் உறுப்பு செயல்பாடு இழப்புகள், நோய்கள், சுகாதாரம், காயங்கள், வேலை வாய்ப்பின்மை மற்றும் பலவகையான விபத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. இப்படிப்பட்ட திட்டங்கள் துடிப்பா கவும் பரவலான உள்கட்டமைப்பு வசதிகளுடனும் அடிமட்ட அளவில் செயல்பட்டால் தான் இறுதிநிலை செயல்பாட்டுத்தன்மையுடன் ஒவ்வொரு விவசாயியும் பயன் பெறுவர். இத்தகைய திட்டங்கள் பற்றி ஊடகங்களின் வழியே எல்லா விவசாயிகளுக்கும் சென்றடையும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

---

**– டாக்டர். ஜகதீப் சக்சேனா**
முன்னாள் முதன்மையாசிரியர்,
இந்திய வேளாண் ஆய்வுக்கழகம்,
புதுடெல்லி.





# ஒருங்கிணைந்த முழுமையான சுகாதாரச் சேவை

**– வைத்யா ராஜேஷ் கொடேச்சா**

மனித வாழ்வு எவ்வளவு பழமையானதோ அதே அளவிற்குப் பாரம்பரிய மருத்துவ அமைப்புகளும் பழமையானவையாகும். அதே போன்று, மனிதகுலத்தின் உடல்நலம், நலவாழ்வு குறித்து அக்கறை செலுத்த வேண்டிய தேவையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுவதும் பன்னெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது. பல நூற்றாண்டுகளாக உலக அளவில் இவை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. பண்டைக்காலத்தின் மருத்துவர்கள் நோய் முறைகளைக் கூர்ந்து நோக்கி அதனை உள்வாங்கிக் கொண்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தி சில சிகிச்சை அமைப்புமுறைகளை உருவாக்கினர். இத்தகைய சிகிச்சை முறைகளே பாரம்பரிய மருத்துவ அமைப்புகளாகப் பரிணாமம் அடைந்தன. கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களின் அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான அறிவு, தொழில்திறன்கள், சிகிச்சை நடைமுறைகளின் தொகுப்பாக பாரம்பரிய மருத்துவ அமைப்புகள் உள்ளன. பாரம்பரிய மருத்துவமானது வெளிப்படையானதாகவோ அல்லது மறைமுகமானதாகவோ இருக்கும். உடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும் உடல் நோய்கள் அல்லது மனநோய்கள் வராமல் தடுக்கவும், கண்டறியவும், நோய்நிலையை குணமாக்குதல் அல்லது சிகிச்சை அளித்தல் ஆகியவற்றுக்கும் இந்த அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. (உலக சுகாதார நிறுவனம், 2017).


உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, உலக மக்கள் தொகையில் 80 சதவிகித நபர்கள் பாரம்பரிய மருத்துவமுறைகளை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தி வருகின்றனர். தனித்துவம் மிக்க, பிரத்யேகமான பாரம்பரிய மருத்துவ அடிப்படை இந்தியாவில் உள்ளது. ஒவ்வொரு பாரம்பரிய மருத்துவ முறையும் தனக்கேயுரிய பண்டைய தத்துவம், மருத்துவ அறிவு, நோக்கு நிலை மற்றும் நடைமுறைகளை பிராந்திய கலாச்சாரங்கள், மரபுகள் மற்றும் நம்பிக்கைகள் சார்ந்து கொண்டுள்ளன. ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, சௌவா ரிக்பா, ஹோமியோபதி ஆகியன இந்தியப் பாரம்பரிய மருத்துவ முறைகளில் உள்ளடங்குபவையாகும். இவற்றையே நாம் "ஆயுஷ்” என்கிறோம். நவீன சுகாதார அறிவியல் தோன்றுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே இத்தகைய மருத்துவமுறைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு முழுமை பெற்றவையாக விளங்கி வந்தன.

உலகின் பல நாடுகளில் பலவகைப்பட்ட மருத்துவமுறைகள் செயல்பாட்டில் இருப்பது நியதியாகவே உள்ளது. ஏற்றுக்கொள்ளக் கூடிய, பாதுகாப்பான, சிக்கனமான, உலக மக்களுக்கு ஒட்டுமொத்த ஆரோக்கிய சேவையை வழங்கக் கூடிய உறுதியான மருத்துவ முறைகளில் ஒன்றாக பாரம்பரிய மருத்துவம் உள்ளது. எந்த ஒரு மருத்துவமுறையும் தனித்து நின்று அனைத்து சுகாதாரப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்து விட முடியாது. ஒவ்வொரு மருத்துவ முறையின் சாதகமான அம்சங்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கும் அணுகுமுறையானது, நிச்சயம் மனிதகுலத்திற்குச் சிறப்பான பலனைத் தரும். நோயாளியை மையமாகக் கொண்ட, முழுமையான, தனிநபர் அடிப்படையிலான அணுகுமுறை என்பதே மரபுவழி மருத்துவத்தின் தனிச்சிறப்பு அடையாளமாகும். இந்த அணுகுமுறையானது நோயாளி மருத்துவர் இருவரும் சம அளவில் பங்கேற்று சிகிச்சையை வடிவமைக்கவோ அல்லது நோயாளிக்கு ஏற்ப மருந்து தயாரிக்கவோ, வாழ்க்கை முறை சார்ந்த ஆலோசனைகளை வழங்கவோ உதவுகிறது. நலவாழ்வின் அதிகபட்ச சாத்தியங்களை அடைவதே இதன் நோக்கமாகும். இத்தகைய விழிப்புணர்வும், பாரம்பரிய மருத்துவமுறைகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்வதும் அதிகரித்து வருகின்ற நிலைமையில் ஒன்றிணைந்த பாரம்பரிய மருத்துவ முறைகள் முன்களத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. நோய்த் தடுப்புக்கான வழிமுறை

முதற்கொண்டு, நோய்நிலையைக் கையாளுதல் வரையிலும் உள்ள பல்வேறு வகையான நடவடிக்கைகளும், கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில் பொது சுகாதாரச் சேவையோடு ஆயுஷ் அமைப்பை ஒருங்கிணைத்து செயல்படுத்தியதும் ஆயஷ் அமைப்புகள் மீது உலகத்தின் கவனத்தை ஈர்த்தன. இந்தக் கவன ஈர்ப்பே ஜாம் நகரில் பாரம்பரிய மருத்துவத்திற்கான சர்வதேச மையத்தை (நிசிஜிவி) நிறுவுவதற்காக புரவலர் நாடு என்ற ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட வழிவகை செய்துள்ளது.

முழுமையான ஆரோக்கியம் என்ற சொல் பல்வேறுபட்ட உள்ளர்த்தங்களுடன் இலக்கியங்களில் பலமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஹோலிசம் என்ற சொல் கிரேக்கச் சொல்லான ஹோலோஸ் என்ற சொல்லில் இருந்து உருவானதாகும். ஹோலோஸ் என்பதன் அர்த்தம் ”முழுமை” என்பதாகும். இதன் அடிப்படையில் பார்த்தால், ஹோலிசம் என்பது முழுமையான கண்ணோட்டத்தில் இருந்து ஒரு விஷயத்தைப் பார்க்கின்ற அணுகுமுறையாகும். முழுமைக் கோட்பாட்டு சுகாதாரம் என்பது தனிநபரை முழுமையான ஓர் அலகாகப் பார்த்து உடல், மனம், உணர்வு, சமூகம், அறிவுத்திறன், ஆன்மீகப் பிரச்சினைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துத் தீர்க்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆரோக்கியத்தை ஆயுர்வேதம் "ஸ்வஸ்த்யா” என வரையறுக்கிறது. ஒருவரின் உள்முக நல்லிணக்கத்தின் இயல்பு நிலையில் உள்ளடங்கி இருக்கின்ற ஒரு நிலைமையை இது குறிக்கிறது.

ஆயுஷ் அமைச்சகம் கோவிட்–19 பெருந்தொற்றுக் காலகட்டத்தில்




வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் ஆயுஷ் அமைப்புகளின் முழுமைக் கோட்பாட்டு அணுகுமுறையை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இந்த வழிகாட்டு நெறிமுறைகளை மேலோட்டமாகப் பார்த்தாலே நோய் வராமல் முன்கூட்டியே தடுத்தல், உணவுமுறை, மன நலம், யோகா அப்பியாசங்கள், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான பரிந்துரைகள் இதிலிருப்பதைப் பார்க்க முடியும். கோவிட்–19 மற்றும் நீண்டகால கோவிட்–19இன் பாதிப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து ஆயுஷ் நோய் முன்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சை முறைகளுடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கான தேவையை வலியுறுத்தும் வகையில் "முழுமைக் கோட்பாட்டு ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு” குறித்த பரிந்துரைகள் வகுக்கப்பட்டுள்ளன.

முழுமையான சுகாதாரம் என்பது நலவாழ்வின் பல பரிமாண அம்சங்களை உள்ளடக்கிய வாழ்க்கைக்கான ஒரு அணுகுமுறையாகக் கருதப்படுகிறது. பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பயன்படுத்துதல், மனம் உடல்–ஆன்மா இணக்குவித்தல், தனவயப்படுத்தல் மற்றும் உடல் அடிப்படையிலான அணுகுமுறைகள், உயிரியல் சார்ந்த சிகிச்சை முறைகள், ஆற்றல் சிகிச்சைகள் ஆகிய பயன்பாடுகளை இத்தகைய அணுகுமுறைகள் உள்ளடக்கி இருக்கின்றன. இத்தகைய அணுகுமுறைகளில் பெரும்பாலானவை ஒன்றுடன் ஒன்று இணைந்தே பயன்படுத்தப்படுகின்றன. ஆரோக்கியத்துக்கு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை வழங்குவதற்காக இவை பாரம்பரிய மருத்துவத்துடன் இணைந்து செயலாற்றுகின்றன. முழுமைக் கோட்பாட்டு அணுகுமுறையில் ஆயுர்வேதம், ஆயுஷ் மருத்துவ முறைகள், அக்குபஞ்சர், அக்குபிரஷர், பயோஃபீட்பேக், மசாஜ் சிகிச்சை, வர்ம மருத்துவ முறை, கைநுட்பச் சிகிச்சை, இயற்கை மருத்துவம், தியானம், யோகா, ரைக்கி மற்றும் ஏனைய ஆற்றல் சிகிச்சை முறைகள் உள்ளிட்ட பலவும் உள்ளடங்கும்.

சுகாதாரப் பராமரிப்பு சேவையில் ஆயுஷ் அமைப்புகளை ஒருங்கிணைப்பதற்காக பல



தளங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆயுஷ் ஒருங்கிணப்பு குறித்த பல தருணங்களும் பல வெற்றிக் கதைகளும் உள்ளன. பொது சுகாதாரத்தில் உத்திசார்ந்த இணைப்பை இவற்றால் ஏற்படுத்த முடியும்.

2014ஆம் ஆண்டு ஆயுஷ் அமைச்சகம் தனியாகத் தொடங்கப்பட்டதிலிருந்து ஆயுஷ் அமைப்புகளைத் திறம்பட ஒருங்கிணைக்கும் பணியானது வேகம் எடுத்தது. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துக்கும், ஆயுஷ் அமைச்சகத்திற்கும் இடையில் சுகாதாரப் பராமரிப்பு குறித்த பல கட்ட சேர்ந்து செயலாற்றுதல் மற்றும் ஒத்துழைப்பு மூலமாக இந்த ஒருங்கிணைப்பானது சாத்தியமானது. அத்தகைய விரிவான ஒருங்கிணைப்புக்கு ஓர் உதாரணமாக தேசிய ஆயுஷ் மிஷன் (NAM) என்பதைக் குறிப்பிட்டுக் கூறலாம். நாடு முழுவதும் இதன் கீழ் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதன் முதன்மை நோக்கம் என்னவென்றால், குறைந்த செலவில் ஆயுஷ் சேவைகளை வழங்க வேண்டும் என்பதே ஆகும். ஆயுஷ் மருத்துவமனைகளையும், மருந்தகங்களையும் தரநிலை உயர்த்துதல், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நலவழி மையங்கள், மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில் ஆயுஷ் வசதிகளும் அலோபதி மருத்துவத்திற்கு இணையாகக் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின் மூலம் அனைவருக்கும் ஆயுஷ் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதும் நோக்கமாகும். முழுமையான நலவாழ்வு மாதிரியை நிறுவுவதற்காக ஆயுஷ் சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைப்பின் மற்றொரு முயற்சியாக புற்றுநோய், நீரிழிவு, இருதய நோய்கள், பக்கவாதம் ஆகியவற்றைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேசிய செயல்திட்டத்தில் (National Programme for Prevention and Control of Cancer, Diabetes, Cardiovascular diseases and Stroke - NPCDCS) ஆயுஷ் அமைப்புகளை ஒருங்கிணைத்திருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆயுஷ் ஆராய்ச்சிக் குழுமங்களை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் சுகாதாரச் சேவைகள் தலைமை இயக்குநர் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த ஒருங்கிணைப்புப் பணியானது நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆயுஷ் சிகிச்சை முறைகளை உட்சேர்ப்பதன் மூலம் தொற்றா நோய்கள் பிரிவில் நோயாளிகளுக்குப் பலனளிக்கும் வகையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதன் மூலம் இந்த ஒருங்கிணைப்பு வெற்றிகரமானதாக இருப்பது தெரிய வருகிறது. மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் நடைமுறைத் தொடர்பியல் செயல்கள் நடைபெறுவதையும், தகவல் பரிமாற்றம் ஏற்படுவதையும் அதிகரிப்பதற்கு இத்தகைய ஒருங்கிணைப்பு உதவியாக இருக்கிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் போது தனித்தோ அல்லது இணை சிகிச்சை முறையாகவோ ஆயுஷ் பயன்பட்டது என்பதை பொது வெளியில் கிடைக்கக்கூடிய நோயாளிகளின் அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. தீவிர கோவிட்–19 நோய் நிலைமையிலும் கூட நோயைக் குணப்படுத்த ஆயுஷ் பயன்பட்டுள்ளது என்பது இந்த அறிக்கைகளின் வாயிலாக வெளிப்படுகிறது. கோவிட்–19 பெருந்தொற்றின் போது ஆயுஷ் அமைச்சகம் பல மருத்துவப் பரிசோதனைகளை நடத்தியது. மருத்துவமனை சார்ந்து சிகிச்சை மூலம் நோயிலிருந்து மீண்டெழுதல், தரமான வாழ்க்கை நிலைமை ஆகியன மிதமான மற்றும் நடுத்தர கோவிட்–19 நோயாளிகளிடம் ஏற்பட்டன என்பது வெற்றிகரமான விளைவுகளாக அமைந்தது. கோவிட்–19 பெருந்தொற்றின் போது உருவாக்கப்பட்ட வலுவான சாட்சியங்கள் ஆயுஷ் பயன்பாடு குறித்துத் தெரிந்து கொள்வதற்கான




## நோய் எதிர்ப்பு சக்திக்கு

# ஆயுஷ்

அஸ்திவாரத்தை எழுப்பித்தந்தன. ஆயுஷ் சிகிச்சைகள் / நடைமுறைகளின் பயன்பாடு தொற்றுநோய்களைப் பொறுத்து நோய் வராமல் முன்கூட்டியே தடுத்தல், நோய் நிலைமையைச் சமாளித்தல், மறுவாழ்வு ஆகிய அம்சங்களில் எவ்வாறு இருந்தன என்பதற்கான அடிப்படையாகவும் இது இருக்கும்.

ஆயுஷ் அமைச்சகம் "கோவிட்–19ஐக் கையாள்தற்காக ஆயுர்வேதம், யோகா அடிப்படையிலான தேசிய மருத்துவமனைசார் மேலாண்மைச் செயல் நிரலை வெளியிட்டது. பாரம்பரியமான ஆயுர்வேத அறிவின் அடிப்படைகள், மருத்துவமனைசார் சிகிச்சை அனுபவங்கள், உயிரியல் நம்பகத்தன்மை, நடைபெற்று வரும் மருத்துவமனை சார்ந்த ஆய்வுகளின் போக்குகள் ஆகியன இந்தச் செயல்நிரலில் சேர்க்கப்பட்டிருந்தன. ஆயுஷ் மருத்துவர்கள் கோவிட்–19ஐக் கையாளும் போது அவர்கள் முடிவு எடுக்க உதவும் வகையில் இந்தச் செயல்நிரல் வெளியிடப்பட்டது.

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலகட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பின் நிலை மேலும் வலுவடைந்தது. அதுமட்டுமின்றி ஆயுஷ் அமைச்சகம் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் நடைமுறைப் பங்காண்மை உறவுகளை ஏற்படுத்தியது. ஆயுஷ் அமைச்சகமும், எய்ம்ஸ் மருத்துவமனையும் இணைந்து எய்ம்ஸ் வளாகத்தில் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான துறையை நிறுவியது என்பது இந்த வகையில் மிகவும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய முன்னெடுப்பாகும். இதே போன்ற முயற்சிகள் ஜாஜ்ஜரில் உள்ள தேசியப் புற்றுநோய் நிலையத்தில் ஒருங்கிணைந்த ஆயுஷ் புற்றுநோய் சிகிச்சை வசதிகளை ஏற்படுத்தவும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஆயுஷ் அமைச்சகம் இங்கிலாந்தில் உள்ள ஒரு கல்வி நிலையத்தோடு (London School of Hygiene & Tropical Medicine) இணைந்து கோவிட்19 தொற்றைக் குணப்படுத்துவதில் அஸ்வகந்தாவின் (Withaniasomnifera) பங்கு குறித்து ஆய்வு செய்ய உள்ளது. சர்வதேச அளவில் ஆயுஷ் அமைப்புகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதை அதிகரிக்கும் வகையில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டு வருகிறது. இது ஆயுஷ் அமைப்புகளின் வளர்ச்சிக்கான நேரடி முயற்சியாக இருப்பதோடு ஒருங்கிணைப்பின் எல்லைகளை விரிவாக்குவதாகவும் உள்ளது.

பாரம்பரிய மருந்துகளைப் பயன்படுத்தும் போக்கு தற்போது அதிகரித்து வருகிறது. அதே போன்று பாரம்பரிய மருந்துத் தயாரிப்புத் தொழிற்சாலைகளும் வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. பாரம்பரிய மருந்துகள் / சேவைகள் உலகமயமாவது விரிவடைந்து வருகிறது. நவீன கருவிகள், தொழில் உத்திகளின் அறிவுக்கான அடிப்படையுடன் ஆயுஷ் கோட்பாடுகளின் நடைமுறைகளை ஒருங்கிணைப்பது என்பது ஆயுஷ் அமைப்புகள் உலக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உதவியாக இருக்கும். முழுமையான ஆரோக்கியம் என்பது மனம்–உடல்–ஆன்மா–ஆகியவற்றின் ஒருமைப் பாட்டை வலியுறுத்துகிறது. இதில் இலக்கு என்பது, ஆரோக்கியத்தின் அனைத்து கூறுகளிலும் நலவாழ்வை அடைவது என்பதே ஆகும். சுகாதாரச் சேவைகளின் கட்டமைப்புக்குள் பாரம்பரிய மருத்துவத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வது என்பது திறன்மிக்க, சிக்கனமான மற்றும் பழமைசார் சுகாதார சிகிச்சை ஆகியவற்றுக்கான உறுதியான வழியாகும்.

**– வைத்யா ராஜேஷ் கொடேச்சா**
ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளர்.







# வ.உ.சி.யின் பொருளாதார தேசியம்

**– ஆ. சிவசுப்பிரமணியன்**

இந்திய விடுதலை இயக்க வரலாறானது நெடிய பாரம்பரியம் கொண்ட ஒன்று. பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் இறுதியில் இந்தியா என்ற நாடாக உருப்பெற்று விடுதலை அடையும் வரை பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை எதிர்கொண்டு அது வளர்ந்து வந்துள்ளது. இவ் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் இந்தியாவின் விடுதலை இயக்கமானது ஒன்றுக்கொன்று மாறுபாடான அரசியல் சமூகச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டதுடன், பல்வேறு ஆளுமைகளின் தலைமையை ஏற்று வெகுமக்கள் திரளின் பங்களிப்பையும் பெற்று வெற்றிபெற்ற இயக்கமாகும். இவற்றை எல்லாம் முழுமையாக இணைத்து ஆராய்ந்தால் தான் இந்திய நாட்டின் விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியைக் கண்டறிய முடியும்.



கப்பலோட்டிய தமிழன்
**வ.உ.சி 150**

இந்திய விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியைப் பின்வரும் ஐந்து கட்டங்களாகப் பகுத்துக்கொள்ள இடமுண்டு. அவை வருமாறு:

1. குறுநிலமன்னர்கள், வட்டார ஆட்சியாளர்கள் (பாளையக்காரர்கள், சமின்தார்கள்) பழங்குடிகள் ஆகியோரின் எழுச்சி
2. ஆங்கிலேயர்கள் உருவாக்கிய படைப்பிரிவினரின் எழுச்சி (1806 வேலூர் எழுச்சி, 1857 சிப்பாய் எழுச்சி)
3. இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தோற்றம்.
4. சுதேசி இயக்கம் தீவிரவாதப் புரட்சி இயக்கம்
5. காந்தியத் தலைமையை ஏற்றுக்கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம்

ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு கால அளவிற்குள் இவ்வியக்கங்கள் உருவாகி இந்திய விடுதலை இயக்கத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தி மறைந்து போயின என்பது வரலாற்று உண்மை. இவை ஒவ்வொன்று குறித்தும் தனித் தனியாக ஆராய இடமுண்டு. எனினும், வ.உ.சி. இணைந்து செயல்பட்ட சுதேசி இயக்கம் குறித்த சில செய்திகளை மட்டும் இங்கு அறிமுகம் செய்து கொள்வது அவசியமான ஒன்றாகிறது.

### சுதேசி இயக்கம் :

ஆங்கில அரசின் உயர் பதவிகளுக்கு மனுப்போடும் அமைப்பாக, காங்கிரஸ் இயக்கம் தொடக்கத்தில் இருந்த நிலையில்,

திலகரின் வருகையானது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 'சுயராச்சியம் என் பிறப்புரிமை' என்று அவர் முன்வைத்த முழக்கமானது உயர்கல்வி கற்றவர்கள், சொத்துரிமையாளர்கள் என்ற எல்லைகளையும் கடந்து சராசரி மனிதர்களையும் ஈர்த்தது. இதன் வளர்ச்சி நிலையாக உருப்பெற்ற ஒன்று தான் சுதேசி இயக்கம். 1905இல் கர்சான் அறிவித்த வங்கப் பிரிவனைக்கு எதிரான மக்கள் எழுச்சி சுதேசி இயக்கத்தை வலுப்பெறச் செய்தது.

சுதேசி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்களாக,

(1) சுயராச்சியம்
(2) சுதேசித் தொழில்முயற்சி
(3) அந்நியப் பொருள் புறக்கணிப்பு
(4) தேசியக் கல்வி


என்பன அமைந்தன. இக்குறிக்கோள்கள் 'பொருளாதார தேசியம்' என்ற அடையாளத்தை இவ்வியக்கத்துக்கு வழங்கின. இவ்வியக்கத்தின் செயல்பாட்டை இது மாற்றியமைத்தது. இதற்கு முன் காங்கிரஸ் இயக்கமானது நிலக்கிழாரகள், வழக்கறிஞர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இவர்களுள் வழக்கறிஞர்களின் ஆதிக்கத்தைப் பொறுக்க இயலாத நிலையில், தமிழ்நாட்டின் மூத்த தேசிய இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜி.சுப்பிரமணிய அய்யர் காங்கிரஸ் இயக்கத்தில் வழக்கறிஞர்களின் பங்களிப்பு குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

முதலில் காங்கிரஸ் அபிமானிகளெனப் பெயர் பெற்ற வக்கீல்கள் பலருக்கு கவரன்மெண்டார் உத்தியோகம் கொடுக்கின்றதாய்க் கையை நீட்டியவுடன் அவர்கள் தங்கள் காங்கிரஸ் அபிமானத்தையும், தேசாபிமானத்தையும் மூட்டை கட்டி வைத்து விட்டு உடனே சர்க்கார் ஊழியஞ் செய்யத் தலைப்பட்டார்களின்றித் தாங்கள் தேசத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்காக சொந்த லாபத்தை வெறுக்கக்கூடிய மன விசாலம் அவரகளிடமில்லாது போயிற்று. (குருமலை சுந்தரம் பிள்ளை 1907 : 4344).

இத்தகைய அரசியல் சூழலில் உருவான சுதேசி இயக்கம், புதிதாகத் துளிர்விட்டு வளரத் தொடங்கிய இந்தியத் தொழில் முதலாளிகளையும், தொழிலாளிகள், வணிகர்கள், மாணவர்கள் என ஆங்கில ஆட்சியில் உருப்பெற்ற புதிய மக்கள் பிரிவினரையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது. இத்தகைய சூழலில் தான் வ.உ.சி.யின் அரசியல் நுழைவு தொடங்கியது.

### வ.உ.சி.யும் சுதேசி இயக்கமும்:

சட்டக்கல்வி பயின்ற வ.உ.சி தன் வழக்கறிஞர் பணியை தம் பூர்வீக ஊரான ஒட்டப்பிடாரத்திலேயே தொடங்கினார். அப்போது 1898ஆவது ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினராக அவர் இருந்துள்ளார். இச்செய்தி சுதேசமித்திரன் நாளேட்டில் வெளியாகியுள்ளது என்ற உண்மையை பெ.சு.மணி வெளிப்படுத்தியுள்ளார். மற்றபடி அவரது அரசியல் செயல்பாடுகள் எவையும் பெரிய அளவில் நிகழவில்லை. ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் அவரது செயல்பாடுகள் கையூட்டுக்கு எதிராகவும், நீதித்துறை, காவல்துறை என்ற துறைகளின் 'கருப்பு ஆடுகளுக்கு' எதிராகவும் இருந்தன. ஒரே நேரத்தில் வலுவான இரு அரசுத் துறைகளின் பகைக்கு அவர் ஆளாவதை அவரது தந்தை விரும்பாத நிலையில், அவரை ஒட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள தூத்துக்குடிக்கு இடம் பெறச் செய்தார். துறைமுக நகரமாகவும், தொழில் நகரமாகவும் விளங்கிய தூத்துக்குடி நகருக்கு 1900இல் ஆண்டில் வ.உ.சி இடம் பெயர்ந்து சென்ற பின்பே, அவரது அரசியல் செயல்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. அவை சுதேசி இயக்கம் சார்ந்தே அமைந்தன.




தூத்துக்குடியில் இருந்து வெளியான "தமிழ் நேஷனல் பத்திரிகை"என்ற இதழில் சுதேசிப் பண்டகசாலை பற்றிய விளம்பரம்.

தொடக்கத்தில் சுதேசி இயக்கத்தின் குறிக்கோள்களில் ஒன்றான சுதேசித்தொழில் முயற்சி என்பதை மேற்கொள்ளும் வழிமுறைகளில் ஒன்றாக, 'சுதேசிப் பண்டகசாலை' என்ற அமைப்பை நிறுவினார். இது இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மட்டுமே வாங்கி விற்கும் பணியை மேற்கொண்டது. சுதேசி இயக்கத்தின் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் நோக்கில் சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பு சென்னையில் இயங்கி வந்தது. சுதேசி இயக்கத்தின் குறிக்கோள்களை மக்களிடம் பரப்புவதே இதன் குறிக்கோளாகும். இதன் கிளை ஒன்றையும் தூத்துக்குடியில் வ.உ.சி. உருவாக்கினார்.



### சுதேசிக் கப்பல் நிறுவனம்:

இதன் அடுத்தகட்ட முயற்சியாக சுதேசி நாவாய்ச் சங்கம் ஒன்றையும் அவர் நிறுவினார். 1882ஆவது ஆண்டின் இந்தியக் கம்பெனிச் சட்டத்தின்படி, ஒரு கூட்டுத்தொழில் நிறுவனமாக 1906ஆவது ஆண்டு இது பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனத்தின் நோக்கங்களாக அது வெளியிட்டிருந்த விவர அறிக்கை சுதேசிய இயக்கத்தின் பொருளாதார தேசியச் சிந்தனைப் போக்கை உள்வாங்கி இருந்தது.




சுதேசிக் கப்பலை வரவேற்கும் காட்சி இந்தியா இதழின் அட்டையில்.

இரண்டு கப்பல்களை விலைக்கு வாங்கி கப்பல் நிறுவனம் செயல்படத் தொடங்கியது. 1907 ஆவது ஆண்டின் இறுதியிலும், 1908இன் இறுதியிலும் தூத்துக்குடியில் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த 'பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' (BISN Company) என்ற ஆங்கிலக் கப்பல் நிறுவனம் இழப்பை எதிர் கொண்டது. சுதேசிக் கப்பல்களில், பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்தது (Rajendran.N.1994:93).

எனினும் ஆங்கில அரசின் அடக்குமுறையும், வ.உ.சி. சிறை சென்றமையும் சுதேசிக்கப்பல் நிறுவனம் தொடரந்து இயங்க முடியாத நிலையை ஏற்படுத்தி, அதை மூடிவிடும்படிச் செய்துவிட்டது. வ.உ.சி. சிறையில் இருக்கும் போது, சுதேசிக் கப்பல் கம்பெனியின் இயக்குநர்கள் அந்த நிறுவனத்தை, பி.ஐ.எஸ்.என். நிறுவனத்திற்கே மீண்டும் விற்றுவிட்டனர்.

### தொழிலாளர் போரட்டம்:

தொழிற்சாலைகளை நிறுவும் செயலை ஆங்கிலேயர்கள் இந்தியாவில் மேற்கொண்ட பின்னர் இயந்திரத் தொழில் வளர்ச்சி இந்தியாவில் வளரலாயிற்று. 1850இல் இருந்து 1855 வரையில் பருத்தி, சணல் ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் தோன்றின. இது படிப்படியாக வளர்ச்சி பெறலாயிற்று. 1879இல் 56 ஆக இருந்த பருத்தி ஆலைகளின் எண்ணிக்கை 1894 1895இல் 144ஆக உயர்ந்தது. இது போன்றே சணல் ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் எண்ணிக்கையில் அதிகரித்தன. இவ்வளர்ச்சியானது இதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஆங்கிலக் காலனியவாதிகள் ஆலைகளை உருவாக்கிய பின்னரே, இந்தியாவின் சமூக வரலாற்றில் தொழிலாளர்கள் அறிமுகம் ஆனார்கள். இதற்கு முன் வேளாண்மை, கைத்தொழில்கள் சாந்தே உடல் உழைப்பு நிகழ்ந்தது. நவீன இயந்திரத் தொழில் அறிமுகமான பின்னரே தொழிலாளர்கள் என்ற புதிய பிரிவினர் தோன்றினாரகள்.

இப்புதிய பிரிவினரின் உழைப்பு நேரம் அதிகமாகவும், ஊதியம் குறைவாகவும் இருந்தது. ரீஆய் (Lord Reoy) என்ற இந்திய அதிகாரி இலண்டனில் உள்ள ஆங்கில முதலாளிகளிடம் 1905இல் உரையாற்றும் போது இந்தியாவில் தொழில் தொடங்க வருமாறு அவர்களை அழைத்தான். அப்போது அவனது உரையில், இந்தியாவில் நிலவும் சாதகமான சூழ்நிலைகளாக, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைப்பது, தொழிற்சங்கங்கள் இல்லாதது என்ற இரண்டையும் குறிப்பிட்டுள்ளான். தொழிலாளர் நலனைக் காப்பதில் காலனிய அரசு அக்கறை காட்டவில்லை. அப்போதைய காங்கிரஸ் இயக்கமும் இவர்களைக் கண்டு கொள்ள வில்லை.

சுதேசி இயக்கம் இவர்களை மையப்படுத்தி தொழிற்சங்கங்களை உருவாக்கத் தொடங்கியது. ஒரு வகையில் இது தொழிலாளர்களை முன்னிலைப்படுத்திய அரசியல் இயக்கமாகும். ஆலை உரிமையாளர்களாகப் பெருமளவில் ஆங்கிலேயர்களே இருந்த நிலையில், அதில் பணிபுரிந்த தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதென்பது ஆங்கில எதிர்ப்பின் ஒரு வடிவம்தான் என்பதில் ஐயமில்லை. கல்கத்தா, மும்பை ஆகிய நகரங்களில் சுதேசி இயக்கம் மேற்கொண்ட இச்செயலை அடிப்படையாகக் கொண்டு, தூத்துக்குடியில் இயங்கி வந்த கோரல் மில் என்ற ஆலையில் வேலைநிறுத்தம் ஒன்றை சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி நடத்தினார். அது ஆங்கிலேயர்களுக்கு உரிமையான பஞ்சாலை. 1908 பிப்ரவரி 27இல் தொடங்கிய இவ்வேலை நிறுத்தம் 07மாரச்



VANDE MATARAM

No 1723 — Rs. 25

THE SWADESHI STEAM NAVIGATION COMPANY, LIMITED.

TUTICORIN.

Share Certificate.

INCORPORATED AND REGISTERED UNDER THE INDIAN COMPANIES ACT VI OF 1882 AS No 13 OF 1906-1907

CAPITAL Rs. 10,00,000, DIVIDED INTO 40,000 SHARES OF Rs. 25. EACH.

This is to certify that S. Nagalingampillay of Thodalankrut, Shiyali is the Registered proprietor of Share No. 20662 in the SWADESHI STEAM NAVIGATION CO., LTD. subject to the Memorandum and Articles of Association of the Company and that up to date there has been paid in respect of this Share the sum of Rupees Twenty five only.

Given under the Common Seal of the Company.

TUTICORIN. this Tenth day of November 1907.

Secretary — Directors

1908இல் வெற்றிகரமாக முடிவுற்றது. இது குறித்து அரவிந்தர் தமது வந்தேமாதரம் (Bande Mataram) இதழில் (13-03-1908) 'தூத்துக்குடி வெற்றி' என்ற தலைப்பில் நீண்ட தலையங்கம் எழுதியுள்ளார். அதில், "தூத்துக்குடித் தொழிலாளர் போராட்டம் மாறுபட்டது. தனித்தன்மையான ஒரு தொழிலாளர் போராட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது....கோரல் மில் தொழிலாளர்களின் துயரங்களும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் பரந்துபட்ட இந்திய நாட்டின் துயரங்களே, இந்த நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளே என்று இத்தலைவர்கள் உணர்த்தியுள்ளார்கள்" என்று பாராட்டி அவர் எழுதியுள்ளார். ருஷ்யாவை ஆண்டு வந்த ஜார் மன்னனின் இந்தியத் தூதராக மும்பையில் இருந்த செக்கின் (Chirkin) என்பவரும் ஜாருக்கு அனுப்பிய அறிக்கையில் "இது திறம்பட நடத்தப்படும் வேலை நிறுத்தம் ஆகும். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உணவு வழங்க வேலை நிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்" என்று குறிப்பிட்டி ருக்கிறார் (Reisner: 1966:157).

## பருத்தி ஆலை:

சுதேசிக் கப்பல் நிறுவனத்தை அடுத்து வ.உ.சி. உருவாக்க நினைத்த ஒரு தொழில் நிறுவனம் பருத்தி ஆலையாகும். இது தொடர்பாக தூத்துக்குடி நகரில் வ.உ.சி. ஆற்றிய உரை ஆங்கில அரசின் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டு, பின் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

1912 திசம்பர் 24ஆவது நாளன்று வ.உ.சி. கண்ணனூரச் சிறையில் இருந்து விடுதலையானார். இதன் பின்னர் சென்னை நகரில் சிறிது காலம் வாழ்ந்தார் (1913–1920). அவரது குடும்பப் பொருளாதார நிலை மிகவும் சீர்கேடு அடைந்திருந்தது. குற்றவியல் சட்டத்தின்படி அவர் தண்டிக்கப்பட்டிருந்தமையால் வழக்கறிஞராகத் தொழில்புரியும் உரிமை அவரிடமிருந்து பறிக்கப்பட்டிருந்தது. அரிசி, நெய், எண்ணெய் வாணிபத்தில் அவர் ஈடுபட்டார். அதில் அவர் வெற்றி பெறவில்லை. சுயராச்சிய நிதியில் இருந்து திங்கள் தோறும் திலகர் அனுப்பிய ஐம்பது ரூபாய் அவருக்கு ஓரளவுக்குக் கைகொடுத்தது. தேசிய இயக்கவாதியாயும், தொழிற்சங்கவாதியுமான திரு.வி.கவுடன் இணைந்து பஞ்சாலை, டிராம்வே தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டார். சென்னை மாநிலத்தின் பழமையான தொழிற்சங்கங்களில் ஒன்றான தபால் ஊழியர் சங்கத்தை உருவாக்கியதில் இவரது பங்களிப்பும் உண்டு.

சென்னை நகரில் வாழ்ந்து வந்த தொழிற்சங்கவாதிகளான திரு.வி.க., சக்கரைச் செட்டியார், சிங்காரவேலர், எம்.சி.ராஜா, செலவபதிச் செட்டியார் ஆகியோருடன் இணைந்து தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி வளர்த்தார் வ.உ.சி. இரயில்வே தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங்கள் அமைக்கும் பணியிலும் அவர் ஈடுபட்டார். அப்போது இரயில் துறை ஆங்கில முதலாளிகளின் தனிச்சொத்தாக இருந்தது. தெற்கு மராத்தா இரயில்வே ஊழியர்களை எச்சரிக்கும் குறுநூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி 1920இல் வெளியிட்டார்.

1922இல் கோயம்புத்தூரில் நிகழ்ந்த ஸ்டேன்ஸ் ஆலை வேலை நிறுத்தம் இவரது தூண்டுதலால் நடந்ததாக ஆங்கில அரசின் 1923ஆவது ஆண்டு ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது. இவ்வாறு ஆலைத் தொழிலாளர் நலனுக்காக உழைத்த வ.உ.சி., வேளாண்மையில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்களின் முன்னேற்றம் கருதி 11-10-1921 இல் 'சென்னை விவசாயக் கைத்தொழில் சங்கம்' என்ற சங்கத்தை உருவாக்கியுள்ளார் (கதிர்நம்பி 2021:33).



## பொருளாதார தேசியம்:

அடிமைப்பட்டிருக்கும் நாடொன்று தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடுவது இயல்பான ஒன்று. இது பெரும்பாலும் அரசியல் போராட்டமாகவே வெளிப்படும். ஆனால் தனித்த அரசியல் போராட்டமென்பது முழுமையானதன்று. ஏனெனில், ஒரு முழுமையான போராட்டமென்பது அரசியலை மட்டுமே உள்ளடக்கியதல்ல. பொருளாதாரப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம் என்ற இரண்டையும் உள்ளடக்கிய அரசியல் போராட்டமே முழுமையான போராட்டமாக அமைய முடியும்

இந்திய விடுதலை இயக்கத்தில் அரசியல் போராட்டமே பெரும்பாலும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பொருளாதார தேசியத்தை சுதேசி இயக்கம் முன்வைத்தது. சுதேசி இயக்கத்தை முன்னெடுத்த வ.உ.சி. சுதேசிப் பண்டகசாலை என்ற அமைப்பையும், சுதேசிக் கப்பல் நிறுவனத்தையும் நிறுவியதுடன், பருத்தி ஆலை ஒன்றைத் தூத்துக்குடியில் நிறுவப் போவதாக அறிவித்தும் சுதேசிப் பொருளாதாரத் தேவையை மக்கள் அறியும்படிச் செய்தார். ஆலைத் தொழிலாளரின் நலன் காக்க அவர் நடத்திய போராட்டமும் தொழிற்சங்கப் பணிகளை அவர் மேற்கொண்டமையும் பொருளாதாரப் போராட்டம் சார்ந்ததுதான்.

தீண்டாமை, சாதிப்பாகுபாடு என்பனவற்றை தமது ஓட்டப்பிடாரம் வாழக்கையிலேயே புறக்கணித்தவர் அவர். இவை எல்லாம் பண்பாடு சார்ந்தவை. ஆனால் தமது சுதேசி இயக்கத்தில் இவற்றை அவர் இணைத்துக் கொள்ளவில்லை. சிறை வாழ்க்கையிலும், விடுதலையான பின்னரும் அவரது உரைகளிலும், எழுத்துக்களிலும் இவை அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. அத்துடன் அவரது செயல்பாடுகளிலும் இவை வெளிப்பட்டுள்ளன. இத்துடன் பண்பாட்டின் ஒரு கூறான மொழியை மையமாகக் கொண்டு அவர் ஆற்றிய பணிகளையும் சேர்த்துக் கொள்ள இடமுண்டு.

இவ்வகையில் சுதேசி இயக்கம் என்ற அரசியல் போராட்டத்தில் ஆர்வம் காட்டிய வ.உசி. அத்துடன் நின்றுவிடாமல் பொருளாதாரப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம் என்ற இரண்டையும் அத்துடன் இணைத்துப் போராடியுள்ளார். இது அவரது தொலை நோக்கான பார்வையை வெளிப்படுத்தி நிற்கிறது. இப்பார்வையே பரந்துபட்ட தளத்தில் அவரை நிற்கச் செய்துள்ளது.

அரசியல் போராட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்ற நாடுகள் மற்ற இரண்டு போராட்டங்களையும் புறந்தள்ளிவிடும்போது பல உள்நாட்டுக் குழப்பங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. முழுமையான வெற்றியடையாத ஒரு வெற்றிடத் திற்குள் (vacuum) இயங்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். வ.உ.சி. இவ்வுண்மையை உண்ர்ந்திருந்தார்.

இவருக்குப் பின்னர் பரந்துபட்ட இந்தியாவின் தலைவராக விளங்கி, இந்திய விடுதலையின் போதும் தலைவராக விளங்கிய காந்தியடிகள் இவரைப் போன்றே மேலே குறிப்பிட்ட மூன்று கூறுகளையும் உள்வாங்கிக் கொண்டவர்தான். இருப்பினும் இவ்விருவருக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் உண்டு.

எவ்வாறெனில் காந்தியின் பொருளியல் சிந்தனைகள் மரபு சாரந்தவை. அவர் அறிமுகம் செய்த தக்களி, கைராட்டை (சர்கா), தறி என்பன மரபு சார்ந்த கருவிகள். அவரது கதர் ஆடை இவற்றின் துணையால் உருவானது. அவர் அறிமுகம் செய்த எண்ணெய்ச் செக்கும் மரபு சார்ந்ததுதான். மொத்தத்தில் அவரது பொருள் உற்பத்திமுறை என்பது மரபு சாரந்த ஒன்றாக விளங்கியது. இவ்வகையில் அவர் இலண்டனில் வாழ்ந்து கல்வி பயின்றாலும், ஐரோப்பிய நாடுகளில் தோன்றி வளர்ந்த அறிவொளிக் காலத்திற்கு (Period of enlighten ment) ஆட்படாதவராகவே இருந்துள்ளார். மரபுவழி சார்ந்த ஆடை உற்பத்தி முறையையே அவர் முன்மொழிந்தார். ஆனால் இலண்டன் செல்லாத வ..உ.சி தொழிற்புரட்சியின் தாக்கத்திற்கு ஆட்பட்டிருந்தார். இச் சிந்தனைப் போக்கு அவர் மிகவும் உயர்வான நூலாகப் போற்றிய திருக்குறள் குறித்த அணுகுமுறையிலும் வெளிப்பட்டது. 1928ஆவது ஆண்டில் காரைக்குடியில் ஆற்றிய சொற்பொழிவில் பின்வருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்:

"திருவள்ளுவர் ஒரு கவி. ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாள் என்றும், வில் என்றும், வேல் என்றும் இருக்கிற தேயன்றித் துப்பாக்கியென்றாவது, பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்கு சாதனங்களாகத் துப்பாக்கியும், பீரங்கிகளுமேயிருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படின் என்ன செய்வது.? வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. எனவே அச்சாதனங்களைக் கொண்டு நான் போர் புரியமாட்டேன். வள்ளுவருக்கு என்ன புத்தியில்லையா? அவரைக் காட்டிலும் நாம் என்ன மேதாவிகளாகிவிட்டோமா என்று

இப்பொழுது ஒருவன் கூறிக் கொண்டிருப்பானானால் அது எவ்வளவு மூடத்தனம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்" (குமரன் 1928: பக்கம்2).

நூற்பாலையில் நூற்கப்பட்ட நூலால் கைத்தறியில் நெய்யப்பட்ட ஆடையையே அவர் ஆதரித்தார். இதன் வழி நவீன நூற்பாலைத் தொழிலையும், மரபு சார்ந்த நெசவுத் தொழிலையும் ஒருங்கிணைத்தார். ஏனெனில், ஆலைகள் பரவலாக உருவாகி அதில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிய ஆரம்பித்துவிட்டார்கள். மற்றொரு பக்கம் மரபு சார்ந்த நெசவுத் தொழிலைப் பாரம்பரியத் தொழிலாகக் கொண்டு பல்லாயிரக் கணக்கான நெசவாளிகளும் வாழ்ந்தனர். இவ்விரு பிரிவினரையும் இணைக்கும் கைத்தறி ஆடையையே அவர் ஆதரித்தார். தாமும் கைத்தறி ஆடையே அணிந்தார். இது அவர் சார்ந்திருந்த சுதேசி இயக்கத்துடன் இணைந்ததாய் அமைந்தது. இதனால் அவர் சுதேசி சிதம்பரம் என்று அழைக்கவும் பட்டார்.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் அவர் பதிப்பித்து வெளியிட்ட திருக்குறள் மணக்குடவர் (அறத்துப்பால்) உரையில், 'இந்நூலின் தாள், அச்சு, மை, கட்டு எல்லாம் சுதேசியம்' என்ற வரிகளை அச்சிட்டிருந்தார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் அவருக்கு உடன்பாடில்லை. ஒத்துழையாமை குறித்த கருத்து வேறுபாட்டினால் சிறிது காலம் காங்கிரஸ் கட்சியில் இருந்து வ.உ.சி விலகியிருந்தார். இருப்பினும் தமது தூத்துக்குடி வாழ்க்கையில் காங்கிரஸ் நடத்தும் பொதுக் கூட்டங்களில் ஒரு பார்வையாளராக கலந்துகொள்வதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு முறை டாக்டர் வரதராஜுலு நாயடு உரையாற்றிய போது இவர் அதில் கலந்து கொண்டார். அப்போது நடந்த நிகழ்வு வருமாறு:

வரதராஜுலு நாயுடு உரையாற்றிய போது கைத்தறி ஆடை அணிந்து வ.உ.சி முன்வரிசையில் அமர்ந்திருந்தார். வரதராஜுலு நாயுடு உரையாற்றும் முன்னர் உள்ளூர் இளைஞர் ஒருவர் மேடையில் ஏறி "நாம் (காங்கிரஸ்காரர்கள்) கதர் அணிவதைக் கடமையாகக் கொண்டவரகள். ஆனால் நம் தலைவர்களில் ஒருவர் பேசும் கூட்டத்திற்குக் கூட சிதம்பரம் பிள்ளை போன்ற பெரியவர்கள் கதர் அணியாது வந்திருப்பது விசனம் அளிக்கிறது" என்று பேசிவிட்டார்.

அப்போது வ.உ.சி. எழுந்து மேடைக்குச் சென்று இப்படிக் கூறினாராம்: 'இந்தக் கதர் எல்லாம் காந்தி சமாச்சாரம். நான் யார் தெரியுமா, சுதேசி சிதம்பரம். நான் போட்டிருக்கிற சட்டை, உடுத்தி இருக்கிற வேட்டி எல்லாம் கைத்தறி தெரியுமா? இது கூட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. பின்னர் அந்த இளைஞர் வருத்தம் தெரிவிக்க வ.உ.சி.யை அமைதிப் படுத்தி அமரச் செய்தார்கள் (நேர்காணல்: திரு.ஏ.பி.சி. வீரபாகு. வ.உசி. கல்லூரி நிறுவனர்)

மற்றொரு நிகழ்ச்சி தோழர் இஸ்மத் பாட்சா எழுதிய ப.ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு நூலில் இடம் பெற்றுள்ளது. ஜீவானந்தம் காங்கிரஸ் கட்சியில் இருந்த போது காரைக்குடி அருகில் இருந்த சிறாவயல் என்ற ஊரில் ஆசிரமம் ஒன்றை நடத்தி வந்தார். தாம் நடத்தும் ஆசிரமத்தைப் பார்வையிட வருமாறு காரைக் குடிக்கு வந்திருந்த வ.உ.சி.யை ஜீவா அழைத்தார். அவரது அழைப்பை ஏற்று அவரும் அங்கு சென்ற போது நூல் நூற்கும் ராட்டைகள் அடுக்கி வைத்திருப்பதைக் கண்டார். உடனே ஜீவாவை நோக்கி இங்கு பெண்கள் மட்டும் நூற்கிறார்களா? ஆண்களும் நூற்கிறார்களா? என்று கேட்டார். ஆண்களும் நூற்கிறார்கள் என்று ஜீவா விடையளித்தவுடன் முட்டாள்தனமான அமைப்பு (stupid organization) என்ற சொல் வ.உ.சி.யிடம் இருந்து வந்தது.' பெரியவர் நீங்கள் இப்படிக் கூறுவது வருத்தமாக உள்ளது' என்று ஜீவா கூறியதும், 'வாளேந்த வேண்டிய கைகளை ராட்டையைச் சுற்றச் செய்கிறாயே 'என்று விடையளித்தாராம் வ.உ.சி. இச்செய்திகளின் அடிப்படையில் பாரக்கும் போது வ.உ.சி.யின் தேசியம் என்பது நவீனத்துவத்தை உள்வாங்கிய, பொருளியல் வளர்ச்சியை முன்நிறுத்திய தீவிரவாத தேசியம் என்பது புலனாகிறது.

**சான்றாதாரம்**

கதிர்நம்பி (2021) வேளாண்மை குறித்து வ.உ.சி. யின் பார்வை. ஆராலும் என்னை அமட்டமுடியாது. ஆ.அறிவழகன்(பதிப்பாசிரியர்)

குருமலை சுந்தரம் பிள்ளை: ஜி.சுப்பிரமணிய ஐயர் வாழ்க்கை வரலாறு. (பதிப்பாசிரியர் செயவீர தேவன்)

Rajendran, N., (1994) The National Movement in Tamilnadu 1905 - 1916.

Reisner and Goldberg(1966) Tilak and the Struggle for Indian Freedom

---

– **ஆ.சிவசுப்பிரமணியன்,** நாட்டார் வழக்காற்றியல், வரலாறு ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இத்துறைகள் சார்ந்த நூல்களையும், கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.





# குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்தல்

– சமீரா சௌரப்

உலகளவில் இளமையான நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும் 2050 வரை உலக மக்கள்தொகை வளர்ச்சியில் சரிபாதி இந்தியா உள்ளிட்ட ஒன்பது நாடுகளில் ஏற்படும் என்று கருதப்படுகிறது. எந்தவொரு நாட்டிற்கும் குழந்தைகளே எதிர்கால முதலீடு. நாம் இந்த வளத்தைப் பாதுகாத்து அதன் பயனை அடைய வேண்டும். 2020இல் நம்மைத் தாக்கிய கோவிட் பெருந்தொற்றால் பல குழந்தைகள் பெற்றோரை இழந்து தவிக்கின்றனர். நம்முடைய கொள்கைகளை மறுசீராய்வு செய்து, மூன்று கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகள் பெற்றோரை இழந்து தனியாக விடப்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு குழந்தைகள் பராமரிப்புக் கொள்கைகளைப் புதிதாக வடிவமைக்க வேண்டும்.

இந்திய மக்கள்தொகையின் பெரும் பகுதி சுமார் 15,80,00,000 பேர் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் (2011 மக்கள்தொகைக் கணக்கீடு). இந்தியாவில் 18 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 47,20,00,000. அதாவது, மொத்த மக்கள்தொகையில் 39 சதவிகிதம் அதாவது இந்தியாவில் சுமார் மூன்று கோடி குழந்தைகள் பெற்றோரை இழந்தும், ஆதரவற்றவர்களாகவும் உள்ளனர் – இது, இளைஞர்களின் மக்கள் தொகையில் சுமார் நான்கு சதவிகிதமாகும். ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் கல்வி நிதியத்தின்படி (UNICEF) இந்தியாவில் 2,96,00,000 குழந்தைகள் பெற்றோர்களை இழந்தும், ஆதரவற்றவர்களாகவும் உள்ளனர். ஆனால் தனியார் அமைப்புகள் 2017இல் அளித்துள்ள தகவல்களின்படி, இந்த மூன்று கோடி குழந்தைகளில் 4,70,000 குழந்தைகள் மட்டுமே அமைப்பு சரிந்த நிறுவனங்களில் பராமரிக்கப் படுகிறார்கள். மேலும், சுமார் ஐந்து இலட்சம் குழந்தைகளை பிறர் தத்தெடுத்து தங்கள் குடும்பங்களில் பராமரிக்கிறார்கள். ஆகவே, கோடிக்கணக்கான குழந்தைகள் பாதுகாப்புடனும் நல்ல உடல் நலனுடனும் வாழ முடியாத சூழ்நிலையில் அரசின் குழந்தைகள் மேம்பாட்டுக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

இந்தியாவில் குடும்பங்கள் ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுத்துப் பராமரிப்பது எப்போதுமே குறைந்த அளவில் இருந்து வந்தாலும், தற்போது அது மேலும் குறைந்து வருகிறது. அரசின் மத்தியத் தத்தெடுப்பு வள வாரியத்தின் (Central Adoption Resource Authority - CARA) தகவல் களின்படி, 2010இல் நம் நாட்டில் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 5693 ஆகவும் 2017–18இல் 3,276 ஆகவும் இருந்தது. இதற்கு முக்கிய காரணம் சுமார் மூன்று கோடி குழந்தைகள் ஆதரவற்ற நிலையில் இருந்தும், அவர்களில் 2,61,000பேர் மட்டுமே அமைப்பு சார்ந்த நிறுவனங்களின் கீழ் பராமரிக்கப் பட்டு வருகின்றனர் இது 0.87 சதவிகிதம் மட்டுமே.

மேலும், நமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி, 29000க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுக்க விரும்பினாலும் சுமார் 3000 குழந்தைகள் மட்டுமே தத்தெடுக்கத் தகுதியாக உள்ளனர். இந்தியாவில் தத்து எடுக்கும் முறை தொடர்பான சட்டங்கள் மிகவும் கடுமையாக இருப்பதால் தத்தெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது. மார்ச் 2019–2020 முதல் 3351 குழந்தைகளே தத்தெடுக்கப் பட்டுள்ளனர். இதனால் நாம் அறிவது தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்களின் எண்ணிக்கைக்கும், கிடைக்கக்கூடிய குழந்தைகளுக்கும் இடையே உள்ள அதிகரித்த இடைவெளியால் தத்தெடுக்கும் செயல்முறை மேலும் நீண்டு கொண்டே போக வாய்ப்புள்ளது. இந்தியாவில் மிகக் குறைந்த அளவு குழந்தைகளே தத்தெடுக்கப்படுவதற்கான காரணங்கள் பல உள்ளன.

முதலாவதாக, ஆதரவற்ற குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் சிலரே அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பராமரிக்கப் படுவதால் தத்தெடுப்பதற்குப் போதிய அளவு குழந்தைகள் கிடைப்பதில்லை. ஆதரவற்றக் குழந்தைகள் வீதியில் அலைவதை நாம் பரவலாகப் பார்க்கிறோம். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் தெருக்களில் இப்படிச்



## பெண்கள், குழந்தைகள் நலன்களின் மீது அக்கறை

சுற்றித்திரியும் ஆதரவற்ற குழந்தைகளை, குழந்தைகள் பராமரிப்பு நிறுவனத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்களுடைய பெற்றோர்கள் அறிய முடியாத நிலையில் அக்குழந்தைகளை தத்தெடுப்புக்கு வழங்க வேண்டும்.

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசியக்குழுவின் தகவல்களின்படி, இந்தியாவில் 5850 பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளன. ஆனால் பதிவு செய்யப்படாத அமைப்புகளையும் எடுத்துக் கொண்டால் நாட்டில் 8000க்கும் மேற்பட்ட குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளன. ஆனால், சட்டப்படி பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் மட்டுமே தத்தெடுப்பு அமைப்புகளோடு இணைந்திருப்பர். இந்தக் குழுவின் தகவல்களின்படி, பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் 2,32,937 குழந்தைகள் உள்ளனர். பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சிறந்த சேவை கிடைக்காமல் அவர்களுக்கு அச்சுறுத்தல்களும், வன்புணர்வும் பிற பாலியல் பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து பல குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களை அமைத்து, கோடிக்கணக்கான குழந்தைகளை வீதிகளிலிருந்து காப்பாற்றி அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பராமரிப்பு அளிப்பதோடு, நல்ல குடும்பங்கள் தத்தெடுக்க உதவ வேண்டும். இந்த நிகழ்வுகளை உறுதிப்படுத்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி, நிதி மற்றும் பிற வளங்களை அளித்து, பதிவு செய்யப்படாத குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களை மூடிவிட்டு, மாவட்டக் குழந்தைகள் பராமரிப்பு அதிகாரிகளுக்குப் பொறுப்பளித்து, குடும்பத்தில் குழந்தையைப் பெற்றுக் கொள்வது போலவே, தத்தெடுத்துக் கொள்வது பற்றியும் நாடெங்கிலும் பரவலாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**மாற்றுத்திறன் மற்றும் தத்தெடுப்பு**

ஜனவரி 2020இல் மத்திய தத்தெடுப்பு வளவாரியம் ஒரு கருத்தரங்கை நடத்தி தத்தெடுக்கும் வழிமுறைகளை சீரமைக்கும் வாய்ப்புகள் பற்றி விவாதித்தது. மற்ற பிற தகவல்களோடு 14 வகையான மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் வகைகள் இந்த அமைப்பினால் பிரிக்கப்பட்டன.

இப்படி வகைப்படுத்தப்படுவதால் ஒவ்வொரு குழந்தையின் தேவையையும் உணர்ந்து அதற்கேற்ப பெற்றோர்கள் குழந்தைகளை தத்தெடுக்க முன்வருவது அதிகரிக்கலாம். ஆனால், தற்போது, குழந்தைகள் தத்தெடுப்பு வளவாரியம் அளித்துள்ள தகவல்களின்படி, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மாற்றுத்திறன் கொண்ட 40 குழந்தைகள் மட்டுமே தத்தெடுக்கப்பட்டுள்ளனர். தத்தெடுக்கப்பட்ட மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையில் இது ஒரு சதவிகிதம் மட்டுமே.

தற்போதுள்ள நிலவரப்படி, ஒவ்வொரு ஆண்டும் இந்திய நாட்டிற்குள் தத்தெடுக்கப்படும் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், அதே சமயம் மற்ற நாட்டு மக்கள், நம் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் தத்தெடுப்பு எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தியப் பெற்றோர்கள் உடல் நலம் சிறந்த குழந்தைகளை தத்தெடுக்க முடியாத நிலையில் தான் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளைத் தத்தெடுக்கிறார்கள். மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளைத் தவிர்க்கும் நமது போக்கின் காரணமாக வெளிநாட்டவர்களே இவர்களை அதிகம் தத்தெடுக்கின்றனர்.

தத்தெடுப்பு நிகழ்வுகளில் மத்திய குழந்தைகள் தத்தெடுப்பு வளவாரியம் அமைக்கப்பட்ட பின் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மத்திய தத்தெடுப்பு வளவாரியம் இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் சுயமாகச் செயல்படும் அமைப்பாகும். இந்த அமைப்பில் தத்தெடுத்துக் கொள்ளப்படக் கூடிய குழந்தைகள் மற்றும் தத்தெடுக்க விரும்பும் தம்பதியினர் ஆகியோரின் அனைத்து விவரங்களும் மின் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தியக் குழந்தைகளை இந்தியாவில் இருப்பவர்களும், வெளிநாட்டில் இருப்பவர்களும் தத்தெடுத்துக் கொள்ள ஏதுவாக மைய அமைப்பாக இது செயல்படுகிறது. மற்ற நாடுகளில் உள்ளவர்கள் இந்தியக் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வது 1999ஆம் ஆண்டு பிற நாடுகளில் உள்ளவர்கள் தத்தெடுக்கும் ஹேக் உடன்பாட்டின் படியும் (Intercountry Adoption (HCCH 1993 Adoption Convention), அதனை 2003இல் இந்தியா ஏற்றுக் கொண்டதின் அடிப்படையிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்த அமைப்பு ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்டக் குழந்தைகளைத் தத்தெடுத்தலைச் செயல்படுத்தும் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்துகிறது. 2018இல் இந்த மத்தியத் தத்தெடுப்பு வளவாரியம் 2018இல் திருமணம் அல்லாத, திருமணம் செய்து கொள்ளாத உடனுறை உறவுகளில் இருப்பவர்களும் இந்தியாவிற்குள் உள்ள குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ள அனுமதித்தது. இந்த அமைப்பின் முக்கியமான நோக்கம் தத்தெடுக்கும் நடவடிக்கைகளைத் துரிதமாக்குவது என்றாலும் மக்கள் தத்தெடுத்துக் கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகிக் கொண்டே போகின்றன.

இந்தியாவில் தத்தெடுக்கும் வழக்கங்களின் அடிப்படையில் இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956 (Hindu Adoption and Maintenance Act - HAMA) மற்றும் சிறு குழந்தைகள் சார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000 (Juvenile Justice Act) ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுகின்றன. இரண்டு சட்டங்களும் வெவ்வேறு இலக்குகளைக் கொண்டதாகவும், சட்ட உட்பிரிவுகளைக் கொண்டவைகளாகவும் உள்ளன. இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், இந்துக்கள் தத்தெடுத்துக் கொள்வது சார்ந்த ஒன்றாகும். இதில் இந்துக்கள் என்ற வார்த்தையில் பௌத்தர்கள், ஜைனர்கள் மற்றும் சீக்கியர்கள் ஆகியோரும் உள்ளடங்குவர். இந்தச் சட்டத்தில், இயற்கையாகப் பிறந்த குழந்தைக்கு என்ன உரிமைகள் உள்ளனவோ அவை அனைத்தும் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும் கிடைக்கும் – சிறு குழந்தைகள் சார் நீதிச்சட்டம் இயற்றப்படும் வரை இந்துக்கள் அல்லாதவர்கள் மற்றவர்களின் குழந்தைகளுக்குப் பாதுகாவலர்களாக இருப்பதற்கு வழிவகை செய்யும் சட்டமாக பாதுகாவலர்கள் மற்றும் பாதுகாக்கப்படுபவர்கள் சட்டம் (THE GUARDIANS AND WARDS ACT, 1890) நடைமுறையில் இருந்தது. ஆனால் இந்த சட்டத்தின்படி ஒரு குழந்தைக்கு எவரோ ஒருவர் பாதுகாவலராக நியமிக்கப்படுவதால் அவர்கள் இயற்கையான பெற்றோராகக் கருதப்பட முடியாது. இந்தப் பாதுகாவல் பொறுப்பு தத்தெடுக்கப்பட்டக் குழந்தைக்கு 21 வயது முடிந்தவுடன் விலக்கப்பட்டு, அந்தக் குழந்தை தனி அடையாளம் பெறுகிறது.

**தத்தெடுக்கும் வழிமுறைகளில் பங்கு பெறுபவர்கள்:**

மத்தியத் தத்தெடுப்பு வளவாரியம் (Central Adoption Resource Authority - CARA): இந்த அமைப்பு தத்தெடுப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு கால கட்டத்திலும் எளிதாகச் செயல்பட உதவுகிறது. தத்தெடுப்பு வழிமுறைகளில் பங்குபெறும் அனைவரின் செயல்பாடுகள் பற்றிய வழிமுறைகளை அது வகுக்கிறது.

**மாநிலத் தத்தெடுப்பு வளவாரியம்** (State Adoption Resource Agency - SARA): இந்த அமைப்பு மத்திய அமைப்போடு ஒருங்கிணைந்து செயல்பட்டு, மாநில அளவில் தத்தெடுக்கும் நடவடிக்கைகளையும், அமைப்புகள் சாரா பராமரிப்பு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கிறது.

**சிறப்புத் தத்தெடுப்பு அமைப்பு** (Specialized Adoption Agency - SAA): தத்தெடுப்புச் சட்டங்கள்

பிரிவு 41, உட்பிரிவு 4இன் கீழ் குழந்தைகளைத் தத்தெடுக்கக் கொடுப்பதற்கு சிறப்புத் தத்தெடுப்பு அமைப்பு மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்படுகிறது.

**அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுத் தத்தெடுப்பு அமைப்பு** (Authorized Foreign Adoption Agency - AFAA): அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுத் தத்தெடுப்பு அமைப்பு என்பது மத்தியத் தத்தெடுப்பு வள வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு சமூக அல்லது குழந்தை நல அமைப்பாகும். இந்த அமைப்பை அந்த நாட்டுத் தத்தெடுப்பு மைய வாரியம் அல்லது மாநில வாரியங்கள் பரிந்துரைத்திருக்க வேண்டும்.

**மாவட்டக் குழந்தைகள் பராமரிப்பு அமைப்பு** (District Child Protection Unit - DCPU): மாவட்டக் குழந்தைகள் பராமரிப்பு அமைப்பு என்பது தத்தெடுப்புச் சட்டம் பிரிவு 61யு–இன் கீழ் மாநில அரசுகள் மாவட்ட அளவில் அமைப்பதாகும். இந்த அமைப்பு மாவட்ட அளவில் அறியப்படும் ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்டக் குழந்தைகளை அடையாளம் கண்டு, குழந்தைகள் நலக் குழுவின் மூலம், தத்தெடுப்புக்கு சட்டபூர்வமாக ஏற்றவர்கள் என்று பரிந்துரையை அவர்கள் பெறுவர்.

நம் நாட்டில் சுமார் மூன்று இலட்சம் குழந்தைகளுக்கு சட்டப்பூர்வமான காப்பாளர்கள் அல்லது பராமரிப்பவர்கள் அல்லாமல் இருக்கும் போது, ஐந்து இலட்சம் குழந்தைகளே அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பராமரிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் தெருக்களில் அலைந்து துன்பப்பட்டு, தவறாகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். மிகச் சில குழந்தைகளே பராமரிப்பு இல்லங்களில் உள்ள நிலையில், பெருமளவிலான ஆதரவற்ற குழந்தைகள் தத்தெடுப்பதற்கு சட்டபூர்வமாக தகுதியில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் கூட தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்கள் குறிப்பிட்ட சில குழந்தைகளையே தத்தெடுக்க விரும்புகிறார்கள். பெரும்பாலோர் எந்தக் குறைபாடும் இல்லாத குழந்தைகளையும், இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளையுமே விரும்புகிறார்கள். நம்நாட்டில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அதிலும் குறிப்பாக வீதிகளில் அலைபவர்களுக்கு பல அச்சுறுத்தல்கள் உள்ளன. அவர்கள் மிகவும் தீய செயல்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

**சிறு குழந்தைகள் சார் நீதி சட்டம் (2015):** ஆதரவற்ற மற்றும் நலிவுற்ற குழந்தைகளை "பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்" என்று வகைப்படுத்துகிறது. இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கியமான பொறுப்பு மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் உண்டு. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மத்திய அரசின் திட்டமாக குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகள் திட்டத்தை (முன்பிருந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்குப் பதிலாக) செயல்படுத்தி கடினமான சூழ்நிலைகளில் வாழும் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அடிப்படைப் பொறுப்பு, மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. கடுமையான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளை மதிப்பிடும்படி மத்திய அரசு இந்தத் திட்டத்தின் கீழ் மாநில அரசுகளையும், யூனியன் பிரதேசங்களையும் பணிக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கும் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழந்தைகளுக்கும் அமைப்பு சார்ந்த குழந்தைகள் பராமரிப்பு அமைப்புகள் உதவுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் அமைப்பு சாரா நிறுவனப் பராமரிப்புகளான தத்தெடுத்தல், மாற்றாந் தாய்ப் பராமரிப்பு மற்றும் பராமரிப்புக்கான செலவுகள் வழங்கப்படுகின்றன.

குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதிநிலை அளவுகள் ஏப்ரல் 1, 2014இல் திருத்தியமைக்கப்பட்டன. இதன்படி, குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாதாந்திரப் பராமரிப்பு உதவித்தொகை ரூ.750லிருந்து 2000மாக உயர்த்தப்பட்டது. ஏப்ரல் 1, 2017 முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என பெயர் மாற்றப்பட்டு, அதன் நிர்வாகம் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த வகையில் கீழ்க்கண்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன: பராமரிப்பு இல்லங்களிலுள்ள குழந்தைகளின் பராமரிப்பு உதவித்தொகை மாதத்திற்கு ரூ.2160 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் சார் நீதி மாதிரி செயல்முறைகள் 2016இன் படி, குழந்தைகள் நலக்குழுக்கள் மற்றும் குழந்தைகள்சார் நிதி வாரியக் கூட்டங்களில் பங்குபெறும் அங்கத்தினர்களின் கூட்டப் பங்கேற்பின்படி ரூ.1000லிருந்து 1500ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சைல்டுலைன் இந்தியா நிதியகத்தின் செயல்பாடுகளுக்கு ரூ.9.70 கோடி தொகை வழங்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் மேற்கொண்டு வரும் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்களை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.



உறவினர்களுக்கிடையே இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் ஏற்படும் தத்தெடுப்புகள் மத்தியத் தத்தெடுப்பு வள வாரியத்தின் கீழ் பதிவாவதில்லை. ஆகவே அப்படி ஏற்படும் தத்தெடுப்புக்களின் எண்ணிக்கை தெரிய வருவதில்லை. இந்த சூழ்நிலையில் தத்தெடுக்கும் வழிமுறைகள் எளிமையாக்கப்பட வேண்டும் என்றும் தற்போதுள்ள பலவகையான சட்ட வழிமுறைகளை ஆராய்ந்து தத்தெடுக்க விரும்பும் / காத்திருக்கும் பெற்றோர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும் மாற்றியமைக்க வேண்டும் என்றும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் சார்ந்த விழிப்புணர்வுகளை பரவலாகச் செய்ய வேண்டும் என்றும், இப்படிப்பட்டக் குழந்தைகளையும் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. 2018இல் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு தேசிய கமிஷன் மேற்கொண்ட ஒரு சமூகத் தணிக்கை அறிக்கையின் படி 2874 குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களில் 54 இல்லங்கள் மட்டுமே சிறு குழந்தைகள் சார் நீதி சட்டத்தின்படி செயல்படுகின்றன. தணிக்கை செய்யப்பட்ட 185 குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் 19இல் மட்டுமே அங்கு வசிக்கும் குழந்தைகளின் விவரங்கள் காணப்பட்டன. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் குழந்தைகளின் நலன்களுக்காகவும், மேம்பாட்டிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் பல நலத் திட்டங்களைச் செயல் படுத்துகிறது.


இந்த இலக்குகளை அடைய மத்திய அமைச்சரவை சமீபத்தில் முக்கியமான மூன்று பெரிய திட்டங்களை இயக்கங்களாகச் செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது அவை வாத்சல்யா இயக்கம், போஷான் 2.0 இயக்கம் மற்றும் சக்தி இயக்கம் ஆகியவையாகும்.

**வாத்சல்யா இயக்கம்:**

இந்த இயக்கத்தில் கொள்கை வடிவமைப்பாளர்கள் குழந்தைகளை மிக உயர்ந்த தேசிய சொத்தாக அடையாளம் கண்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம், இந்தியாவிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் நலமான, மகிழ்வான இளமைக் காலம் இருக்க வேண்டும் என்பதே. அவர்களின் தேவைகளை உணர்ந்து, குழந்தைகள் மேம்பாட்டிற்கு ஆதரவான சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும். மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் சிறு குழந்தைகள் சார் நீதிச் சட்டம் 2015 பணித்துள்ளதை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டும் மற்றும் நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளை அடைய வேண்டும். இதன் மற்றொரு முக்கிய குறிக்கோளாக மாநில அரசுகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான திட்டங்களை மேற்கொள்வதில் உள்ள இடைவெளிகளை குறைப்பதற்காக பல அமைச்சகங்களையும், பல துறைகளையும் ஒன்றிணைந்த செயல்பாட்டை உருவாக்கி பாலின சமத்துவத்தையும், குழந்தைகளை மையமாகக் கொண்ட சட்டங்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாகும்.

**போஷான் இயக்கம் 2.0:**

குழந்தைகள், இளம் பருவப் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள், பால் புகட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு ஏற்படும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் போக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் துவக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு




நல்ல உடல் நலத்தையும், நோய் எதிர்ப்புத் தன்மையையும் உருவாக்க சிறந்த ஊட்டச்சத்து உணவுகளை வழங்குவதற்கான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதே நோக்கமாகும். கூடுதல் சத்துணவுத் திட்டத்தின் மூலம் தரமான ஊட்டச்சத்துப் பொருள்களைத் தகுந்த நேரத்தில் அளிக்க இந்தத் திட்டம் முற்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து அளவுகள், தரங்கள் மற்றும் நுண் ஊட்டச்சத்துக்கள் சோதிக்கும் முறைகள் ஆகியவை மேம்படுத்தப்பட்டு, பயனாளிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டு பாரம்பரிய உணவு முறைகளுக்கும் ஊக்கமளிக்கப்படும். ஏற்கனவே உள்ள அங்கன்வாடி சேவைகள் பதின்ம வயதுப் பெண்களுக்கான திட்டம் மற்றும் போஷான் அபியான் ஆகிய மூன்று திட்டங்களை இணைத்து போஷான் 2.0 என்ற இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

**சக்தி இயக்கம்:**

பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் முன்னேறி வரும் போது, அவர்களுக்கு




சுதந்திரமும், அதிகாரமும் அளிப்பதற்காக அவர்களுக்கு ஒருங்கிணைந்த பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை அளிக்க சக்தி இயக்கம் முற்படுகிறது. இந்தத் திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன சம்பல் மற்றும் சாமர்த்தியா.

சம்பல் உள் திட்டத்தில் ஏற்கனவே உள்ள ஒரு சாளர மையம் (One Stop Centre Scheme - OSC), மகளிர் உதவி தொலைபேசி எண் 181 மற்றும் "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்" என்ற மூன்று திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், இதில் கூடுதலாக மகளிர் நீதி மன்றங்கள் என்ற பெயரில் மகளிர் தங்களுக்கு சமூகத்தில் ஏற்படும் அநீதிகளுக்கும், குடும்பத்தில் ஏற்படும் அநீதிகளுக்கும் தீர்வு காண அவர்களாகவே அமைத்துக் கொள்ளும் வழக்கு மன்றங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சாமர்த்தியா உள்திட்டத்தில் மகளிருக்கு அதிகாரம் அளிக்க ஏற்கனவே உள்ள திட்டங்களான உஜ்வலா, ஸ்வாதர் கிருஹா மற்றும் உழைக்கும் மகளிருக்கான விடுதி ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இது அல்லாமல் இதுவரை ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்த உழைக்கும் மகளிரின் குழந்தைகள் பராமரிப்புத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டம் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று இயக்கங்களும் 15வது நிதிக்கமிஷன் காலகட்டமான 2021–22 முதல் 2025–26 வரை செயல்படுத்தப்படும்.

மார்ச் 11, 2020க்கு பிறகு கோவிட்19 பெருந்தொற்றினால் இரண்டு பெற்றோர்களும்; அல்லது உயிருடன் இருக்கும் ஒரு பெற்றோர் அல்லது சட்டப்பூர்வமான காப்பாளர் அல்லது தத்தெடுத்துள்ளவர்கள் இறந்துவிட்டால் அவர்களைப் பராமரிக்க பிரதம மந்திரி குழந்தைகள் பராமரிப்புத் திட்டம் மே 29, 2021இல் துவக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். அவர்கள் நலமாக வாழ்வதற்கு மருத்துவக் காப்பீடு, கல்வி வசதி மற்றும் சுயமாக வாழ்வதற்கு நிதி உதவி ஆகியவை அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் பலவகையான திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அந்தத் திட்டங்களில் ஆதரவுக்கான இடைவெளி இருந்தால் அதுவும் நிறைவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி, உடல் நிலை பராமரிப்பும், 18 வயதிலிருந்து உதவித்தொகையும், அவர்களுக்கு; 23 வயது முடியும்; போது ரூ.10,00,000 மொத்தத் தொகையும் கொடுக்கப்படும்.

**ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் நல்வாழ்வுத் திட்டம்:**

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு அரசு மற்றும் தனியார் பல்நோக்கு மருத்துவ மனைகளில் ஆண்டுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் வரை மருத்துவ சிகிச்சைக் காப்பீடு அளிக்கப்படும். பிரதம மந்திரி குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் வரும் குழந்தைகளுக்கும் இந்த ரூபாய் ஐந்து இலட்சம் மருத்துவ காப்பீட்டு வசதி அளிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் மூலம் குழந்தைகள் மகிழ்ச்சியாகவும் ஊட்டச்சத்துடனும் வளரவும், மகளிர் சுயசார்புடன் செயல்படவும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி அரசு அவை அவர்கள் பயன்படுத்தும் வகையிலும், ஏற்றுக் கொள்ளக்கூடிய செலவிலும் நம்பகத் தன்மையுடனும் எந்தவொரு பாகுபாடுமின்றியும் துன்புறுத்தல்கள் இல்லாமலும் உதவிகள் வழங்க அரசு முற்படுகிறது.

---

**– ஸ்ரீ சமீரா சௌரப்**, இணைச் செயலாளர், குறு, சிறு நடுத்தரத் தொழில் முனைவுகள் அமைச்சகம், இந்திய அரசு.





# விளையாட்டு - கவர்ச்சிகரமான ஒரு துறை

**– ராஜேஷ் ராய்**

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளிலும், பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்திய விளையாட்டு வீரர்கள் படைத்த சாதனை, விளையாட்டு குறித்துப் பார்வையை மாற்றியிருக்கிறது. விளையாட்டை ஒரு தொழிலாகவும் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை அது விதைத்திருக்கிறது. விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பணப்பரிசுகளும் குவிவதால் அதைப் பார்க்கும் பெற்றோர்கள் மனதில் விளையாட்டு குறித்த சாதகமான மனநிலை ஏற்பட்டிருக்கிறது. கவர்ச்சிகரமான விளையாட்டு உலகிற்குள் தங்களின் குழந்தைகளை அனுப்புவதற்கு அவர்கள் இப்போது தயாராக இருக்கிறார்கள்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளிலும், பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்திய விளையாட்டு வீரர்கள் படைத்த சாதனை, விளையாட்டு குறித்துப் பார்வையை மாற்றியிருக்கிறது. விளையாட்டை ஒரு தொழிலாகவும் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை அது விதைத்திருக்கிறது. விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பணப்பரிசுகளும் குவிவதால் அதைப் பார்க்கும் பெற்றோர்கள் மனதில் விளையாட்டு குறித்த சாதகமான மனநிலை ஏற்பட்டிருக்கிறது. கவர்ச்சிகரமான விளையாட்டு உலகிற்குள் தங்களின் குழந்தைகளை அனுப்புவதற்கு அவர்கள் இப்போது தயாராக இருக்கிறார்கள். 1983ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி, கோப்பையை வென்ற போது, அதில் பங்கேற்ற வீரர்களுக்குப் பாராட்டு விழா நடத்துவதற்குக் கூட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் பணம் இல்லை. அந்த நேரத்தில் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு நிதி திரட்டுவதற்காக மறைந்த பாடகி லதா மங்கேஸ்கர் அவர்கள் தான் தில்லியில் இசை நிகழ்ச்சி நடத்தினார். ஆனால், இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் விளையாட்டு வீரர்களுக்கு பண வரவை அதிகரித்திருக்கின்றன. இதுவரை ஒரு போட்டியில் கூட விளையாட வாய்ப்புக் கிடைக்காத இளைஞர்கள் கூட, ஒரு ஐபிஎல் போட்டித் தொடரில் பங்கேற்பதன் மூலம் 50 இலட்சம் ரூபாய் முதல் 70 இலட்சம் ரூபாய் வரை மிகவும் எளிதாக ஈட்டிவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கபடி**

கபடிப் போட்டி ஒரு கால கட்டத்தில் கிராமப்புற விளையாட்டாகக் கருதப்பட்டது. ஆனால், கபாடிப் போட்டிகளுக்காக தனி லீக் தொடங்கப்பட்ட உடன், கபாடி வீரர்கள் அனைவரும் ஒரே நாள் இரவில் புதிய நட்சத்திரங்களாக மாறிவிட்டனர். முதலாவது கபாடி லீக் போட்டியில் ஒரு வீரர் 12.5 இலட்ச ரூபாய்க்கு ஏலத்திற்கு எடுக்கப்பட்டார். அதனால் மகிழ்ச்சி அடைந்த அந்த வீரர், இந்தப் பணத்தைக் கொண்டு கிராமத்தில் உள்ள தமது வீட்டைப் பழுது பார்க்கப் போவதாக அப்போது கூறினார். இன்றைய காலக் கட்டத்தில் கபாடி லீக் போட்டியின் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. அப்போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கு ஒரு பருவத்திற்கு 50 இலட்சம் ரூபாய் முதல் 1.5 கோடி ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

**தடகள வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நிதி**

2022–23ஆம் ஆண்டில் 33 வகையான விளையாட்டுப் போட்டிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கும், போட்டிகளை நடத்துவதற்குமான ஆண்டு கால அட்டவணையை மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம் இறுதி செய்துவிட்டது. அப்போட்டிகளை நிர்வகிக்கும் பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளுக்கு 259 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. அவற்றில் சுமார் 190 கோடி ரூபாய் 2022ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான பயிற்சி, வெளிநாட்டு சுற்றுப்பயணம், கருவிகள், துணை வீரர்களுக்கான ஊதியம் ஆகியவற்றுக்காக மட்டும் செலவிடப்பட உள்ளது. தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளுடன்




தீவிர கலந்தாய்வுகளை நடத்திய மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம், நடப்பாண்டில் நடைபெறவுள்ள இரு முக்கியமான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள வீரர்களுக்கு வழங்கப்படும் ஆதரவை அதிகரிப்பதற்கான திட்டங்களை மிகவும் கவனமாகப் பரிசீலித்து ஒப்புதல் அளித்திருக்கிறது. திருத்தப்பட்ட விதிகளின் படி, தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவி அதிக முக்கியத்துவம் வாய்ந்த, முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் இந்தியப் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு 22 இலட்சம் ரூபாயில் இருந்து, 51 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன் இதரப் போட்டிகள் என்று அழைக்கப்பட்ட பொதுப்பிரிவு விளையாட்டுப் போட்டிகளுக்காக வழங்கப்படும் நிதியுதவி 22 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் தடகள வீரர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிக்கான டிராக்சூட், டிசர்ட், ஷார்ட், ஷூக்கள் போன்ற பயிற்சி உபகரணங்களை வாங்குவதற்கான நிதி 10 ஆயிரம் ரூபாயில் இருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்காக தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் அவற்றுக்கு வழங்கப்படும் நிதியுதவி, ஆண்டுக்கு ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல், விளையாட்டுப் போட்டிகளில் உதவும் துணைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தப் பணிக்கு திறமையானவர்களை ஈர்க்கும் நோக்குடன் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. மருத்துவர்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கான மருத்துவர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம், இதற்கு முன்பு வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், இயன்முறை மருத்துவர்களுக்கான ஊதியம் இதற்கு முன் மாதம் 80 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இயன்முறை தலைமை மருத்துவர்களுக்கான ஊதியம் இப்போது, 2 இலட்சம் ரூபாயாகவும், இயன்முறை மருத்துவர்களுக்கான ஊதியம் 1.50 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதுகள்**

மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதுகள் புகழ்பெற்ற ஹாக்கி வீரர் மேஜர் தயான்சந்த் அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது. இந்தியாவில் வழங்கப்படும் மிகப்பெரிய விளையாட்டு விருது இதுவாகும். இந்த விருதை முதன் முதலில் வென்றவர் சதுரங்க வீரர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் ஆவார். 1991 92ஆம் ஆண்டில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**அர்ஜூனா விருது**


அர்ஜூனா விருது 1969ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதுக்கு அடுத்தபடியாக, இந்தியாவின் இரண்டாவது பெரிய விளையாட்டு விருது இதுவாகும். விளையாட்டுப் போட்டிகளில் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாகச் செயல்படுபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருது 15 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசைக் கொண்டதாகும்.

**துரோணாச்சாரியா விருது**

துரோணாச்சாரியா விருது 1985ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது ஆகும். உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள்







வெகு சிறப்பான பயிற்சியை அளிக்கும் பயிற்சியாளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. அண்மையில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் துரோணாச்சாரியா விருது பெறுவோருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.5 இலட்சத்தில் இருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெல்வோருக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்திருந்தது. ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பாக பரிசுத் தொகையை இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்தது. தங்கப்பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.75 இலட்சமும், வெள்ளிப்பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.40 இலட்சமும், வெண்கலப்பதக்கம் வெல்லும் வீரர்களக்கு ரூ.25 இலட்சமும் வழங்கப்படும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்தது. ஒலிம்பிக் போட்டிகளுக்கு வீரர்களை அனுப்பும் அனைத்து தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளுக்கும் தலா ரூ.25 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்தது.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்கும் ஒவ்வொரு தடகள வீரருக்கும் தலா ரூ.1 இலட்சம் வழங்க வேண்டும் என்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் பரிந்துரைத்திருந்தது. அதுமட்டுமின்றி, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புக்கும் தலா ரூ.25 இலட்சம் போனஸ் வழங்கப்பட வேண்டும்; பதக்கம் வெல்லும் ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புக்கும் மேலும் ரூ.30 இலட்சம் வழங்கப்பட வேண்டும் என்று தனது ஆலோசனைக் குழுமம் வழங்கிய யோசனையையும் இந்திய ஒலிம்பிக் குழு ஏற்றுக் கொண்டிருந்தது. இது தவிர, தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள ஒவ்வொருவருக்கும் ரூ.15 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மாநில அளவில் விளையாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும், அதிக எண்ணிக்கையிலானவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையிலும், மாநில ஒலிம்பிக் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஒவ்வொரு அமைப்புக்கும் தலா ரூ.15 இலட்சம் இந்திய ஒலிம்பிக் சங்கத்தில் இருந்து வழங்கப்படும் என்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்திருந்தது.

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் விளையாட்டு என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும். விளையாட்டுத்துறையில் இந்தியா கடந்த சில ஆண்டுகளாக திடமாக முன்னேறி வருகிறது. இந்தியாவின் விளையாட்டுத் திறன், உலக அரங்குகளில் வெளிப்படுத்த வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்ற உத்வேகத்தை இளைஞர்களிடம் ஏற்படுத்தவும், உலகத்தரத்திலான பயிற்சியையும், அதற்குத் தேவையான கட்டமைப்புகளையும் ஏற்படுத்துதவற்கும் இதுதான் சரியான தருணமாகும். விளையாட்டு வீரர்கள் தங்களின் உண்மையான திறனை வெளிப்படுத்துவதற்கு உதவும் வகையில், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான வலிமையான உணர்வை அவர்களிடம் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அப்போது தான், விளையாட்டுத் துறைகளில் வல்லரசாக வேண்டும் என்ற கனவை இந்தியா நனவாக்க முடியும். இந்தியாவில் விளையாடப்படும் அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகளுக்கான வலிமையான கட்டமைப்பை அடிமட்ட அளவில் உருவாக்கி, விளையாட்டுக் கலாச்சாரத்தைப் புதுப்பிக்க வேண்டும்; இந்தியாவை மிகச் சிறந்த விளையாட்டு வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான், 'விளையாடு இந்தியா' திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, உயர் அதிகாரக் குழு மூலம் பல்வேறு நிலைகளில் தேர்வு செய்யப்படும் முதன்மையான விளையாட்டுகளின் வீரர்களுக்கு ஆண்டுகளுக்கு 8 இலட்சம் ரூபாய் வீதம் 8 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

– **ராஜேஷ் ராய்**, மூத்த விளையாட்டுச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர், யுனிவார்தா, இந்தி செய்தி முகமை

# நீலப்புரட்சி



மீன்வளம் என்பது இந்தியாவில் உணவு, ஊட்டச்சத்து, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவற்றுக் கான முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. மீன்வளத் தொழிலானது முதன்மை நிலையில் சுமார் 16 மில்லியன் மீனவர்கள், மீன் உற்பத்தி விவசாயிகள் ஆகியோருக்கான வாழ்வாதாரத்தை வழங்குகிறது. மேலும் மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடரில் இதை விட இரு மடங்கு நபர்களுக்கு வாழ்வாதாரத்தை அது அளிக்கிறது. கடல் மீன்பிடித்தொழில் பிரிவில் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மீனவர்களும் சிறிய அளவில் மீன் பிடிக்கும் மீனவர்களுமே அதிக அளவில் உள்ளனர். இவர்களின் வாழ்வும், வாழ்வாதாரமும் பெருங்கடல்களையும், கடல்களையும் சார்ந்தே இருக்கிறது. மீனவர்களின் சமூகப் பாதுகாப்பையும், நல்வாழ்வையும் கவனத்தில் கொண்டு மீன்வள அமைச்சகத்தின் கீழ் உள்ள மீன்வளத்துறை ஐந்து ஆண்டு காலகட்டத்திற்கு ஒரு திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. 31 மார்ச் 2020இல் முடிவடைந்த, "நீலப்புரட்சி: மீன் வளத்திற்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் மேலாண்மை" என்ற மத்திய நிதி உதவித் திட்டத்தின் கூறுகளில் ஒன்றாக இது இருந்தது.

மீன்வளத் துறையானது பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பட திட்டம் (PMMSY) என்று அழைக்கப்படும் முன்னோடி திட்டத்தைத் தற்போது அமல்படுத்தி வருகிறது. இதுவரை இல்லாத அளவிற்கு அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டில் அதாவது ரூ.20,050 கோடி முதலீட்டில் ஐந்து ஆண்டு காலகட்டத்திற்கு (2020–21 முதல் 2024–25 வரை) இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் நோக்கம் என்பது பொறுப்புடைமை சார்ந்த நீடித்த அபிவிருத்தியை உருவாக்குவதோடு, அதன் ஊடாகவே மீனவர்கள் மற்றும் மீன் உற்பத்தி விவசாயிகளின் சமூகப் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

மீன்பிடித் தடைக்காலம் / மீன்கள் கிடைக்காத காலம் ஆகிய வற்றின் போது சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும், ஊட்டச்சத்து உதவிகளும் வழங்கப் படுகின்றன. உதவி வழங்கும் இந்தப் பிரிவின் கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் ரூ.4,500 நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இதில் 3,000 ரூபாய் அரசின் பங்களிப்பாகவும், ரூ.1,500 பயனாளியின் பங்களிப்பாகவும் இருக்கும். மீன்பிடித் தடைக்காலம் / மீன் கிடைக்காத காலத்தில் மூன்று மாதங்களுக்கு இந்த உதவி வழங்கப்படும். மீனவர்களுக்குக் காப்பீடு வழங்கும் உதவிப் பிரிவின் கீழ் இழப்பீடுகள் பின்வரும் வகையில் வழங்கப்படுகின்றன.

1. விபத்தில் மரணம் ஏற்பட்டால் அல்லது நிரந்தர மொத்த ஊனம் ஏற்பட்டால் ரூபாய் ஐந்து இலட்சம்
2. நிரந்தர பகுதி ஊனம் ஏற்பட்டால் ரூ.2,50,000/–
3. விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறும் செலவுக்கு காப்பீடு மூலம் ரூ.25,000/–

இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை 2017–2018 முதல் 2021 பிப்ரவரி 2022 வரை நடைமுறைப்படுத்தியதில் மத்திய அரசின் பங்களிப்பு ரூ.369.55 கோடி ஆகும்.





# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான திட்டங்கள்

2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பட்டியல் இனத்தவர்களும், பழங்குடி மக்களும் கிட்டத்தட்ட 20.04 சதவீதம் உள்ளனர். இவர்களில் பட்டியல் இனத்தவர் 19 சதவீதமும், பழங்குடியினர் 1.0 சதவீதம் உள்ளனர். 70 சதவீத பட்டியல் சாதியினரும், 85 சதவீத பழங்குடியினரும் கிராமப்புறங்களில் தான் வசிக்கின்றனர். பட்டியல் இனத்தவர், பழங்குடியினரில் சமூகரீதியாகப் பின்தங்கி இருப்பவர்களுக்கு அவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் தொடர்பாக நிலையான சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது.


ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் விரைவான சமூகப் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வதற்கு சாதகமான சூழலை உருவாக்கியாகவேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்குத் தேவையான பொருத்தமான கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துள்ளது. கல்வி மேம்பாடு, பொருளாதார மேம்பாடு, ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டம், பழங்குடியினருக்கான பழங்குடியினர் துணைத்திட்டம் ஆகியவற்றின் கீழ் இந்தச் சமூகங்களுக்கான முக்கியமான முன்னேற்றச் செயல்பாடுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் வழக்கமான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் மேலதிகமாக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) செயல்படுத்துகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திறம்படச் செயல்படுத்தி வரும் திட்டங்கள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

### மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு (கிருத்துவ ஆதிதிராவிட மாணவர் / மாணவியர்கள் தவிர) பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கு கலை, அறிவியல், வணிகவியல் மற்றும் தொழிற்கல்வி பயில்வோருக்கு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு ரூ. 4000/–லிருந்து ரூ. 13500/– வரையிலும், பெற்றோருடன் தங்கிப் பயில்வோருக்கு ரூ. 2500/–லிருந்து ரூ. 7000/– வரையிலும் பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. இது தவிர கல்வி நிலையங்களுக்குக் கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய மற்றும் படிப்பின் இறுதியில் மாணவருக்கு திரும்பத் தரப்படாத கட்டணங்களும் வழங்கப் படுகிறது.

இக்கல்வித் தொகையினை பெற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் இன மாணவர்களுக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.



### 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான போஸ்ட் மெட்ரிக் மாநில அரசின் சிறப்பு உதவித் தொகைத் திட்டம்.

10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியரில், மத்திய அரசின் கல்வி உதவித்தொகை பெற இயலாதவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. பெற்றோருடன் தங்கிப் பயிலுவோருக்கு பராமரிப்புப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/– முதல், ரூ.175/– வரையும், விடுதியில் தங்கிப் பயிலுவோருக்கு மாதம்



ரூ.175/- முதல் ரூ.350/- வரையிலும் வழங்கப்படுகிறது. இது தவிர கல்வி நிலையங்களுக்குக் கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும், படிப்பின் இறுதியில் மாணவருக்குத் திரும்பத் தரப்படாத கட்டணங்களும் வழங்கப்படுகின்றன. மாநில அரசின் இத்திட்டத்தில், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத, தொழிற் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் பெறும் மாணவர்களுக்கும் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை.**

கல்வி நிலையத்துடன் இணைந்த விடுதிகளில் தங்கி பட்ட/ பட்ட மேற்படிப்பு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு ரூ.7,500/- முதல் ரூ.8,000/- வரை இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**கற்பிப்புக் கட்டணச் சலுகை**

அரசு மற்றும் அரசின் நிதி உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர் வருமான வரம்பின்றி கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதில் இருந்து முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இக்கல்விச் சலுகை இளங்கலைப் பட்டப்படிப்பு முதல் மேல்படிப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது

**இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

இத்திட்டத்தின் கீழ் பி.ஏ. பி. எஸ்.ஸி, பி.காம், மற்றும் அதற்கு இணையாக பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ, ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கும், முதுகலைப்பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவியர்களுக்கு மட்டும் தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணங்கள் வழங்கப்படுகிறது. இதற்கு வருமான வரம்பு கிடையாது. மத்திய, மாநில அரசின் கல்வி உதவித்தொகை பெற இயலாதவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர்.

**முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

இத்திட்டத்தின் கீழ் எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., மற்றும் அதற்கு இணையாக பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவியர்களுக்கு







மட்டும் தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு வருமான வரம்பு கிடையாது. மத்திய, மாநில அரசின் கல்வி உதவித்தொகை பெற இயலாதவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர்.

**மாநில அரசு பிரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் விதிக்கும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணம், பொதுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர் களுக்கும் ஆதி திராவிடர் நலத்துறையால் வழங்கப்படுகிறது. அதே போன்று பொதுப்பள்ளிகளில் ஆங்கில வழி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் 2018 19 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது.

**பொதுத் தேர்வுக் கட்ணம் /விண்ணப்பக் கட்டணம் /பதிவுக் கட்டணச் சலுகைகள்**

தமிழ்வழி அல்லாது பிறமொழி வழி 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/ மாணவியர் அனைவருக்கும் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட தேர்வுக் கட்டணம் நேரடியாக அரசு தேர்வுகள் துறைக்கு ஈடுசெய்யப்படுகிறது. மேலும், அரசு/அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு விண்ணப்பம் மற்றும் பதிவுக்கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

**முழுநேர முனைவர் பட்டப்படிப்பு ஊக்கத் தொகைத் திட்டம்**

2013-2014ஆம் ஆண்டு முதல் முழு நேரமாக முனைவர் பட்டப்படிப்பினை அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பயிலும் 700 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகையாக ஆண்டொன்றிக்கு தலா ரூ.50,000/- வழங்கப்பட்டு வந்தது. 2017-2018ஆம் ஆண்டு முதல் மாணாக்கர்களின் என்ணிக்கை 1200 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

அரசாணை (நிலை) எண்.96 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை, நாள்: 25.11.2021இன் படி ஊக்கத்தொகையினை மாணாக்கருக்கு தலா ரூ.50,000/- இருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி மாணாக்கர்களின் எண்ணிக்கை 1200 இருந்து 1600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**பெண் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவிகள் இடைநிறுத்தமின்றி தொடர்ந்து கல்வி பயிலவும் சேர்க்கையை அதிகரிக்கவும் ஏதுவாக 1994-95ஆம் ஆண்டு முதல் தாட்கோ மூலமும் 27.03.2000 முதல் ஆதிதிராவிடர் நல ஆணையரகம் மூலமும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- என 10 மாதங்களுக்கு ரூ.500/- ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. 6ஆம் வகுப்பு கல்விபயிலும் மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் என 10 மாதங்களுக்கு ரூ.1000/- வழங்கப்படுகிறது. 2013-2014ஆம் கல்வியாண்டு முதல் 7ஆம் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கும் இத்திட்டம் நீட்டிப்பு செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1500/-வழங்கப்படுகிறது. இடைநிலை, மேல்நிலை மற்றும்

உயர்கல்வி நிலைகளில் ஆதிதிராவிடர் இன பெண் குழந்தைகள் அதிக மொத்தச் சேர்க்கை விகிதம் எய்த இத்திட்டம் வழி வகுத்துள்ளது.

**புதிரை வண்ணாருக்கான நலத் திட்டங்கள்:**

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ் நாட்டில் 1,44,38,445 ஆதி திராவிடர் இனத்தவர்கள் உள்ளனர். இதில் புதிரை வண்ணார் இன மக்கள் தொகை 28,351 ஆகும். இவர்களது குலத்தொழில் துணிகளைச் சலவை செய்தல் செய்வதாகும். தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி ஆகிய மாவட்டங் களில் இவ்வின மக்கள் பெருவாரியாக உள்ளனர். இவ்வின மக்கள் பொருளாதார, சமூக, கல்வி நிலைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால் இவர்களைப் பொருளாதார, சமூக, கல்வி நிலைகளில் முன்னேற்றமடையச் செய்யும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருவதுடன், இவர்களின் முன்னேற்றத்திற்கு முனைப்புடன் பாடுபட்டும் வருகிறது.

அரசாணை எண். 114, ஆதி திராவிவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்(ஆதிந6) துறை, நாள். 15.10.2009ன் படி மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் 3826 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வின மக்களின் நலனுக்கான திட்டங் களுக்காக ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு 491 உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகை, விபத்து மரணம், இயற்கை மரணம் / ஈமச்சடங்கு, கல்வி உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, விதவை / முதியோர் ஓய்வூதியமும்; 1754 நபர்களுக்கு கொரோனா நிவாரண நிதி என மொத்தம் ரூ.1,00,00,00/-மும் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. மேலும் 2021-22ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.19,42,050/- நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. 2022 -22ஆம் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.10,94,950/- நிதி ஒதுக்கீடு கோரி முன்மொழிவுகள் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது.

**புதிரை வண்ணார் நல உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்**

| வ. எண் | நலத்திட்டத்தின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | மூக்குக் கண்ணாடி | 7 | 3500 |
| 2 | முதியோர் ஓய்வூதியம் | 238 | 2955600 |
| 3 | கல்வி உதவித்தொகை | 20 | 45950 |
| 4 | மகப்பேறு உதவித்தொகை | 1 | 6000 |
| 5 | விபத்து மரணம் | 3 | 300000 |
| 6 | இயற்கை மரணம் ஈமச்சடங்கு | 201 | 2953000 |
| 7 | திருமண உதவித்தொகை | 7 | 14000 |
| 8 | விதவை உதவித்தொகை | 14 | 187000 |
| | **மொத்தம்** | **491** | **64,65,050** |
| 9 | புதிரைவண்ணார் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொரோனா நிவாரண நிதி | 1754 | 35,32,000 |
| | **மொத்தம்** | | **99,97,050** |

**இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்**

வீடற்ற ஆதிதிராவிடர் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் 1949 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட "ஆதிதிராவிடர் நலத் திட்டங் களுக்கான நில எடுப்புச் சட்டம் 31/1978" இன்படி நில எடுப்பு செய்யப்படுகிறது. இது தவிர தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவும் நில எடுப்பு செய்யப்படுகிறது. இதற்கென மாவட்ட ஆட்சியரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலன்) நில எடுப்பு அலுவலர் ஆவார்.

**பயனாளிகளின் ஆண்டு வருமானம்:**


கிராம மற்றும் நகர் புறங்களில் ரூ.72,000/- பயனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச வீட்டுமனை களின் பரப்பளவு

மாநகராட்சிப்பகுதி - 1 சென்ட்
நகராட்சிப்பகுதி - 11/2 சென்ட்
பிற பகுதிகள் - 3 சென்ட்

**-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு அரசு.**



# எமது வெளியீடு




இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு, அறியப்படாத பல வீரர்களால் நிகழ்த்தப்பட்ட, வீரம் செறிந்த ஒன்றாகும். விசுவாசம், துரோகம், கிளர்ச்சி, கொடூரமான அட்டூழியங்கள், அமைதியான போராட்டங்கள் ஆகியவற்றின் கதைகளால் இந்தக் காலகட்டம் நிரம்பியுள்ளது. இரண்டு குழந்தைகளுக்கும், அவர்களின் பழைய ஆசிரியருக்கும் இடையிலான உரையாடல் வடிவத்தில் ரூபா குப்தா எழுதியுள்ள இந்த ஆங்கிலப் புத்தகம், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நான்கு வெவ்வேறு கட்டங்களை விவரிக்கிறது. முக்கியமான நிகழ்வுகளை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவர முயற்சிக்கிறது.

நமது வரலாற்றின் மிகவும் கொந்தளிப்பான காலகட்டங்களான 1857ஆம் ஆண்டின் மாபெரும் கிளர்ச்சி, தேச பக்தியின் புதிய எழுச்சி, காங்கிரசின் பிறப்பு, போரட்டத்திற்குத் தலைமை வகித்த மகாத்மா காந்தியின் செல்வாக்கிற்கு முழுமையாக ஆட்பட்டிருந்த 1920-1947 வரையிலான சுதந்திரப் போராட்ட இறுதிக்கட்டம் ஆகியவை இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.



சத்தியாகிரகம், ஒத்துழையாமை ஆகிய போராட்டங்களுக்கான அழைப்பின் மூலம் காந்தியடிகள் போராட்டத்தை வழிநடத்தினார். சுதந்திரத்தை நமக்குப் பெற்றுத் தருவதற்காக நமது முன்னோர்கள் ஆற்றிய மகத்தான தியாகங்களை வாசகர்களுக்கு கொண்டுவந்து சேர்க்கிறது இந்தப் புத்தகம்.

**The Story of India's Struggle for Freedom** (ஆங்கிலம்)

**Author: Rupa Gupta**

விலை: ரூ. 135

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் பற்றிய கூடுதல் புத்தகங்களுக்குப் பார்வையிடவும்: www.publicationsdivision.nic.in

# தமிழகத்தில் சத்துணவுத் திட்டம்

– எஸ். ரேவதி

பசி,பட்டினியில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், உணவுப்பொருள்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைத்திட வேண்டும் என்பதிலும், எவருக்கும் உணவுப் பற்றாக்குறை வந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் சத்துணவுத் திட்டத்தினைச் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

சத்துணவுத்திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் அதனை, பள்ளிக் கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூகநலத்துறை ஆகிய துறைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகின்றன.

சத்துணவுத் திட்டமானது தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலம், சிறுபான்மையினர் மற்றும் தேசியக் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயல்படுத்தப்படுகிறது.

| வருடம் | சத்துணவுத்திட்டத்தின்வளர்ச்சிநிலை |
|---|---|
| 1925 | சென்னை மாநகராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது |
| 1962 | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது |
| 1982 | புரட்சித்தலைவர் எம்.ஜி,ஆர் சத்துணவுத்திட்டம் துவங்கப்பட்டது (கிராமபுறத்தில் உள்ள 210 வயது குழந்தைகளுக்கு) |
| 1984 | 610 ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது |
| 1989 | இருவாரங்களுக்கு ஒருமுறை முட்டை அறிமுகம் செய்யப்பட்டது |
| 1998 | 2 முதல் 14 வயதுவரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை அறிமுகம் செய்யப்பட்டது |
| 2004 | 2 முதல் 15 வயதுவரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது |
| 2006 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இரு முட்டைஅறிமுகம் செய்யப்பட்டது |
| 2007 | 2 முதல் 15 வயதுவரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டை அறிமுகம் செய்யப்பட்டது (மற்றும்) 1 மற்றும்2ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை அறிமுகப்படுத்தப்பட்டது |
| 2010 | 5 முதல் 15 வயதுவரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஐந்து முட்டைகள் அறிமுகம்செய்யப்பட்டது |
| 2014 | பல்வேறு வகையான கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகள் அறிமுகம் செய்யப்பட்டது. |



பள்ளிகளில் உள்ள பயணாளிகள் 2022 2023 ( சத்துணவு மையங்கள்)

| நிலை | சத்துணவு மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தொடக்கப்பள்ளி 1 முதல் 5ஆம் வகுப்பு வரை | 26,909 | 24,25,031 |
| உயர் தொடக்கப்பள்ளி 6 முதல் 8ஆம் வகுப்பு வரை | 16,117 | 15,51,225 |
| 9, 10ஆம்வகுப்புகள் | | 6,90,705 |
| தேசிய குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகள் | 164 | 3,497 |
| மொத்தம் | 43,190 | 46,70,458 |

### சத்துணவு மையப் பணியாளர்கள் நலன்

சத்துணவுப் பணியாளர்களை அவர்கள் பணியாற்றி வரும் உள்ளாட்சி அமைப்புகளின் பகுதி நேர நிரந்தரப் பணியாளர்களாக வகைப்படுத்தி ஆணை வழங்கப் பட்டுள்ளது அரசாணை (நிலை) எண்.370, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவு திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள்.16.04.1989

### சிறப்பு காலமுறை ஊதிய விகிதம்

(அரசாணை எண்.303, நிதித்துறை, நாள்.11.10.2017)

அமைப்பாளர் ரூ.770024200
சமையலர் ரூ.410012500
சமையல் உதவியாளர் ரூ.30009000

### குறைந்தபட்ச ஓய்வூதியம்

அரசாணை (நிலை) எண்.314, நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.25.10.2017ன்படி 01.10.2017 முதல் சத்துணவு பணியாளர் களுக்கு ரூ.2000/ வழங்கப்பட்டு வருகிறது.

### ஒட்டு மொத்தத் தொகை

அரசாணை (நிலை) எண்.314, நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.25.10.2017ன்படி 01.10.2017 முதல் முறையே அமைப்பாளர் களுக்கு ரூ.1.00 இலட்சம், சமையலர்/சமையல் உதவியாளர் களுக்கு ரூ.50,000/ ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.






**மதியஉணவுத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தேவையான ஊட்டச்சத்து கணக் கீட்டு அளவு முறைகள்**

| வகுப்பு | ஒரு நாளைக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு (கிராம்) | ஒன்றிய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | | ஒரு நாளைக்கான உணவூட்டுச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | |
| தொடக்கப் பள்ளி | 100 கிராம் அரிசி+ 15 கிராம் பருப்பு/1 முட்டை | 450 | 12 | 557.00 | 18.92 | 8.54 |
| உயர் தொடக்கப் பள்ளி | 150 கிராம் அரிசி + 15கிராம் பருப்பு/1 முட்டை | 700 | 20 | 735.00 | 22.77 | 8.65 |
| 9 மற்றும்10ஆம் வகுப்பு | 150 கிராம் அரிசி + 15கிராம் பருப்பு/1 முட்டை | --- | --- | 735.00 | 22.77 | 10.26 |



## சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு வகைகள்

**கலவை சாதம்**

ஒரு சிறப்பு ஊட்டச்சத்து அறிமுகமாக கலவைசாதத்துடன் 5 வகையான முட்டை மசாலா தற்போது வழங்கப்பட்டு வருகிறது

| நாட்கள் | | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் | |
|---|---|---|---|---|
| திங்கட் கிழமை |  | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை | சாம்பார் சாதம் + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |  |
| செவ்வாய் கிழமை |  | கருப்பு கொண்டைக் கடலை புலாவு + தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |  |
| புதன் கிழமை |  | தக்காளி சாதம் + மிளகு முட்டை | புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |  |
| வியாழக் கிழமை |  | சாதம், சாம்பார்+ வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் + பாசிப் பயறு சுண்டல் + தக்காளி முட்டை |  |
| வெள்ளிக் கிழமை |  | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |  |


**கூடுதல் ஊட்டச்சத்து வழங்குதல்**

| | வழங்கப்படும் உணவு | அளவு |
|---|---|---|
|  | கருப்பு கொண்டைக் கடலை / பச்சைப்பயறு | 20கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | உருளைக் கிழங்கு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | முட்டை | அக்மார்க் 'A' தரத்திலான 46 கிராம் முதல் 52 கிராம் வரை (அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் ) |
|  | வாழைப்பழம் | 100 கிராம் ( முட்டை உண்ணாதவர்களுக்கு) |



ஜூலை15 காமராஜர் பிறந்தநாள், செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள், ஜனவரி17 எம்.ஜி.ஆர். பிறந்த நாள் ஆகிய நாட்களில் இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது.






**இருமுறைசெறிவூட்டப்பட்ட உப்பு**

இருமுறை செறிவூட்டப்பட்ட அயோடின் மற்றும் இரும்புச் சத்துடன் கூடிய உப்பு சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.





**சத்துணவில் செறிவூட்டப்பட்ட எண்ணெய்**

இருமுறை செறிவூட்டப்பட்ட வைட்டமின் 'ஏ' மற்றும் 'டி'சத்து அடங்கிய எண்ணெய் தினமும் சத்துணவில் பயன்படுத்தப் படுகிறது.

**உணவூட்டுச் செலவினம்**

கலவை சாதம் சமைப்பதற்குத் தேவையான காய்கறி, தாளிதம், எரிபொருள் ஆகியவற்றிற்கான உணவூட்டுச் செலவினம் வழங்கப்படுகிறது.


**சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் (வைப் பறையுடன் கூடிய சமையலறைக் கட்டிடங்கள்**

மதிய உணவைச் சமைப் பதற்கும், உணவுப் பொருள்களைப் பாதுகாப்பாக சேமிப்பதற்கும் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 2021-22 ஆம் நிதியாண்டில் 1,291 வைப்பறையுடன் கூடிய சமையலறைக் கட்டிடங்கள் கட்ட ரூ.69 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பள்ளி சத்துணவு மையங்களுக்கு சுகாதாரப் பேழைகள் வழங்குதல்.**

பள்ளி சத்துணவு மையப் பயனாளிகளுக்கு சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட ஏதுவாக 2021-22ஆம் ஆண்டில் 25,000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ரூ.650/- வீதம் இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக்கவசம், ஒரு நகவெட்டி, 5 கை துடைக்கும் துண்டுகள் 6 கிருமிநாசினி சோப்புகள் ஆகியவை ரூ.1.62 கோடியில் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுபகரணங்கள் ஆண்டு தோறும் புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

| | பருப்பு பயன்படுத்தப்படும் நாட்களுக்கு | பருப்பு பயன்படுத்த படாத நாட்களுக்கு |
|---|---|---|
| தொடக்கப்பள்ளிப் பயனாளிகள் | ரூ.1.75 | ரூ.2.28 |
| உயர் தொடக்கப்பள்ளி / உயர் நிலைப்பள்ளிப் பயனாளிகள் | ரூ.1.89 | ரூ.2.42 |




**பள்ளி சத்துணவு மையங்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குதல்**

பள்ளி சத்துணவு மையக் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு முன்னோடித் திட்டமாக செறிவூட்டப்பட்ட அரிசி பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடுஅரசு, தருமபுரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, நீலகிரி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக 9 வகையிலான நுண்ணூட்ட சத்துக்களுடன் (வைட்டமின்A, வைட்டமின்B1, வைட்டமின்B2, வைட்டமின்B3, வைட்டமின்B6, வைட்டமின்B12 ,போலிக்அமிலம், இரும்புச்சத்து, துத்தநாகம்) கூடிய செறிவூட்டப்பட்ட அரிசி நவம்பர் 2019 முதல் பயன்படுத்தப்பட்டது. இதற்கென தமிழ்நாடு புதுமையான முன்முயற்சித் (TANII) திட்டத்தில் ரூ.529.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. (அரசாணை எண் (டி)240/சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந.41) துறை, நாள் 18.12.2018.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டின்படி மேலும் ஒரு முன்னோடித் திட்டமாக மூன்று ஊட்டச்சத்துகளால் (இரும்புச் சத்து, போலிக் அமிலம் மற்றும் உயிர்சத்து B12) செறிவூட்டப்பட்ட அரிசி 01.20.2020 முதல் திருச்சி மாவட்டத்திலும், அக்டோபர், 2021 முதல் அனைத்துப் பள்ளி சத்துணவு மையங்களுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விநியோகம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



**பள்ளி காய்கறித் தோட்டம் அமைத்தல்**

ஊட்டச்சத்துத் தோட்டம் அமைப்பதின் நோக்கம் மதிய உணவில் புதிய காய்கறிகள், கீரைகள் வழங்குவதன் மூலம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் நுண்ஊட்டச் சத்துக் குறைபாடு பிரச்சனையைத் தீர்க்க உதவும் .



**உடல்நிலை குறியீட்டு எண் கண்டறிதல்**

பள்ளிக் கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு செயலி (EMIS) மூலம் உடல் குறியீட்டு எண் கணக்கீடு செய்ய ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சர்வே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**பள்ளி சத்துணவுமையங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்**

குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் இணைப்பு வசதிகள் உள்ள 1000 சத்துணவு மையங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை மொத்தம் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்த ஒதுக்கீடு பெறப்பட்டு, குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் நிறுவ உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பள்ளி சத்துணவுமையங்களுக்குத் தரச்சான்று (ISO) வழங்கல்**

சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தரச்சான்று (ISO) பெறுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதுவரை 100 சத்துணவு மையங்கள் சர்வதேச தரநிர்ணய அமைப்பின் கீழ் சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது

உணவுப் பாதுகாப்பு மற்றும் இந்திய அதிகாரச் சட்டத்தின்கீழ், அனைத்து சத்துணவு மையங் களையும் (FSSAI) பதிவுசெய்து ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து வரும் ஒரே மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

மேலும் 200 பள்ளி சத்துணவு மையங்களில் சமூகத்தணிக்கை மேற்கொள்ள ரூ.50,40,000/ நிதிஒதுக்கீடு பெறப்பட்டு அதன்படி 200 பள்ளி சத்துணவு மையங்களில் சமூகத்தணிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி**

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் சத்துணவுத்திட்ட நேர்முக உதவியாளர்கள், சென்னைப் பெருநகர மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர், மாவட்ட அளவிலான உதவிக்கணக்கு அலுவலர் ஆகியோருக்கு உணவுப் பாதுகாப்பு ( FSSAI) அமைப்பு மூலம் ஒரு நாள் புத்தாகப் பயிற்சிஅளிக்கப்பட்டது.

அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலமாக சத்துணவு மைய அமைப்பாளர்களின் திறமையை மேம்படுத்தும் பொருட்டு வெவ்வேறு கட்டமாக சிறப்புப்பயிற்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளி சத்துணவுமையங்களுக்கு எடைக் கருவிகள் வழங்குதல்**

பள்ளி சத்துணவு மையங்களில் உணவுப் பொருட்களை துல்லியமாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக 4528 மையங்களுக்கு உணவுப்பொருட்களை அளப்பதற் கான எடைக்கருவிகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது.

**BIO METRIC பதிவு**

சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையின் உண்மை தன்மையை அறிய முன்னோடி முயற்சியாக ரூ. 4 இலட்சம் செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் இயங்கி வரும் 10 சத்துணவு மையங்களில் பயோமெட்ரிக் பதிவின்படி குழந்தை களின் வருகையைப் பதிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**தகவல் கல்வி மற்றும் தொடர்பு**

சமுதாய மக்களிடையே சத்துணவுத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், நடத்தையில் மன மாற்றத்தினை (BCC) ஏற்படுத்துவதிலும் தகவல்தொடர்பு முக்கியமாகத் திகழ்கிறது.

சுவரொட்டிகள், சத்துணவுப் பணியாளர்களுக்கு வழிகாட்டிக் கையேடு, மடிப்புத்தாள், காய்கறித் தோட்டம் குறித்த கையேடு, கவிதைத் தலைப்புகள் கொண்ட சுவரொட்டிகள் போன்ற அச்சிடப் பட்ட கல்வி உதவிச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டு களப்பணியாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**குறுஞ்செய்திச் சேவை (short Message Service) - IVRS**

சம்பந்தபட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மூலம் குறுஞ்செய்தி அறிக்கை பெறுவதற்கான முறை அறிமுகப் படுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர்




களுக்கும் 100 சதவீதம் SMS அனுப்புமாறு தலைமை ஆசிரியர் களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தினந்தோறும் இணையதள வாயிலாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் இந்த அறிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**- டாக்டர்.எஸ்.ரேவதி,** இணை இயக்குநர், சத்துணவுத் திட்டம், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை தமிழ்நாடு அரசு.

## வாசகர் கடிதம்

**விடுதலைப் போராட்டத் தியாகிகளின் தியாகங்கள் பற்றி அருமையாகத்தொகுத்துவெளியிட்டு வருகின்ற நற்பணிக்கு வாழ்த்துகள், பாராட்டுகள், ஏப்ரல் மாத இதழில் வரலாற்று ஆய்வாளர் தியோடார் பாஸ்கரன் தொகுத்து வழங்கிய இந்தியாவின் விடுதலையில் தமிழ் திரைப்படங்கள் ஆற்றிய பணிகள் குறித்த அருமையான கட்டுரை விரிவாகவும் அரிதான சிறப்பாகவும் படங்களுடன் வெளியாகி இருந்தது. இன்றைய இளைய தலைமுறையினர் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள்.**



தமிழ்நாட்டில் வெள்ளித்திரையும் விடுதலை போராட்டமும்
திட்டம், ஏப்ரல் - 2022
27

**- கடல் நாகராஜன், ஆல்பேட்டை, கடலூர்**

## எமது வெளியீடுகள்


**INDIA 2022**

**YEAR BOOK**




PRINTED VERSION Rs.330/-
E BOOK Rs.248/-

## ECONOMIC SURVEY 2021 – 2022 Two Volumes




Rs.495/-

**புத்தக வெளியீட்டுப் பிரிவு** (Publications Division) **வெளியிட்டுள்ள இந்த ஆங்கிலப் பதிப்புகள் தேவைப்படுவோர் அணுகுங்கள்:**

**தொலைபேசி எண்கள்:** 044 24465382, 044 24917673

**மின்னஞ்சல்:** bsmechennai@gmail.com <mailto:bsmechennai@gmail.com>**அமேசானிலும் கிடைக்கிறது.**




**2 ஆம் பக்கத் தொடர்ச்சி: மழைநீரைச் சேகரிப்போம்**




3. வீட்டில் சவ்வூடு பரவல் முறையில் குடிநீரை சுத்திகரித்து பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதற்கான எந்திரத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீரைச் சேமித்து, வீட்டைத் தூய்மை செய்தல், துணி துவைத்தல், கார் அல்லது பிற வாகனங்களைக் கழுவுதல் போன்ற இரண்டாம் நிலைப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
4. குளியல் அறையில் ஷவர் பாத் மூலம் குளிப்பதற்கு பதிலாக வாளியில் பிடித்து குளிப்பதன் மூலம் தண்ணீர் வீணாவதைக் குறைக்க முடியும்.
5. குளிக்கும் போது எஞ்சும் நீரை தாவரங்களுக்கு ஊற்றுவதற்கோ, துணி துவைக்கவோ பயன்படுத்தலாம்.
6. துணி துவைக்கப் பயன்படுத்தப்பட்ட தண்ணீரை கழிப்பறைகளைக் கழுவுவதற்கு பயன்படுத்தலாம்.

✓ இந்தியா அதன் சராசரி தண்ணீர் நுகர்வை விட, மூன்று மடங்கு அதிகமான மழையைப் பெறுகிறது. இதன் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய விசயம் என்னவென்றால், இந்தியாவின் தண்ணீர்த் தேவைக்கும், விநியோகத்திற்கும் இடையிலான பற்றாக்குறையைப் போக்குவதற்காக தண்ணீரைச் சேமிப்பதற்கு மிகச் சிறந்த வழிமுறை மழைநீர் சேமிப்பு என்பது தான்.

✓ இந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் நாட்டில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறை குறித்து, குறிப்பாக தாங்கள் வாழும் பகுதிகளில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறை குறித்து அறியாதவர்களாக இருக்கின்றனர். அதனால், அவர்களுக்கு இந்தச் செய்தி பொதுஅறிவாகக் கருதப்பட வேண்டும்.

✓ உணவுப்பாதுகாப்பைப் போலவே தண்ணீர்ப்பாதுகாப்பும் இந்திய அரசின் மிக முக்கியமான இலக்கு ஆகும். இது அரசின் பொறுப்பு மட்டும் அல்ல. இந்த இலக்கை எட்ட குடிமக்களின் செயல்பாடும் மிகவும் முக்கியமாகும்.

✓ மழை நீரை ஆங்காங்கே சேகரிப்பதால் ஏற்படும் பயன்கள் வருமாறு:

1. மேல் தளங்களில் பெய்யும் மழை வீணாவதைத் தடுக்கும் வகையில் குழாய்களின் ஓட்டையை வலைகள் மூலம் மூடுதல் போன்ற எளிமையான வடிகட்டுதல் முறையைப் பயன்படுத்தி, மாடியிலோ அல்லது பூமியிலோ அமைக்கப்படும் தண்ணீர்த் தொட்டிகளில் நீரைச் சேமிக்கலாம். இந்தத் தண்ணீரை சூடு செய்து சமையலுக்கோ, குடிநீராகவோ பயன்படுத்திக் கொள்ள முடியும். மற்ற விதமான இரண்டாம்நிலை பயன்பாடுகளுக்கு இந்த நீரை நேரடியாகவே பயன்படுத்திக் கொள்ள இயலும்.
2. பால்கனிகள் மற்றும் கொல்லைப் புறங்களில் மழை பெய்யும் போது, வாளிகள் அல்லது பிற பெரிய பாத்திரங்களை வைத்து மழைநீரைச் சேமிக்கலாம். அந்த நீரை மேற்கண்ட முறைப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும்.

– **ஆதாரம்: தேசிய நீர்வளத்திட்டம்**

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 7th May 2022
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023

# OUR JOURNALS

| சந்தா திட்டங்கள் | YOJANA (Development Monthly in English, Hindi, Urdu and 10 other Indian Languages), KURUKSHETRA (Monthly on Rural Development English and Hindi), AJKAL (Literary and Cultural Monthly in Hindi & Urdu), திட்டம் தமிழ் இதழ் இவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக சந்தா தொகை | | Bal Bhararti Children's Monthly (Hindi) | | Employment News English/ Hindi/ Urdu | |
|---|---|---|---|---|---|---|
| | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | சாதாரண அஞ்சல் | பதிவு அஞ்சல் | அச்சுப் பதிப்பு (சாதாரண அஞ்சல்) | மின் பதிப்பு |
| 6 மாதம் | -- | -- | -- | -- | ரூ. 265 | ரூ. 200 |
| 1 ஆண்டு | Rs.230 | ரூ. 434 | Rs.160 | ரூ. 364 | ரூ. 530 | ரூ. 400 |
| 2 ஆண்டுகள் | Rs.430 | ரூ. 838 | Rs.300 | ரூ. 708 | ரூ.1000 | ரூ. 750 |
| 3 ஆண்டுகள் | Rs.610 | ரூ.1222 | Rs.420 | ரூ.1032 | ரூ.1400 | ரூ.1050 |

நீங்கள் சந்தா செலுத்த விரும்பும் இதழின் பெயரையும், சந்தா செலுத்தும் கால அளவையும் குறிப்பிடவும்.

## SUBSCRIPTION COUPON (New Membership/Renewal/Change in Address)

Please send me ( Journal's Name & Language) for 1Yr/2Yrs/3Yrs

Name (in BLOCK LETTERS): ----------------------------------------------------------------------------------------

ADDRESS:----------------------------------------------------------------------------------------------------

PINCODE:---------------- MOBILE No.:------------------- Subscription Number (If already a Subscriber)

DEMAND DRAFT /POSTAL ORDER/MONEY ORDER No: ------------------------ DATE: ---------------

சந்தா கட்டணத்தை <https://bharatkosh.gov.in>/Product/Product என்ற முகவரியில் இணையதளம் வாயிலாக எளிதில் செலுத்தலாம். வரைவோலையாகச் (DEMAND DRAFT) செலுத்துவோர், ADDITIONAL DIRECTOR GENERAL, MINISTRY OF BROADCASTING, NEWDELHI - 110003 என்ற பெயரில் புதுதில்லியில் மாற்றத்தக்கதாக எடுத்து, EDITOR, JOURNALS UNIT, PUBLICATIONS DIVISION, ROOM No.779, 53 SOOCHNA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEWDELHI - 110003 என்ற முகவரிக்கு மேற்காணும் சந்தா கூப்பனுடன் அனுப்பி வைக்கவேண்டும்.

தொடர்புக்கு மின்னஞ்சல் முகவரி: pdjucir@gmail.com
தொலைபேசி எண்: 011-24367453

முதல் இதழ் சந்தாதாரருக்கு வந்து சேர 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். சந்தா புதுப்பிப்பு/முகவரி மாற்றம் ஆகியவற்றிற்கு உங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.